விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்துநான்கு


சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 30 சனிக்கிழமை (12.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 145

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சிங்கக் கொடி என் விருப்பத்திற்குரிய கொடி

# அதை இனியும் ஏற்றுவேன்-சம்பந்தன் சூளுரை

## கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்



(கொழும்பு)

சிங்க கொடியை முன்னரும் பல தடவை ஏற்றியிருக்கிறேன். அது எனது விருப்பத் துக்குரிய கொடி அதனை இனியும் ஏற்றுவேன்; அதனை யாரும் தடுக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலின் நிகழ்வில் கைக்குண்டு!


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை கலந்து கொள்ளும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்ட கட்டிடத் தொகுதியில் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தனது கட்சி பிரதிநிதிகளையும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் தனித் தனியாக சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்து (24ஆம் பக்கம் பார்க்க)

# இன அழிப்பை மேற்கொள்ளும் அரசுடன் பேச்சுவார்த்தை எப்படிச் சாத்தியமாகும்?

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ்



தமிழர் தாயக மண்ணில் சிங்களக் குடியேற்றங்களை அரங்கேற்றி பௌத்த விகாரைகளை அமைத்து திட்டமிட்ட அடிப்படையில் இனஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இலங்கை அரசு இன்னுமொரு யுத்தத்துக்கான தயாரிப்பு வேலைகளை முன்னெடுத்து வருகின்றது. தொடர்ச்சியாக தமிழர் விரோதச் செயற்பாடுகளை கட்டவிழ்த்துவிடும் இந்த அரசை நம்பி எப்படி நாம் பேச்சுக்களில் ஈடுபடமுடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

தமிழர்களுக்கு எதிரான அரசின் அடாவடிகள் இலங்கையை மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும் என்றும் கண்ணிவெடி என்ற பம்மாத்துக் கதையை இலங்கை அரசு (24ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு பங்கேற்காத தெரிவுக்குழுவில் பயனில்லை

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் வரவேண்டும் என மீண்டும் அழைப்பு விடுத்துள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு அங்கம் வகிக்காமல் அதனை இயக்குவதில் பிரயோசனமில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் முடிபடைந்து 3 வருடங்கள் தான் கடந்துள்ளன. அதற்குள் அனைத்தையும் எம்மால் செய்து முடிக்க முடியாது. படிப்படியாகத்தான் செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நாளை வேண்டுமானாலும் ஆரம்பிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைந்து தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும். தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகரிடம் கையளிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் தெரிவுக்குழுவை இயக்குவதில் பயனில்லை. அவர்கள் இதில் விரைவில் பங்குபற்ற வேண்டும்.

நாடாளுமன்றத் (24ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண சபைத் தேர்தல்

# அரசின் கண்ணிவெடி நாடகத்திற்கு ஒஸ்கார் விருதே வழங்கலாம்-மனோ

கண்ணிவெடிகள் அகற்றப்படாததால் தான் இதுவரை வடக்கில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படவில்லை என்று அரசாங்கம் வெட்கமில்லாமல் பொய் சொல்கின்றது. கண்ணி வெடி காரணமாகத்தான் தேர்தல் நடத்தாமல் இருக்கின்றோம் என்று உலகத்தை நம்ப வைக்கும் அரசாங்கம் நடத்தும் நல்ல நகைச் சுவை நாடகம் இதுவாகும்.

இந்த நாடகத்துக்கு திரைக்கதை, வசனம் எழுதியவருக்கு ஒஸ்கார் விருதையே வழங்கலாம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நிர்வாகத்தின் கீழ் எந்தவொரு புதிய சபையும் வந்துவிடக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் இனவாதக் கொள்கையாகும். இந்த நோக்கிலேயே அரசாங்கம் காய் நகர்த்துகின்றது. இது வடக்கில் மாத்திரம் அல்ல. மலையகத்திலும் நடைபெறுகின்றது.

வடக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகள் அனைத்தும் முற்றாக அகற்றப்பட்டு சிவில் நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டதன் பின்னரே வட மாகாண தேர்தல் நடத்தப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்புத் தொடர்பில் கருத்து தெரிவித்த மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தேர்தல்கள் நான்கு மட்டங்களில் நடைபெறுகின்றன. ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்பனவையே அவையாகும்.

யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகளில், வடக்கில் முதல் இரண்டு தேர்தல்களும் நடந்து முடிந்து விட்டன. கடந்த வருடம் நான்காவது மட்ட உள்ளூராட்சித் (23ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசியலின் கடந்தகால வரலாறு தெரியாமல் ஈழத் தமிழர்களை அவமானப்படுத்த வேண்டாம்

## சுஷ்மாவுக்கு பழ.நெடுமாறன் கண்டனம்





தமிழக அரசியல் கட்சிகள் தான் இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சிப்பதாக பா.ஜ.க. மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியிருப்பது ஈழத் தமிழர்களை அவமானப்படுத்துவதாகும் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கண்டம் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற பாரதிய ஜனதர கட்சியின் மாநாட்டில் பேசிய சுஷ்மா சுவராஜ், இலங்கைத் தமிழர்கள் தனி ஈழத்தை விரும்பவில்லை. தமிழக அரசியல் கட்சிகள் அங்கு பிரிவினையை ஏற்படுத்துகின்றன என்று கூறியிருந்தார்.

இதற்கு கண்டனம் தெரிவித்து பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட இலங்கையை (24ஆம் பக்கம் பார்க்க)

## அரச மருத்துவர்களின் பகிஷ்கரிப்பு முடிவு

தமக்கான போக்குவரத்துப் படியை அதிகரிக்கக் கோரி அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மேற்கொண்டு வந்த பணிப் பகிஷ்கரிப்பு நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலையடுத்து இப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளது. (ந-8,1)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உ.தொ.நிறுவனத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் (HNDA) மற்றும் உயர் தேசிய கணக்கியல் வர்த்தக டிப்ளோமா (HNDA) கற்கை நெறியினை 2005 ஆம் ஆண்டிற்கு பின் பூர்த்தி செய்தவர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 2மணிக்கு பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

கற்கை நெறியினை பூர்த்தி செய்து பட்டம் பெற்ற சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பழைய மாணவர் சங்க தலைவர் செ.செல்வரதன் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-8,11)

# ஜேர்மன் ஆவண திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் கோத்தே கலாசார நிறுவனமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையமும் இணைந்து நடத்தும் ஜேர்மன் ஆவணத் திரைப்பட விழா இன்று சனிக்கிழமை காலை, மதியம் என இரு அமர்வுகளாக ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காலை அமர்வு முற்பகல் 9 மணிக்கும், மதிய அமர்வுபிற்பகல் 2மணிக்கும் ஆரம்பமாகும் என யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள்மற்றும்பயிற்சிநிலையபணிப்பாளர்தே.தேவானந் அறிவித்துள்ளார். (ந-9)

# வண்ணை வெங்கடேசனுக்கு இன்று சுதர்சன ஹோமம்

வண்ணைஸ்ரீவெங்கடேசவரதராசப்பெருமாள் தேவஸ்தானத்தில் சுதர்சன ஹோமம் இன்று சனிக்கிழமைகாலை7மணிக்குநடைபெறவுள்ளது.

மேலும் நண்பகல் 12 மணிக்கு ஸ்ரீசுதர்சன சக்கரப் பெருமாளுக்கு விசேட உற்சவமும் நடைபெறவுள்ளதாக மேற்படி ஆலய பொருளாளர் அறிவித்துள்ளார். (ந-9)

# மக்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏழு குடும்பங்களுக்கு மேல் வசிக்கும் ஒழுங்கைகளை பதிவு செய்யுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அறிவித்துள்ளார்.

அவ்வாறு பொதுமக்கள் முன்வந்து பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் குறித்த ஒழுங்கைகளை புனரமைப்பு செய்வற்கு உதவியாகவிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-6)

# சந்தேக நபருக்கு விளக்க மறியல் நீடிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி வதிரிச்சந்தி முருகன் ஆலய முன்றலில் கடந்த 24 ஆம் திகதி இனந் தெரியாத இரு நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சிவஞானம் சிவரூபன் (வயது 28) என்ற இளைஞரின் கொலைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவருடைய மைத்துனரை தொடர்ந்தும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, குறித்த சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ந-3,24)

# வர்த்தகர் ராஜ் ராஜரட்ணத்துடன் ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு தொடர்பு!

(கொழும்பு)

அமெரிக்க நீதிமன்றத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கோடிஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட சில மில்லியன் டொலர்களை அந்நிய செலாவணி சட்டத்தை மீறி இலங்கையில் உள்ள வங்கி ஒன்றில் வைப்பிலிட உதவியதாக 10 குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளரவி கருணாநாயக்க உள்ளிட்ட மூவரும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.

ராஜ் ராஜரட்ணம் அனுப்பிய இரண்டு இலட்சம் மில்லியன் டொலர்கள் மற்றும் நிறுவனம் ஒன்று அனுப்பிய ஒரு மில்லியன் டொலர்கள் என்பவற்றை மத்திய வங்கியின் அனுமதியின்றி, ஸ்ரான்டர்ட் சார்ட்டட் வங்கியில் வைப்பலிட்டதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணி சட்டத்தை மீறியுள்ளதாகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. (ந-7)

# மூன்று வருடத்தில் இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற 36000 பேர் கைது

கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற சுமார் 36 ஆயிரம் பேர் வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் ஆயிரத்தில் ஒருவர் மாத்திரமே குற்றச் செயலுடன் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் செல்லும் உறுப்பினர்களை கைது செய்ய வேண்டியது இராணுவ நிர்வாக கட்டமைப்பின் முக்கிய தேவையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற உறுப்பினர்கள் என்ற வகையில் ஒரு தரப்பினர் ஒதுக்கப்படுவதன் காரணமாக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதனைத் தவிர்க்கும் வகையிலேயே தப்பிச் சென்ற இராணுவ வீரர்கள் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் குற்றச் செயலில் ஈடுபடுகின்றார்கள் என்ற காரணத்திற்காக மாத்திரம் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் தப்பிச் சென்றவர்களில் மிகவும் குறைந்தளவிலானவர்கள் மாத்திரமே சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்பேது கைது செய்யப்பட்டுள்ள இராணுவ வீரர்களில் ஒரு பிரிவினரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வும் மேலும் சிலரை சேவையிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பிரிகேடியர் ருவன் வனிகசூரிய மேலும் கூறியுள்ளார். (ந-8,11)


## தவறிவிட்டது

இல.115, இராச வீதி, கோப்பாயில் வசிக்கும் திருமதி சிவநேசன் சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.467972197V) யாழ்ப்பாணம் HNB வங்கிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0775158052 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
(8435)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### குருநகர் சந்தைக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2012

மாநகர சபைக்கு சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் : ரூபா 500.00 (வற் வரி நீங்கலாக)
கேள்விப் பிணைப் பணம் : ரூபா 3000.00
கேள்விப் படிவம் விநியோகித்தல் :14.05.2012 -31.05.2012 மு.ப.10.00 மணிவரை
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் : 31.05.2012 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் : 31.05.2012 பி.ப. 2.30 மணிக்கு

| கடைகள் விபரம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை (குலா ஒரு கடைக்கு) |
|---|---|
| குருநகர் சந்தைக்கடைகள் (மேல்தளம்)(28) | |
| 25 தொடக்கம் 27 வரை 03 கடைகள் | 22,000.00 |
| 39 தொடக்கம் 40 வரை 02 கடைகள் | 22,000.00 |
| 55 தொடக்கம் 60 வரை 06 கடைகள் | 22,000.00 |
| 65 தொடக்கம் 70 வரை 06 கடைகள் | 22,000.00 |
| 72 தொடக்கம் 82 வரை 11 கடைகள் | 22,000.00 |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா
மாநகர முதல்வர்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.
(சி-6586)

## மாடிவீடு வாடகைக்கு

இல.767/2, கடற்கரை வீதி (Beach Road) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு.

கீழ்தளம்3பெரியஅறைகள்,பெரியஹோல் (Hall) மேல் தளம் 2 பெரிய அறைகள், டபுள் ஹோல் அத்துடன் வாகன தரிப்புடன் கூடிய சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

வீடு ஹோலிகுறஸ் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. கொழும்பிலுள்ள ஸ்தாபனங்களின் உத்தியோகத்தர்கள் தங்குவதற்கோ அல்லது காரியாலயமாக பாவிப்பதற்கோ, களஞ்சியசாலையாக பயன் படுத்துவதற்கோ உகந்தது.

முற்பணம் தேவையில்லை. வாடகை பேசித்தீர்த்துக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இல:- 021-2227893
(8437)

## Study in INDIA

### VISVODAYA Engineering College

Courses Offered:

ECE - Electronics & Communication Eng.
CSE - Computer Science Eng.
IT - Information Technology
EEE - Electrical & Electronics Eng.
ME - Mechanical Engineering
CIVIL - Civil Engineering



Qualification A / L-Maths 3 Passes

NO DONATION

FEES PAYMENT DIRECTLY TO THE COLLEGE AFTER THE SELECTION

- Four years Studies
- Three times food and accommodation
- Air -condition Hostel and transport from Hostel to College.
- (Separate hostels for boys and girls)

Forward Your CV at:chec.usr@gmail.com
Formalities befor June end 2012

Contact No : 0779265447
(C-6582)

## உடனடி வேலை வாய்ப்பு

வீடியோ எடிட்டிங், கிரபிக் வடிவமைப்பு துறையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:
0750424360
(8439)

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499
(8440)




## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

ஏழு நாட்களும் மு.ப/ பி.ப வகுப்புகள் உண்டு

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்
(8284)

# இன்று ஒரு தகவல்

## தவறு செய்யுங்கள்

ஒரு பூங்கா. அங்கே ஒருவர் நின்று கொண்டிருந்தார். நின்றபடியே ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தார்.

அந்தப் பக்கமாக இன்னொருவர் வந்தார். இவரைக் கவனித்தார்.

"என்ன யோசனை?" என்று கேட்டார்.

"எப்படி எழுந்திருக்க வேண்டுமென்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன்" என்றார்.

கேட்டவருக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. ஏற்கனவே நின்றுகொண்டிருக்கிற ஒருவர் எப்படி எழுந்து நிற்பது என்று யோசிக்கிறார் என்றால்...?

கீழே விழுந்தால்தானே எழுந்து நிற்க முடியும். எனவே, எழ வேண்டும் என்று நினைக்கிறவர்கள் விழவேண்டும்.

இவர் முதலில் கீழே விழ வேண்டும். அதன்பின்பு எழுவது எப்படி என்று சிந்திக்கமுடியும்.

இவ்வுலகில் உள்ளவர்கள் எல்லோருமே கீழே விழுந்து எழுந்தவர்கள்தான்.

குழந்தைப் பருவத்திலே கீழே விழாமல் நடை பயிலக் கற்றுக் கொண்டவர்கள் யாராவது உண்டா?

மனிதன் விழுந்து புரண்டு எழுந்துதான் நடக்கக் கற்றுக் கொள்கிறான்.

ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் தவறு செய்யாத மனிதர்களே யாரும் கிடையாது.

அப்படியிருக்கும்போது எப்போதாவது நாம் தவறு செய்து விட்டால் அதற்காக மனம் உடைந்து போகலாமா?

ஒரு தவறு நடந்துவிட்டதா? அதற்காக மனம் உடைந்து போகாதீர்கள். அதை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

அதே தவறு மறுபடியும் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள் அதுபோதும். தடைக்கல்லை படிக்கல்லாக மாற்றிக் கொள்ளுங்கள்.

ஓர் அலுவலகத்தில் உயர்ந்த பதவியில் அதிகாரி ஒருவர் இருந்தார். சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கியவர் அவர்.

அவர் தனது பணியாளர்களிடம் "இந்த நிறுவனத்திலே நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் தவறு செய்யலாம். ஆனால், ஒரு தவறை மறுபடியும் செய்வது மகா தவறு. அதை கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

அலுவலகம் வருகிறர்களைக் கவனியுங்கள். ஒரு நாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை. தினந்தோறும் தாமதமாகவே வருவார்கள்.

இதுமாதிரி செய்த தவறையே திரும்பத் திரும்ப செய்வதற்கு என்ன காரணம்?

சோம்பல், ஞாபகமறதி, கவனக்குறைவு, தனது திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை. இப்படியாக இவற்றில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒரு தடவை செய்த தவறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிபு செய்துகொண்டு அதை செயற்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். வாழ்க்கை வெற்றிகரமாக அமையும் என்று அனுபவசாலிகள் கூறுகிறார்கள்.

எனவே, வெற்றிகரமாக வாழ்க்கையில் நடைபோட விரும்பும் இளைஞர்கள் தவிர்க்க வேண்டியவை, முதலில் சோம்பலை விலக்குங்கள், சுறுசுறுப்பாக இருங்கள்.

இரண்டாவது...ஞாபகமறதி. எந்தச் செயலிலும் ஈடுபாடு வேண்டும். அக்கறை வேண்டும்.

மூன்றாவதாக...கவனக்குறைவு, எதையும் அலட்சியப்படுத்தக்கூடாது. நான்காவது... என்னால் முடியாதது எதுவும் கிடையாது.

அளவுக்கு மீறிய நம்பிக்கை ஆபத்தில் கொண்டுபோய் விடக்கூடும்.

எனவே, இளைஞர்களே! முதல்தவறு உங்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கற்கைநெறிக்கு விண்ணம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினரால் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பாடசாலை கல்வியில் உயர்தரக் கல்வியினைத் தொடர முடியாத மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய முச்சக்கரவண்டி திருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வெளி இணைப்பு இயந்திரம் திருத்துநர் (O.B.M) ஆகிய பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சிநெறியினை தொடரும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சியின் நிறைவில் தகவல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் (NCICT) வழங்கப்படவுள்ளது.

எனவே, பயிற்சியைத் தொடர விரும்புபவர்கள் தங்களது சுயவிபரக் கோவையினை பூர்த்தி செய்து எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் இல. 375, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இந் நிலையப் பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் அறிவித்துள்ளார்.(அ-2)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டி -டிப்பர் வாகன விபத்தில் படுகாயமடைந்த முதியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 3.30 மணியளவில் கேணியடி கொக்குவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் சுதுமலை தெற்கு மானிப்பாயினைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையாரான வி.அம்சமாலனமூர்த்தி (வயது 49) எனும் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் தனது மகனை தனியார் கல்வி நிலையத்தில் இறக்கிவிட்டு பயணித்துக் கொண்டிருந்த போது டிப்பர் வாகனம் இவரை மோதிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த குடும்பஸ்தரை மோதிக் காயப்படுத்திய டிப்பர் வாகன சாரதி தலைமறைவாகியுள்ளதோடு யாழ்.பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2-4)

# தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, வர்த் தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளை யாட்டுச் சங்கம் நடத்தும் 15 ஆவது ஆண்டு மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை மின்னொளியில் நடைபெற்று வருவதாக செயலாளர் க.ஜினதாஸ் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் வராகி விளையாட்டுக் கழகமும் இரவு 7 மணிக்கு கைதடி சரஸ்வதி விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி விளையாடவுள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 200 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 40 | 50 | 60 |
| தக்காளி | 120 | 160 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 10 | 30 |
| கோவா | 50 | 30 | 30 | 40 |
| கரட் | 40 | 60 | 50 | 60 |
| பூசணி | 25 | 20 | 25 | 30 |
| புடோல் | 40 | 40 | 45 | 60 |
| வாழைக்காய் | 15-20 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-70 | 40-70 | 70 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 75 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 55 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 60 | 70 |
| பயற்றங்காய் | 60 | 80 | 70 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 | 90 | 140 |
| பீற்றூட் | -- | 60 | -- | 80 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 140-170 | 180 | 200 | 200 |
| போஞ்சி | 40 | 140 | -- | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 70-100 | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 | 25 | 15-18 |

# இராசி பலன்

*12.05.2012*
*(சித்திரை 30, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*சப்தமி முன்னிரவு 9.05 மணிவரை*
*திருவோணம் முன்னிரவு 11.12 மணிவரை*
*இராகுகாலம் 8.54-10.24 மணிவரை*
*சுபநேரம் 2.54-4.24 மணிவரை*

**மேடம்** ஒளிமயமான எதிர்காலத்திற்கு அத்திவாரம் அமைத்துக் கொள்வீர்கள், தொழில் ரீதியாக புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரும் நாள், நட்பு வட்டம் விரிவடையும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பேச்சில் நிதானம் தேவை, பயணங்களால் விழிப்புணர்ச்சி அவசியம், மனதில் இனம்புரியாத மனக் குழப்பம் ஏற்படலாம்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**சிங்கம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், கடன்களை அடைக்க புதிய உத்தியைக் கையாள்வீர்கள், கனிவரன தகவல்கள் வந்து சேரலாம், உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**கன்னி** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளின் நலன்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய்வழி ஆதரவு பெருகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வீடு தேடி வரலாம்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரல்ாம்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்,அரசியல் செல்வாக்கு மேலோங்கும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** உடல் நலம் சீராகும்,பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் மேலோங்கும், சயன சுகமுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்,கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** சுப செல்வுகள் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய சம்பவமொன்று நடைபெறலாம், பயணங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மீனம்** கூட்டு முயற்சிகள் வெற்றி தரலாம், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், உறவினர் வருகையால் குதூகலம் கூடும்,போசன சுகமுண்டு, நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்



# உயிர் மீண்ட காளை மாடு

5

சீர்காழிப்பதியில் திருமஞ்சக்குளத்தருகில் தனித்திருந்த மூன்றே வயதான திருஞான சம்பந்தக்குழந்தை அம்மையே அப்பா என்று அழுதபோது சிவனோடு அருகிருந்த நந்திக்கும் அதன் அழுகுரல் கேட்டதன் காரணமாகவே ஞானப்பால் கொடுக்கும் நிகழ்வில் நந்தியும் கலந்து கொண்டதெனலாம்.

ஆக 'அம்மா' என்று அழைக்கவும் மறுபக்கத்தில் 'அம்மா' என்று அழைப்பதையும் புரிந்து கொள்ளக்கூடியது மாடு என்பதை இதன் முன்னைய தொடரில் இருந்து கண்டோம். இத்தனை சிறப்பு மிக்க மாட்டிற்குத் தொட்டியில் தண்ணீர் இறைத்து அதன் தாகம் தீர்க்க வசதி செய்து கொடுத்த நம் முன்னோர்கள் தண்ணீர் குடித்தபின் மாடுகள் தங்கள் உடம்பை உரஞ்சிக்கொள்வதற்காக தண்ணீர்த் தொட்டிக்கு அருகில் ஆவுரஞ்சிக்கல்லையும் வைத்திருந்தனர்.

மாடு தாகம் தீர்ப்பதற்காக வீட்டிற்கு வெளியில் தொட்டிகட்டி கிணற்றில் இருந்து நீரை இறைத்து தொட்டியை நிறைத்து வீதியில் செல்லும் பசுக்களும் காளைகளும் தங்கள் தாகத்தை தீர்க்க ஏற்பாடு செய்தமை ஜீவகாருண்யம் சார்ந்தது என்று .கருதினால், தண்ணீர் அருந்திய மாடுகள் தங்கள் உடலை உரஞ்சிக்கொள்வதற்காக ஆவுரஞ்சிக்கல்லை வைத்தமை எதற்கானது என்று கேட்பது நியாயமானது.

இங்குதான் தமிழ்மக்கள் மாட்டை தங்கள் நடமாடும் தெய்வமாகக் கருதி அதற்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்தனர் என்பதை உணர முடியும்.

இவ்வாறாக ஒரு காலத்தில் தொட்டி கட்டி அதன் அருகில் ஆவுரஞ்சிக்கல்லு வைத்து பசுக்களையும் எருதுகளையும் பராமரித்த யாழ்ப்பாண மண்ணில் இப்போது மாட்டிறைச்சிக் கடைகளுக்குப் பஞ்சமே இல்லை.



ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தில் தொட்டியும் ஆவுரஞ்சிக் கல்லும்

உள்ளூராட்சி அமைப்புகளான மாநகர, நகர,பட்டின,பிரதேச சபைகள் தங்கள் எல்லைகளுக்குள் மாட்டிறைச்சிக்கடைகள் அமைப்பதற்கு அனுமதி கொடுத்ததன் காரணமாக சிவபூமி என்ற யாழ்ப்பாணம், சிவசின்னமாக-சிவனாக வழிபடப்பெற்ற மாட்டைக்கொல்லும் பூமியாக மாறியது.

கொல்களத்தில் மாட்டை விழுத்தி அதன் கழுத்தில் கத்திவைக்கப்படுகின்றது.'அம்மா' என்று அந்த மாடு கதறுகின்றது. என்செய்வது, யாழ்ப்பாணத்து சைவசமயத்தில் எதனையும் பேணுதல், கடைப்பிடித்தல், சட்டப்படி அமுல்படுத்தல் என்ற பேச்சிற்கே இடமில்லை.

கோயில் கட்டிக் கும்பாபிசேகம் செய்வது முதல் தம்மை வருத்தி வந்தனை செய்வதைத் தவிர சைவ சமயத்துக்கு விரோதமான செயல்களைத் தடுத்து நிறுத்துவது விரதம் என்பதை நாம் புரிந்து கொள்ளாதவர்களாகி விட்டோம்.

### யாழ் பல்கலைக்கழக இலச்சினையில் நந்தி

யாழ்.மண்ணில் நந்திக்கும் தமிழர் வாழ்வுக்கும் இருக்கக் கூடிய தொடர்பை எடுத்தியம்ப யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இலச்சினையை ஒருமுறை உற்று நோக்குதல் பொருத்துடையதாகும். 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற மகுடவாசகத்தோடு நந்தியின் உருவமும் குத்துவிளக்கும் அதனைச்சுற்றி ஆயகலைகள் அறுபத்து நான்கையும் சுட்டி நிற்கும் 64 இதழ்களையும் கொண்டதாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இலச்சினை அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது இலங்கைத் தமிழ்மக்களின் உயர் கலாபீடமாகும்.




## யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் வீற்றிருக்கும் நந்தி

தமிழ் இனத்திற்கான பல்கலைக்கழகமாக விளங்கும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் நந்தி பொறிக்கப்பட்டிருப்பதில் இருந்து தமிழ் ஆட்சியில், தமிழ்ப் பாரம்பரியத்தில், தமிழர் வரலாற்றில் நந்திக்கு இருக்கக்கூடிய பெருமைமிக்க முக்கியத்துவம் உணர்தற்குரியது. இதுதவிர யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலின் இருமருங்கிலும் நந்தி விக்கிரகங்கள் வீற்றிருப்பது உஷ்! இது தமிழர்களின் கல்விக்களஞ்சியம். கூடவே பார்வதி பரமேஸ்வரன்உறையும் திருமண். சேர் பொன் இராமநாதன் அவர்கள் சைவமும் தமிழும் வளர்க்க நல்கிய பொக்கிசம் என்பதையெல்லாம் உணர்த்துவதற்காக வெனக் கருதிக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் இலச்சினைக்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கும் அதேவேளை நந்தியை இலச்சினை ஆக்கியமைக்கு இன்னுமொரு பொருளுண்டெனக்கருதுவதும் தவறில்லை.

'தமிழர் பாரம்பரியத்தில் நந்தியின் காதில் கூறுதல்' என்ற ஒரு மரபு உண்டு. அதாவது எங்கள் தேவைகளை நந்தியின் காதில் கூறுவதன் மூலம் அத்தேவைகள் நிறைவடையும் என்ற நம்பிக்கை நீண்ட காலமாகவே நம்மிடத்தில் உள்ளது.

அறிவையும் மெய்ஞ்ஞானத்தையும் தரவல்லது நந்திஎன்ற அடிப்படையில் ஆலயங்களில் இருக்கக்கூடிய நந்தியின் காதில் தமக்கு வேண்டுவனவற்றை கூறுவதாக இவ்விடயம் அமைகின்றது.

தமிழகத்தில் இருக்கக்கூடிய கபாலீஸ்வரர் கோயிலில் ஒரு சிறிய நந்தி. அங்குவருகின்றவர்கள் அந்த நந்தியிடம் தங்களுக்கு வேண்டிய ஞானத்தை தருமாறு அதன் காதில் இரகசியமாக கூறிக்கொள்கின்ற முறைமை இப்போதும் உண்டு.

பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்திலும் இந்த நடைமுறை இருப்பதை நாம் அறியமுடியும். இவ்வாறு நந்தியின் காதில் கூறி ஞானம் பெறுகின்ற சைவத்தமிழர் மரபோடு தொடர்புபட்டதாகவும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் நந்தி காட்டப்பட்டிருக்கலாம் என்று கருதுவதிலும் நியாயப்பாடுகள் உண்டு.

(திங்கள் வளரும்)

வாசகர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

**விதுரன்**

# 14ஆயிரத்து 257 பெண்கள் மீது பாலியல் வன்புணர்வு சம்பவம்

## 27ஆயிரத்து 3 சிறுவர் துஷ்பிரயோகங்கள் என்கிறார் ஹிஸ்புல்லா

(கொழும்பு)

கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 14 ஆயிரத்து 257 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் 2000 முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் 27 ஆயிரத்து 3 சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்திருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தின அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுத்தல் ஆகியன அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறுவர்களின் பாதுகாப்பற்ற நிலைமை, பெற்றோரின் கவனக்குறைவு போன்ற பொருளாதார பலவீன நிலைமை, சிறுவர்களின் அறிவீனம், பெற்றோரின் விவாகரத்து நடவடிக்கைகள், உழைப்பில் ஈடுபடுத்தல், தாய் வெளிநாடு செல்லல், பெற்றோர் கல்வியறிவின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அதேபோன்று கல்வி மட்டம் குறைதல், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இணையத்தளங்கள், மதுபானம், போதைவஸ்து உபயோகம், தனிமைப்படுத்தப்பட்டிருத்தல், சிறிய சூழலில் அநேகர் இணைந்து வாழ்தல், பாலியல் ஊக்குவிக்கும் வகையில் நவீன சமூகத்தில் பலதரப்பட்ட விடயங்களை உருவாக்கியிருத்தல், பெற்றோர் அதிக நேரத்தை தொழிலுக்காக செலவிடுதல் உள்ளிட்ட காரணங்களினாலேயே பெண்களும் சிறுமிகளும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்ற நிலைமை உருவாகின்றது.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுத்தல், குற்றவாளிகளை நீதிமன்றில் ஆஜர்படுத்தி தண்டனையைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன என ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். (அ-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் விற்ற குற்றச்சாட்டிலும் கைதான நபருக்கு யாழ். நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

குருநகர் பகுதியினைச் சேர்ந்த குறித்த நபர் தனது வீட்டில் அனுமதிப்பத்திரமின்றி சாராயத்தினை பதுக்கி வைத்தார் என்றும் ஏனையவர்களுக்கு விற்பனை செய்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டு யாழ். மதுவரித்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபருக்கு 6 ஆயிரம் அபராதமாக விதித்தார். (அ-4)

## சைவ அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு கூட்டம்

சைவ மக்களுடைய வழிபாட்டு உன்னதங்களையும் ஜீவகாருண்ய கோட்பாட்டையும் சமய நெறிமுறைகளையும் சமூகத்தின் சகல மட்டங்களுக்கும் எடுத்துச் செல்வதற்கும் அமைப்பு ரீதியான ஒருங்கிணைந்த செயற்பாடுகளை சைவத் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் மேற்கொள்வதற்குமான சைவ அமைப்புகளிடையேயான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள சிவபூமி மடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சைவ சமயம் சார்ந்த ஆலய பரிபாலன சபைகள், தொண்டர் சபைகள், சைவ நற்பணி மன்றங்கள், இந்து வாலிபர் சங்கங்கள் , சைவ மங்கையர் கழகங்கள், சைவ சிறார் இல்லங்கள், சைவ அறக்கட்டளைகள் , அறநெறிப் பாடசாலைச் சமூகங்கள், இந்துக் கல்லூரிகள் சார்ந்த பாடசாலை சமூகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டு சமயத்தின் உண்மையான நெறியை இளைய தலைமுறையினரிடையே முன்னெடுப்பதற்கும் ஆன்மீக சிந்தனைகளை சிறார்களிடையே விதைக்கும் வகையில் அறநெறிப் பாடசாலைகளை வலுவூட்டுவதற்கும் அன்பே சிவம் என்கின்ற உயரிய ஜீவகாருண்ய கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

## புலிகளின் பிஸ்டல் குழு உறுப்பினர் கைது

### பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழு மற்றும் புலனாய்வு பிரிவில் முன்னாள் மேஜர் ஒருவர் வவுனியா பொலிஸ் ரோந்து பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். ஜீவன் என அழைக்கப்படும் 28 வயதான சுப்பையா கிருஷ்ணகுமார் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எதிரில் சந்தேகத்திற்கு இடமாக நடந்து கொண்ட இந்த நபரை கைது செய்து விசாரணை நடத்திய போது அவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

தான் புலிகளின் பிஸ்டல் குழுவில் இருந்த போது மூன்று இராணுவத்தினரையும் மூன்று பொலிஸாரையும் சுட்டுக் கொன்றுள்ளதாகவும் தனது உத்தரவின் பேரில் நந்திக் கடல் பகுதியில் பெரும் தொகையான ஆயுதங்கள் புதைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் குறித்து வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ-7)

## எரிகாயங்களுக்குள்ளானவர் மரணம்

கழிவுப் பொருட்களினை குப்பையோடு சேர்த்து எரித்த போது அதற்குள் காணப்பட்ட பெயின்ட் ரின் வெடித்ததில் எரிகாயங்களுக்கு உள்ளனவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இத் தீ விபத்துச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி தெற்கு, மானிப்பாயில் இடம் பெற்றுள்ளது.இச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ஏ.அன்ரனி குரூஸ் (வயது-68) என்பவரே உயிரிழந்துள்ளார்.

எரிந்த குப்பைக்குள் இருந்து பெயின்ரின் சத்தத்துடன் வெடித்த போது அருகில் நின்ற குறித்த நபர் மீதும் பரவியதில் தீக் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



பிரேத பரிசோதனையின் போது வெடித்ததாக கூறப்பட்ட பொருள் வாகனங்களுக்கு பூசப்படும் பெயின்ட் என தெரியவந்துள்ளது. எனவே குப்பைகளினை எரியூட்டுவதற்கு முன்னர் ஆராய்ந்து பார்த்து எரிப்பதன் மூலம் இவ்வாறான சம்பவங்களை தவிர்த்துக் கொள்ள முடியும். (அ-4)

## 13 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் 13 ஆவது பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் டாக்டர் எஸ். செல்வமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட செயலாளர் ஜே.ஏ. சரத் ரவீந்திரா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். இதில் சுதேச மருத்துவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, செயற்றிட்டம் பற்றிய விளக்கமும் ஆய்வும் அங்கத்தவர்களின் கருத்துப்பரிமாறல், புதிய நிர்வாக சபைத் தெரிவு என்பன நடைபெறவுள்ளதாக மன்னார் மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் செயலாளர் டாக்டர் எல். பத்திமன் அறிவித்துள்ளார். (அ-9)

சர்வதேச தாதியர் வாரமும் புளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் 147 ஆவது பிறந்த தினமும் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் இதனை முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் தாதியத்தின் தாயாகிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் உருவச்சிலைக்கு விளக்கேற்றப்பட்டுள்ளதையும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தாதியர் ஒருவரை கௌரவிப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மந்திகை ஆதார வைத்தியசாலையின் தாதிய பரிபாலகர் திருமதி கருணாகரன் உட்பட நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:– உ.சாளீன்)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை அருள்மிகு ஸ்ரீகண்ணகை அம்பாள் திருக்கோவிலின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவு, இந்து இளைஞர், மகளிர் மன்ற தெரிவுகளும் இடம்பெறவுள்ளதோடு திரு விழா தொடர்பான விடயங்களும் கோயில் கட்டட நிர்மாணம் தொடர்பான விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

எனவே கோயில் அடியார்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு செயலாளர் சி. கிருபாகரன் அறிவித்துள்ளார். (அ-4)




# காலபோக பயிர்ச்செய்கைக்காக பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுமா?

## தனங்கிளப்பு விவசாயிகள் கேள்வி

(சாவகச்சேரி)

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கவுள்ள நிலையில் கட்டாக்காலி கால் நடைகளினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்பு வயல் வெளிகளில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படுமா? என்று நெற் செய்கையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த மேற்படி பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த காலங்களில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கைதடி கமநல சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் விவசாய சம்மேளனங்களால் பாதுகாப்புவேலிகள் அமைக்கப்பட்டிருந்தது.

தற்போது இவை பழுதடைந்த நிலையில் சேதமாகி காணப்படுகின்றது. கடந்த வருட காலபோக நெற்செய்கையின் போது மேலும் 600 ஏக்கர் வயல் நிலங்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு வேலி இல்லாமையால் அவற்றை அமைத்து தரும்படி விவசாய சம்மேளனம், கமநல சேவைகள் நிலையம், விவசாயத் திணைக்களம், தென்மராட்சி பிரதேச செயலகம், யாழ். மாவட்ட செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றிற்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை கட்டாக்காலி கால் நடைகளை பிடிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டது.

அவர்களால் குறைந்த அளவான கட்டாக்காலிகளையே பிடிக்க முடிந்தது.

விவசாய சம்மேளனத்தால் உர விநியோகத்திற்காக அறவிடப்பட்ட நிதியிலிருந்து எதிர் வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் தற்போது அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிகளை பின் நகர்த்தி புதிய வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வருடத்திற்கு உரிய கால போக நெற்செய்கை பணிகள் ஆரம்பிக்க இன்னும் 3 மாதங்களே உள்ள நிலையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெற் செய்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-29)

# மாவட்டமட்ட உதைபந்தாட்ட சம்பியன்கள் தெரிவாகின

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகளில் 15,17,19 வயதுப் பிரிவுகளில் இளவாலை, புனித ஹென்றியரசர் கல்லூரியும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையும் புனித பத்திரிசியார் கல்லூரியும் யாழ். மாவட்ட சம்பியனாகியது.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் வடமராட்சியில் இடம்பெற்றது.

இதில் 15 வயது பிரிவில் சென் பக்றிக்ஸ் கல்லூரியை தோற்கடித்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் 17 வயது பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியால அணியை தோற்கடித்து நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை அணியும் 19 வயது பிரிவில் ஊர்வாற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அணியை தோற்கடித்து புனித பத்திரிசியார் கல்லூரி அணியும் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை அளவெட்டி அருணோதயா, தேவரையாளி இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் பெற்றுக்கொண்டன. (அ-3-24)

# அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் நாகர் கோவில் பகுதி மக்கள்!

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

நாகர் கோவில் மேற்குப் பகுதி யுத்தத்தினால் முற்றாக அழிக்கப்பட்ட பிரதேசமாகும்.

இதனால் அங்கிருந்த மக்கள் கடந்த 2000 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து வன்னி மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் தஞ்சம் புகுந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நாகர் கோவில் மேற்குப் பகுதிகளில் 105 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

150 குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் 105 குடும்பங்களே மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஏனையவர்கள் இன்னமும் அடிப்படை வசதிகள் இன்மையால் மீள்குடியேற தயங்குகின்றனர்.

தற்போது அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள், மலசலகூடம், குடிநீர், சுகாதாரம், கல்விச் செயற்பாடுகள், போக்குவரத்து சீரின்மை போன்ற அடிப்படை வசதிகள் இன்மையால் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

தற்போது 60 தற்காலிக குடிசைகள் வழங்கப்பட்ட நிலையில் ஏனைய குடும்பங்கள் சிறுசிறு கொட்டகைகள் அமைத்து சொல்லொணா துயரை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே யுத்தத்தினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள இம்மக்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவமுன்வரவேண்டும் என அப்பகுதி மக்கள் கண்ணிர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கோண்டாவில், குளப்பிட்டிப்பிரதேசம், கொக்குவில் பிரதேசத்தின் ஒரு பகுதி, நாச்சிமார் கோவிலடி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், மருத்துவபீட பிரதேசம், திருநெல்வேலி பிரதேசம், தட்டாதெரு, கோம்பயன் மணல் பிரதேசம், கச்சேரி பிரதேசம், யாழ். நகரம் முழுவதும், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், குருநகர் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# வதிரி டயமன்ஸ் அணி 2 ஆம் சுற்றுக்கு தெரிவு

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் கொல்சிம் எவ்.ஏ. வெற்றிக்கிண்ணத்தின் இரண்டாம் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெறவுள்ளது.இதில் 139 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து காலி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கெற்றேறியன் விளையாட்டுக் கழகம், காலி நகர சபை மைதானத்தில் மோதவுள்ளது.

முதலாவது சுற்றுப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணி மன்னார் சென் அன்ரனில் அணியை தோற்கடித்தும் காலி கெற்றேறியன் அணி கல்ஓயா கீற்ஸ் அணியை தோற்கடித்தும் இரண்டாம் சுற்றுப்போட்டிக்கு தகுதி பெற்றது குறிப்பிடத்தக்கது. (அ-3-24)





யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப்பிரிவினருக்கு உதைபந்தாட்டப் இறுதிப்போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சம்பியனாக நாவாந்துறை றோ.க. அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:– எஸ். செல்வதீபன்)

# அன்பை கொண்டாடுதல்



ஆன்மீகம் 52

## இயற்கையினால் பேரழிவு

அவ்வப்பொழுது பூமி ஆட்டம் காட்டுகிறது. இந்த ஆட்டம்தான் மந்தமாக அலட்சியமாக இருக்கும் மனிதர்களை உலுக்கி எழுப்புகிறது எனலாம்; அலட்சியமாக இருப்பதோடு மட்டுமின்றி மனிதன் தான் மட்டும் செங்கல்களும், காரையும் கலந்த கட்டிடங்களே பாதுகாப்பு எனக் கருதி, இயற்கையையும் தவறாகப் உபயோகிக்கிறான். உண்மையான பாதுகாப்பு என்பது "நான்" எனும் உணர்வே அன்றி செங்கலும் காரையும் அல்ல! இதைத்தான் உங்களுக்கு கற்பிக்க அல்லது தெரிவிக்க நினைக்கிறதோ எனலாம். நிலநடுக்கம், வெள்ளம், எரிமலை, எல்லாமே உலகில் எதுவும் நிரந்திரமில்; அந்த நிரந்தரமற்ற ஒன்றில் நீ பாதுகாப்பைத் தேட முடியாது என்ற உண்மையைத்தான் உணர்த்துகிறது. பேரழிவுகள் ஒரு அதிர்ச்சியாக வந்து உங்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட நாசங்கள் நடக்கும்பொழுது, நாம் அதன் காரணத்தை முதலில் புரிந்து கொள்வோம். ஏனெனில், அப்பொழுது தான் காரண கர்த்தாவை குற்றம் சாட்ட முடியும்- அதற்காகத்தான்! விநோதம் என்னவெனில், யாரையாவது குற்றம் சாட்டுவதில் நீங்கள் சுலபமாக சௌகரியமாக உணர்கிறீர்கள். ஆனால், இயற்கையில் பேரழிவு நிகழும் பொழுது யாரும் யாரையும் குற்றம் சாட்ட முடிவதில்லை. அது ஒரு அதிர்ச்சியாக உருவாகிறது.



அறிவோடு செயற்பட்டு விட்டால், இந்த அதிர்ச்சிகள் உங்களை மிக விரைவில் உயர்த்தி மேம்படுத்தும். புத்திசாலித்தனம் இல்லையேல் இவ்வதிர்ச்சிகள் உங்களை எதிர்மறையான எண்ணங்களுக்கும், மன அழுத்தத்திற்குமே இட்டுச் செல்லும்.

**கேள்வி:** ஏன் இயற்கை சின்னச்சின்ன கள்ளங்கபடமற்ற குழந்தைகளைக்கூட விட்டு வைப்பதில்லை? அழித்துவிடுகிறது?

**பதில்:** இயற்கை தன் வேலையைச் செய்கிறது. சிறியவர் பெரியவர் என்றெல்லாம் பேதம் பார்ப்பதில்லை! இளங்குருத்துக்களைப் பறித்து உண்பவர்கள், முட்டை சாப்பிடுபவர்கள், மலரை மொட்டாக இருக்கும் பொழுதே பறிப்பவர்கள் இவர்களெல்லாம் கருணையே இல்லாதவர்கள் என்று கூறிவிட முடியுமா? அப்படி இருக்கலாம்; இல்லாமலும் போகலாம் அல்லவா?

இயற்கை ஏன் இப்படிச் செய்கிறது என்று கேள்வி கேட்பதைவிட, எழுந்து சேவை செய்வதற்கு, தொண்டு செய்வதற்கு ஏதேனும் சந்தர்ப்பம் கிட்டுகிறதா என்று பாருங்கள்! இப்பொழுது குஜராத்தில் என்ன நடக்கிறது பாருங்கள்! மற்ற சமயங்களில் நடந்திராத அளவிற்கு நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான மக்கள் தொண்டு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். நிலநடுக்கம் நடந்திருக்காவிடில் குஜராத்தில் புனரமைப்பு என்ற ஒன்று நடந்திருக்காது. ஒரு அழிவினால், எப்பொழுமே வறட்சியாகவே இருந்து வந்த பிரதேசம்கூட புத்தம் புது நீர் ஊற்று தோன்றியதுபோல் செழுமையாகிவிடுகிறது. ஞானம் தான் இவ்வுலகை, உங்கள் அன்புக்குரியவராக நினைக்கும். அது நிலநடுக்கத்தை ஏற்படுத்துகிறதோ, பிளந்துகொள்கிறதோ இது உங்களுக்குப் பிரியமானது! நீங்கள் பூமியிலிருந்து கிடைக்கும் நல்லவற்றை மட்டுமே பாருங்கள்.

அமைதியான ஆகாயத்தை தவிர மீதி 4 பூதங்களுமே அவ்வப்பொழுது சீற்றத்தை ஏற்படுத்தக் கூடியவை. நீங்கள் அவற்றையே

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

சார்ந்திருக்கும்பொழுது அவை உங்களைச் சற்று ஆட்டம் காணச் செய்துவிட்டு மீண்டும் அமைதிக்கே அழைத்துச் செல்லுகிறது.

அந்தக் கண வெளியில் பாதுப்பைத் தேடுவதே ஆன்மீகமாகும்!

(தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள்

52

**7.** புத்தி இரேகையின் கிளை மேல்நோக்கி, இறுதி ஒரு நக்ஷத்திரக் குறியுடன் காணப்படுமாயின், காரிய சித்தியில் பெருங்கீர்த்தியைக் கொடுக்கும்.

**8.** புத்தி இரேகையின் கிளைகளின் இறுதியில் நக்ஷத்திரக்குறி நன்மையைக் குறிக்கும். புள்ளி, கிராஸ் அல்லது தீவுடன் இறுதி காணப்படில் ஜெயத்தைக் குறிக்காது.

**9.** புத்தி இரேகையின் கிளை இருதய இரேகைக்குச் சென்று கலந்து விடுமாயின், இருதய சக்தி ஆட்சி புரிவதாகும் புத்தியின் பலம் குறைந்ததெனக் கருதவேண்டும். புத்தியினால் மேன்மை அடைந்து வரும் ஒருவருக்குக் காலஅளவில் படத்தில் உள்ளபடி இரேகை அமைந்துவிடின் புத்தி தடுமாற்றமடையும். இத்தகையோர். தெய்வவழிபாட்டால் மீட்சி பெற வேண்டும். தெய்வமில்லையென்றோ இகழ்ந்தோ பேசியவருக்குக் கடவுளிடம் நம்பிக்கையுண்டாகும். புத்தியில் தெய்வ சம்மதமில்லாதபோது பிரவிர்த்தியில் அபஜெயமுண்டாவது கவனிக்கத்தக்கது. வாழ்விலே சோதனைக்குரிய காலம் மனைவிக்குக் கொடிய நோய் சம்பவிக்கும். அல்லது பொருளை இழப்பர். இவ்விரண்டுமில்லையாயின் உத்தியோகத்தையிழப்பார். மிகுதியான கவலைக்குட்படுவர். புத்தி எவ்வித உபாயத்தையுங்காட்டிக் கொடாது. ஒரு கிராஸ் இருந்தால் ஒரு மாதம் முதல் மூன்று மாதம்வரை கவலையைக் கொடுக்கும். ஊழ்வினைப் பயனாய், இரேகை சுக்கிர மேட்டிலுற்பத்தியாகி ஆயுள், புத்தி இவைகளைக் குறுக்கிட்டுச் சென்று இருதய இரேகையோடு கலந்த விடுமாயின் சுமார் ஒரு வருஷம் தடையைக் கொடுக்கும். இருதய பூர்வமாய் ராயின், அதிகக் கஷ்டத்துக்குட்படுவர். குறுக்கிட்ட சிறு இரேகைகள் மெல்லியதாகக் காணப்படில், கடுமையான தலைவலியையும் அமைதியின்மையையும் குறிக்கும்.



**11.** புத்தி இரேகையில் தீவு காணப் படில், அந்தக் காலஅளவில் மனம் பலஹீனப்படுவதைக் குறிக்கும். றாது. தீவுள்ள காலத்தில் மனம் அமைதி பெறாது. தீவு பதிந்து சிவந்த நிறத்தோடிருக்குமாயின், மூளை ஜுரம் உண்டாகும். ஸ்திரீகளானால் திடீரென மயக்கமுண்டாகும். புத்தியில் தீவிக்குறி அபாயமானது. அந்த இரேகையே அந்தக் கால அளவில் சாந்த நிலையில் பாதுகாப்பது நலமாகும். தீவுக்கப்புறம் புத்தி இரேகை நன்கு பதிந்திருக்குமாயின், தீவு அதிகக் கஷ்டங் கொடுக்காது. தீவின் நிறம் கவனிக்கத்தக்கது. சிவப்பு நிறம் அதிகத்





தெய்வத்தைத் தொழுது சீர்பெற வேண்டும்.

**10.** புத்தி இரேகையில் அடுத்தடுத்துக் குறுக்கிட்டுச் சிறு இரேகைகள் தொடர்ந்து காணப்படில் அவை சந்தர்ப்ப இரேகைகளாக மாட்டாது. தீவு கண்டுள்ள காலத்தில் புத்தி வேலை செய்யாது. சிலசமயம் உன்மத்த நிலை உண்டாகும். திடசித்தமிராது; புத்தி ஒன்றைப்பற்றாது. மாஜாயாலக் காரரிடம் அதிசீக்கிரம் மனத்தை

# புத்தி இரேகையின் குற்றங்குறைகள்

இந்தக்குறுக்கிட்ட சிறு இரேகைகள் நன்கு பதிந்து புத்தி இரேகையை வெட்டியதுபோலக் காணப்படில்

சக்தி

மூளைத் தொந்தரவைக் குறிக்கும். குறுக்கு இரேகை சிவந்த நிறமாயின் மூளை ஜுரம், தலைவலி முதலியன உண்டாகும். குரு ஆதிக்கமுள்ளோ இழந்திடுவர். தீவு கண்ட காலத்தில் ஜுரமுண்டாகும். ஜன்னியைப் போலவே புத்தி மாறாட்டத்தைக் கொடுக்கும். பெண்களுக்குப் புத்தி இரேகையில் தீவு காணப்படில், அந்தக்கால அளவு நோய்க்குட்படுவர். தீவுள்ள காலத்தில் மனத்தில் சக்தியிராது. மூளையும் வேலை செய்யாது. தேக ஆகிருதியுங் குறையும். கலவரப்படக்கூடிய சந்தர்ப்பம் நேரிடுமாயின், மனம் சாந்திபெ தொந்தரவைக் குறிக்கும். தீவுக் குறிக்குப் பிறகு புத்தி இரேகை மெல்லியதாகக் காணப்படில் மூளையின் அசாத்தியக் கொதிப்பைக் குறிக்கும் தீவின் எல்லையைக் கொண்டு கிரகச் சார்பான நோயைக் கண்டறிய வேண்டும். கிரகச் சார்பான நோயே தீவாய் மாறியதாகும். அநேகமாகச் சனி மேட்டுக்கு நேர் கீழே தீவு காணப்படுகிற(தொடரும்)

# வன்னி சென்று வருபவர்களால் யாழில் மலேரியா தாக்கம்

இந்திய, ஆபிரிக்க நாடுகள் மற்றும் வன்னிக்குச் சென்று வருபவர்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய்த்தாக்கம் இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதனால் தொடர்ந்தும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கவேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, ஆபிரிக்கா மற்றும் வன்னிப் பிரதேசங்களுக்குச் சென்று வருபவர்கள் மலேரியா நோய் தொடர்பில் இரத்தப் பரிசோதனை செய்துகொள்ளமுடியும் எனவும் அல்லது குறித்த பகுதிகளுக்குச் செல்லும் போது மலேரியா தடுப்பு மருந்துகளைப் பயன்படுத்த உரிய ஆலோசனைகளைப் பெறலாம் எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பௌசர்களில் எரிபொருளை இறக்கி விற்பனை செய்த குழுவினர் கைது

(கொழும்பு)

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்திற்கு எரிபொருட்களை ஏற்றிச்செல்லும் பௌசர்களின் கொள்கலன் சீல்களை உடைத்து 3ஆம் தரப்புக்கு எரிபொருட்களை விற்பனை செய்துவந்த குழுவினரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல் ஓயா பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். இரு பௌசர்களில் இருந்து சுமார் 26ஆயிரத்து 400 லீற்றர் எரிபொருளை இறக்கிக்கொண்டிருந்த 8 சந்தேகநபர்களை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றினர்.

மேற்படி எரிபொருளின் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாவாகும். ஹபுகம, கொட்டேகம, அம்பாறை, கல்ஓயா, ஹற்றன் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். இச்சந்தேகநபர்களை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ-2)

# ஸ்ரீ.சுதந்திரக் கட்சி புனரமைப்பு மாவட்ட மட்டத்தில் நடைபெறும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்பு பணிகள் அநுராதபுரம் மாவட்டத்தில் இன்றும் நாளையும் ஆரம்பிக்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்பு பணிகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு கொழும்பு மகாவலி நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச்செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தேர்தலை இலக்கு வைத்து கட்சிப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை புனரமைக்கப்படுவது வழக்கமாகும். அந்த அடிப்படையிலேயே புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

நாட்டின் சகல தேசிய வேலைத்தித் திட்டங்களும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அநுராதபுரம் ஸ்ரீமகா போதிக்கு முன்பாகவே ஆரம்பிக்கப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் மத வழிபாடுகளுடன் இங்கு தான் ஆரம்பிக்கப்படுகின்றன.

ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமாகும் இப்பணிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், எம்பிக்கள், மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் சகலரும் பங்குபற்றுவர்.

நாட்டிலுள்ள ஒரே ஒரு வலுவான அரசியல் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிதான். இக்கட்சியின் புனரமைப்புப் பணிகள் அநுராதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டாலும் நாடு முழுவதிலும் மாவட்ட மட்டத்தில் இப்பணி முன்னெடுக்கப்படும்.

அடுத்து வரும் ஆறு மாத காலப்பகுதியில் கட்சியின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்படும். அநுராதபுரம் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக கொழும்பு மாவட்டத்தில் கட்சியின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றார். (அ-2)

# மாகாண தமிழ்த்தினப்போட்டி

(பூந்தோட்டம்)

வடமாகாண தமிழ் மொழித்தின போட்டி எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் முதலிடம் பெற்றவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் நடைபெறும் தமிழ் மொழி தின விழாவில் எழுத்தாக்கப்போட்டி, நாட்டுக்கூத்து போட்டி, ஆற்றுகைப்போட்டி ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3-266)

# வேறு பாடசாலைகளுக்கு மாறுவதற்குத் தடை

க.பொ.த உயர்தர மாணவர்கள் தேசிய பாடசாலையிலிருந்து மற்றொரு தேசிய பாடசாலைக்கு மாறுவதைச் சுற்றுநிருப மொன்றின் மூலம் கல்வியமைச்சு இரத் துச் செய்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் தெரி வித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தர மாணவர்கள் வேறு பாடசாலை களில் உயர்தரக் கல் வியை நாடுகின்ற னர். இனிமேல் தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இந்த வாய்ப்புக்கிடைக்காது என அவர் கூறினார். (அ-2)



கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. செயன்முறை தேர்வு இன்றி மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றமையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பல விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டோரை தடுத்து நிறுத்த முயன்ற பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலைப் படத்தில் காணலாம்.


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

May 2012 to October 2012

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2012 (சி/6565)


# அறநெறி பாடசாலைகளில் இந்து சமய பொது அறிவுப்போட்டி

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய பொது அறிவுப்போட்டி பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது என திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

இதன்போது 2 ஆம், 3 ஆம், வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை, காலை 9 மணி முதல் 10 மணி வரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான வினாக்கள் பாலர் பிரிவு சைவபோதினி பாடப்பிரிவில் இடம்பெறும்.

4 ஆம் வகுப்பிற்கான பரீட்சையானது காலை 9 மணி முதல் 10 மணிவரை நடைபெறும் எனவும் இவற்றிற்கான வினாக்கள் கீழ்ப்பிரிவு சைவபோதினி பாடப்பிரிவில் இடம்பெறும்.

5 ஆம் வகுப்பிற்கான பரீட்சையானது காலை 10.30 மணி முதல் 11.30மணி வரை நடைபெறும் எனவும் இதற்கான வினாக்கள் கீழ்ப்பிரிவு சைவபோதினி பாடப்பிரிவில் இடம் பெறும்.

6 ஆம் , 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சையானது காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது. இதற்கான வினாக்கள் மத்திய பிரிவு சைவ போதினி பாடப் பிரிவில் இடம்பெறும்.

8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை மதியம் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இதற்கான வினாக்கள் மத்திய பிரிவு சைவபோதினி பாடப்பரிவில் இடம்பெறும்.

9, ஆம், 10 ஆம், 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை மதியம் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது. இதற்கான வினாக்கள் மேற்பிரிவு சைவசமய பாடப் பிரிவில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சுட்டிலக்கம், பரீட்சை நிலையம், நேரசூசி தொடர்பான விபரங்கள் அந்தந்த அறநெறிப்பாடசாலை அதிபர்க்ளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 128

**செக்கோஸ்லொவாக்கிய விடுதலையின் தொடக்கம்**

செக்கோஸ்லொவாக்கியாவை விடுவிப்பதற்காக சோவியத் யூனியன் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை மூன்று கட்டங்களாகப்பிரிக்கலாம். முதல் கட்டத்தில் (1944 செப்ரெம்பர்-டிசெம்பர்)



**செக்கோஸ்லொவாக்கியாவினுள் ஜேர்மன் நுழைந்தபோது அந்நாட்டுப் பிரஜை தாங்கமுடியாத கவலையுடன் தவிர்க்க முடியாமல் வரவேற்கிறார்**

ஸ்லாவிய தேசிய எழுச்சிக்கு உதவிபுரியும் நடவடிக்கையும் ஸ்லொவாக்கியாவின் கிழக்கு மற்றும் தென் கிழக்கு பிரதேசங்களை விடுவிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்றன. இரண்டாம் கட்டத்தில் (1945ஜனவரி-ஏப்ரல்) செக்கோலொவாக்கியாவின் மத்திய பிரதேசங்களிலிருந்து பாசிஸ்டுகளை விரட்டியடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. மூன்றாவது கட்டத்தில் (1945மே) செக்கோஸ்லொவாக்கியாவை முழுமையாகவிடுவித்த பிரேக் தாக்குதல் நடவடிக்கை இடம்பெற்றது.

சோவியத் துருப்புகளின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அதற்கே உரித்தான சிறப்பு அம்சங்கள் இருந்தன. சோவியத் யூனியனின் மார்ஷல் கோனவ்வின் தலைமையிலிருந்த 1-வது உக்ரேனிய சேனையின் இடப்புறத் துருப்புகளாலும் ஜெனரல் பெத்ரோவின் தலைமையிலிருந்த 4-வது உக்ரேனிய சேனையின் இடப்புறத்துருப்புகளாலும் நடத்தப்பட்ட கிழக்கு-கர்பாத்து நடவடிக்கை மிகக் கடினமான நடவடிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இது கர்பாத்து- தூக்லின் நடவடிக்கை என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவற்றிற்கு ஒரே திட்டமும் இலட்சியமும்தான் இருந்தன.

கர்பாத்து-தூக்லின் நடவடிக்கை 1944 செப்ரெம்பர் 8 முதல் அக்ரோபர் 28வரை ஸ்லாவிய தேசிய எழுச்சிக்கு உதவிபுரியும் பொருட்டு நடத்தப்பட்டது.

1-வது, 4-வது உக்ரேனிய சேனையின் 38வது மற்றும் 1-வது கார்டு படைகளும் 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸும் இந்நடவடிக்கையில் ஈடு படுத்தப்பட்டன. 2-வது, 8-வது வான் படைகள் விண்ணிலிருந்து இத்துருப்புகளை ஆதரித்தன.

கர்பாத்து மலையடிவாரங்களில் எதிரியை முறியடித்து, பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் சோதர ஸ்லாவிய மக்களுக்கு உதவும் பொருட்டு கர்பாத்து மலைத்தொடர் வழியே தொடர்ந்து முன்னேறுவதற்காக தூக்லின் கணவாய் திகைளில் சோவியத் துருப்புகள் பிரதான தாக்கு தலைத் தொடுத்தன.

துருப்புகள் கடினமான மலைப்பாங்கான, காட்டுப்பிரதேசத்தில் இயங்க வேண்டியிருந்தது, மலைகளில் 50-கி.மீ. ஆழம் வரையில் எதிரியின் தற்காப்பை-இதில் பொறியியல் ரீதியாக நன்கு பலப்படுத்தப்பட்ட கணவாய்கள், குறிப்பாக தூக்லின் கணவாயும் மலை ஆறுகளைக் கடக்கும் இடங்களும் அடங்கியிருந்தன- பிளந்து செல்ல வேண்டியிருந்தது.

நடவடிக்கைக்கான தயாரிப்புக்கு 4 நாட்கள்மட்டுமே ஒதுக்கப் பட்டிருந்தன. இதிலும் கணிசமான இன்னல்கள் இருந்தன. ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாம் பாதியில் நடத்திய நீண்டகாலத் தாக்குதல் நடவடிக்கைக்குப்பின் 1-வது 4-வது உக்ரேனிய சேனைகள் பெரிதும் முழுமையற்று இருந்தன. துருப்புகளுக்கு ஓய்வு தேவைப்பட்டது யுனிட்டுகளுக்கும் படைப்பிரிவுகளுக்கும் குறைந்தளவு



சோவியத் மார்ஷல் இவான் குனேவ் வரவேற்கப்படும் காட்சி

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

பொருளாயத சாதனங்கள் இருந்தன. மலைப்பாங்கான காட்டுப் பிரதேசங்களில் போர்புரிந்த அனுபவம் போர்வீரர்களுக்கு இருக்கவில்லை. ஆனால், உண்மையான நட்புணர்வும் பாசிச ஜேர்மனியின் ஆக்கிரமிப்பிற்குப் பலியான செக்கொஸ்லாவிய மக்களுக்கு உதவிபுரிய வேண்டும் என்ற விருப்பமும் கர்பாத்தில் தாக்குதலை நடத்துவது-இது போர்த்தந்திர ரீதியாக விவேகமற்றதாயிருந்தாலும்-என்று முடிவெடுக்க சோவியத் தலைமையைத் தூண்டியது "நமது சகோதரர்களாகிய ஸ்லாவிய மக்களுக்கு உதவுவதற்காக முன்னேறிச்செல்வது" என்பதுதான் அந்நாட்களில் சோவியத் போர்வீரர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளின் முக்கிய கோசமாக இருந்தது.

செப்பெரம்பர் 8 ஆம் திகதி 33-வது படையின் துருப்புகள் விமானப் படையின் உதவியோடு தாக்குதலில் இறங்கி முதல் நாளன்றே எதிரி தற்காப்பின் பிரதான மண்டலத்தை 6-10 கி.மீ ஆழத்திற்கும் பிளந்து சென்றன. வெற்றியைத் தொடருவதற்காக மொபைல் யூனிட்டுகளும் 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸும் சண்டையில் ஈடுபடுத்தப்பட்டன.



**ஜேர்மனியர்களால் கொல்லப்பட்ட யூதமக்கள்**

உறுதியான எதிர்ப்பைச் சமாளித்து, எதிரியின் பதிலடிகளை முறியடித்து செக்கோஸ்லொவாக்கியப்படைப் பிரிவுகளோடு சேர்ந்து சோவியத் துருப்புகள் கடுமையாகப் போரிட்டு முன்னேறின.

செப்ரெம்பர் இறுதியில் தூக்லின் கணவாய்க்காக கடுமையான, இரத்தக்களரியான சண்டைகள் மூண்டன. சோவியத் மற்றும் செக்கோஸ்லொவாக்கியப் போர்வீரர்கள் பெரும் இழப்புகளையும் பொருட்படுத்தாது உறுதியோடு எழுச்சியாளர்களை நோக்கி முன்னேறினர். அக்டோபர் 6 ஆம் திகதி கணவாய் கைப்பற்றப்பட்டது. 1-வது செக்கோஸ்லொவாக்கிய ஆர்மி கோர்பஸின் போர்வீரர்கள் சொந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தனர். சோவியத் போர்வீரர்களோ பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் பாலுள்ள தமது விசுவாசத்தை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தினர்.

இவ்வாறாக மலைப்பாங்கான, காட்டுப்பிரதேசத்தின் கடினமான சூழ்நிலைகள், அடர்த்தியான இலையுதிர்கால மேக மூட்டங்கள், எதிரியின் உறுதியர்ன எதிர்ப்பு முதலியவற்றை எல்லாம் மீறி சோவியத் துருப்புகள் போர்க்கலை, திறமை, வீரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி கர்பாத்து மலைகளைக்கடந்தன. சோவியத், செக்கொஸ்லொவாக்கியத் துருப்புகளால், ஸ்லாவிய எழுச்சியாளர்களுடன் சேர்ந்து கொள்ள முடியாது போனாலும் கர்பாத்து மலைகளில் 1-வது, 4-வது உக்ரேனிய சேனைகளுடைய யூனிட்டுகளின் முன்னேற்றம் எழுச்சியாளர்களின் நிலையைக் கணிசமாக இலகுவாக்கி அவர்களுடைய உறுதியான போராட்டம் தொடர துணை செய்தது.

**செக்கோஸ்லொவாக்கியாவில் ஜேர்மன் படைகளால் கொல்லப்பட்ட பொதுமக்கள்**



(தொடரும்)

# எமது விவசாய நிலங்கள் சிங்களவர்கள் கையில்

## கொக்கிளாய், கருநாட்டுக்கேணி மக்கள் கண்ணீர்

(கொழும்பு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் தெற்குக் கரையோரப் பகுதியில் இருந்து இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டு தற்போது மீள் குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு போதிய அளவில் அடிப்படை வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப் படவில்லை என முறையிடப்பட்டிருக்கின்றது.**

இந்தப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இப்பிரதேசத்து மக்கள் தமது சிரமங்களைத் தெரிவித்து வருகின்றனர். இடம்பெயர்வதற்கு முன்னர் தாங்கள் விவசாயம் செய்து வந்த தங்களுக்குச் சொந்தமான ஏழாயிரம் ஏக்கர் காணிகளைப் போய் பார்க்கவோ அவற்றில் பயிர் செய்யவோ முடியாதிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

காலம் காலமாகத் தாங்கள் பயிர் செய்து வந்த காணிகளில் இப்போது சிங்கள மக்களே விவசாயம் செய்வதாகவும் தமது காணிகளைத் தங்களுக்குப் பெற்றுத் தருவதற்கு வழி செய்யுமாறு அவர்கள் கோருகின்றனர்.

குடியிருக்கும் காணிகளுக்கு ஊடாக போர்க்காலத்தில் இராணுவ பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள மண் அணை அகற்றப்படாததனால் பல குடும்பங்கள் தமது காணிகளின் எல்லைகளை வரையறுத்து வேலியிடவோ தோட்டச் செய்கையில் ஈடுபடவோ முடியாதிருக்கின்றது.

கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி பாடசாலைகள் இயங்காத காரணத்தினால் போக்குவரத்து சிரமங்களுக்கு மத்தியில் கொக்கிளாய் பாடசாலைக்கே மாணவர்கள் செல்ல வேண்டியிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேறியுள்ள மக்களின் காணி பிரச்சினை தொடர்பில் உரிமை கோருகின்ற காணிகளுக்கான உரிமைப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் அடங்கிய விவரங்களை மேல் நடவடிக்கைக்காகத் திரட்டப்படுவதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்து மக்களின் போக்குவரத்துக்கென மக்கள் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## 3.5 கிலோ கிராம் ஹெரோயின் சென்னையில் கைப்பற்றப்பட்டது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருளை சர்வதேச ரீதியில் கடத்தும் முயற்சி கடந்த வியாழக்கிழமை முறியடிக்கப்பட்டுள்ளது. சென்னையில் 3.5 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்ட நிலையிலேயே இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதன் சந்தைப் பெறுமதி 3.5 கோடி இந்திய ரூபாய்களாகும். சென்னை மொபுசில் பேருந்து நிலையத்தில் வைத்து இந்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

மத்திய பிரதேசத்தில் இருந்து சென்னைக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் அது இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக விசாரணைகளின் போது தெரியவந்தது.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

## பத்து விமானங்களை விசேட சேவையில் ஈடுபடுத்த கோரிக்கை

(கொழும்பு)

இம்முறை ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் இலங்கை முஸ்லிம்களின் நலன்கருதி பத்து விமானங்களை விசேட சேவையில் ஈடுபடுத்துமாறு அரச ஹஜ் கமிட்டியின் இணைத் தலைவரும் பிரதியமைச்சருமான ஏ.ஆர்.எம்.அப்துல் காதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இக்கூட்டத்தின் போதே பிரதியமைச்சர் மேற் கண்டவாறு வேண்டுகோளை விடுத்தார். சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டம் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் தலைவர்களும் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினார். (அ-2)

## செயற்றிட்ட கற்றல் செயலமர்வு

(மல்லாவி)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கான அனர்த்த பாதுகாப்பு செயற்பாட்டிற்கான செயற்றிட்ட கற்றல் செயலமர்வும் நேற்றைய தினம் ஆரம்பமாகி இன்று சனிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்விற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளதால் இச்செயலமர்வில் பங்கு பற்றுவதற்கு சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ள 5 பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

## மக்களின் நலன் கருதி நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீள்குடியேறியுள்ள மக்களின் நலன் கருதி நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இதில் பாண்டியன் குளம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாண்டியன் குளம் பிரதேச செயலகத்திலும் துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்திலும் நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், உத்தேச வயதுச் சான்றிதழ், காலங்கடந்த இறப்பு, பிறப்பு, விவாகச் சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன் இந்நடமாடும் சேவையில் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே பாண்டியன் குளம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம மக்களை கலந்து பயன்பெறுமாறு துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் சி.குணபாலன் அறிவித்துள்ளார். (அ-3-267)

## பாலத்தைச் சற்றுக் கவனியுங்கள்



(சிவநகர்)

ஊற்றுப்புலம் சந்திக்கும் காந்திக் கிராமத்திற்கும் இடைப்பட்ட மயானத்திற்கு அருகில் உள்ள பாலம் உடைந்த நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் இவ்வீதியால் பயணம் செய்யும் மோட்டார் சைக்கிள் உட்பட வாகனங்கள் அனைத்தும் விபத்துக்களை எதிர்நோக்கும் அபாயம் உள்ளதால் மக்கள் பெரும் பீதியுடன் பயணம் செய்து வருகின்றனர்.

எனவே இந்தப் பாலத்தை உரிய முறைப்படி திருத்தம் செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

## வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்கள் சிரமம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் ஆரம்பித்த பணி பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.


நாட்டின் அநேகமான வைத்தியசாலைகளின் சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்திய அதிகாரிகளுக்கான போக்குவரத்து கொடுப்பனவு 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உபசெயலாளர் டாக்டர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வைத்தியசாலைகளில் அத்தியாவசிய சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013



**புனர்பூசம் 4 ஆம் பாதம்**
**பூசம், ஆயிலியம்**

### அதிர்ஷ்டம் அரங்கேறும்!

**எதற்கும் கலங்காத மனமும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும் பெற்ற கடக இராசி நேயர்களே!**

சந்திரனின் ஆதிக்கத்தில் நீங்கள் பிறந்ததால், சிந்தனையாளர்களாக திகழ்வீர்கள். தான், தன் குடும்பம் என்றிருக்கும் மற்ற இராசிக்காரர்களுக்கு மத்தியில் தேசப்பற்று மிக்கவர்களாகவும், பொதுநல ஈடுபாடு கொண்டவர்களாகவும் நீங்கள் விளங்குவீர்கள். புகழ்பெறுவது ஒன்றே உங்கள் குறிக்கோளாக இருக்கும்.


பிரச்சினையின் பின்னணியில் இருப்பவர்களில் முதல் ஆளாக நிற்பீர்கள். பேச்சாற்றல் இருந்தாலும் தப்பிக்க முடியாமல் சில தடுமாற்றங்களும் ஏற்படும். ஒப்பற்ற வாழ்க்கையில் உள்ளத்தில் அமைதிக் குறைவை ஏற்படுத்துவது சுக்கிரன்தான்.

அவர் உங்கள் இராசிக்குப் பாவியாக விளங்குகிறார். அந்த சுக்கிரனின் வீட்டிற்குள்தான் இப்பொழுது செல்ல இருக்கிறார்.

உங்களின் எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றும் வலிமை குருவிற்கு உண்டு. அந்த குரு உங்கள் இராசிக்கு 6, 9 க்கு அதிபதியாக விளங்குவதால் ஆறுதலையும் கொடுப்பார். அமைதியையும் கொடுப்பார். திடீரென பூதாகரமான பிரச்சினையையும் கொடுப்பார். எனவே, அந்த குருவை முறையாக வழிபட்டு தக்க பரிகாரங்களை தடையின்றி செய்தால், மிக்க புகழோடு வாழ்க்கை நடத்த இயலும். சிக்கல்களில் இருந்தும் விடுபட முடியும்.

பன்னிரெண்டு கட்டங்களில் உங்கள் இராசியான கடகத்தில்தான் குரு உச்சம் பெறுகிறார். உங்கள்

## கடகம்



வீட்டிற்கு வந்தால் வலிமை அடையும் ஒரு கிரகம், உங்களுக்கு நன்மைகளைத்தானே அதிகம் வாரிவழங்குவார். வீடுகட்ட போட்ட திட்டம் முதல், வியக்கும் விதத்தில் பதவி, பணவரவுகளை பெறும் திட்டங்களை படிப்படியாக நிறைவேற்றி வைக்கப் போகிறார்.

### குரு பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை பத்தாமிடத்தில் சஞ்சரித்துவந்த குரு பகவான் 17-05-2012 முதல் பதினோராமிடத்தில் சஞ்சரிக்கப் பேரகிறார். குரு உங்கள் இராசிக்கு ஆறாமிடத்திற்கும் அதிபதியாக வருகிறார். ஒன்பதாமிடம் எனப்படும் பிதுரார்ஜித ஸ்தானத்திற்கும் அதிபதியாகவும் வருகிறார். எனவே, ஆறுக்கு அதிபதியை, வரும்முன்னதாகவே கொண்டாடி வரவேற்று வழிபாடுகளை மேற்கொண்டால், தரும் பலன்கள் நல்ல பலன்களாகவே இருக்கும். தடைகளும், தாமதங்களும் அகலும்.

அவிட்ட நடசத்திரத்தோடு ஞாயிறு இணையும் நாளில் ஆற்றல் தரும் குருவை போற்றி வழிபட்டு, அன்றைய தினம் குரு பரிகார ஹோமங்களில் கலந்துகொண்டால், மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக வந்து சேரும்.

### இலாப குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6,9 க்கு அதிபதியான குருபகவான் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்க போகிறார். சஞ்சரிக்கும் குரு கேதுவுடன் அல்லவா கூடுகிறார். எனவே, ஏற்றம் இறக்கம் தரும் பாம்பு கிரகத்தின் சேர்க்கை இருப்பதால், ஒருகாலத்தில் ஓகோ என்றநிலை. மற்றொரு காலத்தில் பாதாளத்தில் இருக்கும்நிலை வரலாம். இதை சரிசெய்ய இராகு, கேதுக்களுக்கு பரிகாரம், சர்ப்ப சாந்தியும் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**மன்னவன் பதினொன்றில்**
**வந்து விட்டால் செல்வம் வரும்!**
**எண்ணியது நிறைவேறும்!**
**எழிலான வாழ்வமையும்!**
**அந்நியர்கள் உதவியுடன்**
**அதிசயிக்கத் தொழிலமையும்!**
**மண்ணுலகில் கடல் தாண்டும்,**
**வாய்ப்புகளும் உருவாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

பதினொன்றில் வரும் குருவால் பண மழையில் நனையும் வாய்ப்புக் கிட்டும். மதிப்பும் மரியாதையும் கூடி வரும். அடிப்படை வசதிகளை பெருக்கிக்கொள்வீர்கள். அஸ்திவாரத்தோடு அரைகுறையாக நின்ற வீடு முழுமைபெறும். தொழில் வளர்ச்சி, புதிய ஒப்பந்தம் இயல்பாகவே வந்து சேரும்.

### குரு பார்வை பலன்கள்

பதினோராமிடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களை சேர்வதால் சகோதர சகாய ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகியவை புனிதமடைகின்றன. இதன் விளைவாக நல்ல மாற்றங்களை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

பொதுவாக குருவின் பார்வைக்கு பலன் அதிகம் என்பார்கள். அதன் அருட்பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களை இப்போது குரு பார்க்கப் போகிறார். இதன் மூலம் உடன்பிறப்புகள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறி மகிழ்ச்சி ஏற்படும்.

பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் இனி தானாகவே விலகலாம். தன்னம்பிக்கையும் தைரியமும் எதையும் சாதிக்கும் வல்லமையும் உருவாகும். பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைவதால், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வந்துசேரும்.

உங்கள் வாரிசுகள் வளர்ச்சியடைய கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். இருப்பினும் பதினோராமிடத்தில் உள்ள கேது உங்கள் ஜென்ம இராசியை பார்ப்பதால் உடல்நலம் ஒத்துழைப்பது அரிது.

உங்கள் சந்தேஷங்களுக்கு குறுக்கீடாக உறவினர்களே நிற்கலாம். அவர்களை அனுசரித்து செல்வது ஆதாயத்தைத்தரும். குருவின் ஒன்பதாம் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவர். விருப்பப்படியே கல்யாணம் செய்துகொள்ளும் வாய்ப்பு வந்தாலும், கேது பலத்தால் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது.

திருமண வாழ்வில் பிரச்சினை இருப்பவர்கள் யோக பலம் பெற்ற நாட்களில் அதற்குரிய பரிகாரங்களைச் செய்துகொண்டால் ஒற்றுமை மேலோங்கும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். இடம் வ்ாங்கும் சூழ்நிலை அமையும்போது, செவ்வாய் பலம் பெற்றவர்களின் பெயர்களில் வாங்குவது நல்லது. வியாழன் தோறும் விரதமிருந்து வெற்றி தரும் குருவை வழிபட்டு வந்தால் மற்றவர்கள் போற்றும் வாழ்க்கை அமையும்.

### பலன் தரும் பதினோராமிடம்

பொதுவாக, இலாபத்தை குறிக்குமிடம் பதினோராமிடம் என்றாலும், மூத்த சகோதரம், காரிய வெற்றி, எதிர்பாராத அதிர்ஷ்டம், ஆசை நிறைவேறுதல், கௌரவப் பதவி, மைத்துனர் சம்பந்தமான உறவு, நற்பெயர் கிடைக்கும் வழி, கை, காது சம்பந்தப்பட்ட இடங்கள் போன்றவற்றைப் பற்றி தெரிந்து கொள்ளவும் வழிவகுக்கும் இடமாக பதினோராமிடம் அமைகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். வராத கடன்கள் வசூலானது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். நாளை செய்வோம். நாளை செய்வோம் என்று ஒத்திப்போட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும். ஏனென்றால், அதற்கு தேவையான பணம் உங்கள் கரங்களில் புழங்கும்.

மனை வாங்குவது பற்றியும், பொன் வாங்குவது பற்றியும் சிந்திப்பீர்கள். பழைய காலிமனை இடத்தைக் கொடுத்துவிட்டு, புதிய வீடு வாங்கி அதை பிள்ளைகளிடம் ஒப்படைக்கலாம் என்று நினைப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சமூகத்தில் உங்களுக்கு பெயரும், புகழும் கூடும். குறுக்கு வழி வருமானங்கள் அல்லது கூடஇருப்பவர்களால் வருமானங்கள் வந்து கொண்டே இருக்கும்.

மூத்த சகோதரர்களால் ஏற்பட்ட முன்னேற்றத் தடைகள் மாறும். கைகலப்போடு இருந்தவர்கள் இனி கலகலப்பாக மாறுவர். காது வலி, கைவலி போன்றவை தீரும். மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்நின்று நடத்தி வைப்பீர்கள்.

குறிப்பாக, இந்த குருப்பெயர்ச்சியின்போது, சுக்கிர, திசை, சுக்கிர புத்தி நடப்பவர்கள் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

### வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு

இடப இராசியில் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இது உங்கள் இராசியைப்பொறுத்தவரை 6,9 க்கு அதிபதியாக விளங்குவதால், ஒரு பாதி வளர்ச்சியையும், ஒரு பாதி தளர்ச்சியையும் கொடுப்பார்.

ஆறுக்கு அதிபதியாக இருப்பதால், கொடுக்கல் வாங்கல்களில் திடீர் திருப்பம் ஏற்படும். வராத கடன்கள் வசூலாகும். எதிரிகளின் பலம் குறையும். உடல் ஆரோக்கியத்தில் இரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள், இனி சாதாரண சிகிச்சையே போதுமென்று சொல்லுமளவுக்கு குணமாகிக் கொண்டே வரும். உத்தியோக மாற்றங்கள் எதிர்பார்த்தபடியே வந்து சேரலாம்.

ஒன்பதுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் தந்தைவழி விரோதங்கள் உண்டாகும். பங்காளி பகைகளும், பக்குவமில்லாத உறவினர்களின் தொடர்பால் பிரச்சினைகளும் அடிக்கடி வந்துகொண்டே இருக்கும். வாகனங்களை மாற்றிக் கொள்ள முன்வருவீர்கள். விதியை மாற்றும் தலங்களுக்கு நீங்கள் சென்று வழிபட்டு வந்தால் மதிப்போடும் மரியாதையோடும் வாழ இயலும்.

**சிவல்புரி சிங்காரம்**

இந்த குருப்யெர்ச்சியால் செயலில் வேகம் கூடும். செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு பெருகும். தனவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். வீடுகட்டி குடியேற வேண்டுமென்று நினைத்த காரியம் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூட, வீட்டுப் பெரியவர்களையும் அனுசரித்துச் செல்வதுதான் நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீரென மாற்றங்கள் வந்து சேரலாம். ஒரு சிலர் ஓய்வூதியம் வாங்கிக்கொண்டு வீட்டில் இருந்தே தொழில் செய்யலாமா? என்று யோசிப்பீர்கள் சுய ஜாதகம் நன்றாகவும், பலமாகவும் இருந்தால் தொட்ட காரியம் வெற்றி பெறும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் இலாபம் பெருகவும், யோகம் வந்து சேரவும், வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். திசை மாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு செல்வ வளம் பெருக, வாழ்க்கை நடத்துங்கள். (தொடரும்)

## வீடு அமைத்தல், வியக்க வைக்கும் பதவி உயர்வு, பணவரவு என பலவும் படிப்படியாக நிறைவேறும்!

# மன்னார் ஆயர் மீது சி.ஐ.டியினர் கடுமையான விசாரணை

(மன்னார்)

**மன்னார் ஆயர் ஜேசேப் மீது இலங்கை அரசாங்கத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடுமையான விசாரணைகளை நடத்தியுள்ளார்கள். போரின் இறுதிக்காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் போயிருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக அவர் சாட்சியளித்தமை தொடர்பாகவே இந்த விசாரணைகள் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

காணாமல்போன ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என தன்னுடைய சாட்சியத்தின் போது மன்னார் ஆயர் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக கேள்வி எழுப்பிய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக தான் சமர்ப்பித்த எந்த அறிக்கையை வேண்டுமானாலும் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருப்பதாக ஆயர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆயர் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கின்றாரா என அதிகாரிகள் கேள்வி எழுப்பியபோது பதிலளித்த ஆயர் மதகுரு ஒருவர் கூட காணாமல் போயிருப்பதாகவும் ஆனால், காணாமல்போன அவருடைய நிலை தொடர்பாகவுமே தான் அக்கறைப்படுவதாக ஆயர் பதிலளித்துள்ளார்.

போர் காலத்திலும் அதன் பின்னருமான வன்னிப் பகுதியின் சனத்தொகை விபரங்களைத் தருமாறு புலனாய்வுத்துறை அதிகாரிகள் கேட்டபோது அதற்குப் பதிலளித்த ஆயர் இந்த விபரங்களை ஒவ்வொரு மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிராந்தியச் செயலகங்கள் மற்றும் கிராம சேவகர்களிடம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் போயுள்ளார்கள் என்ற தகவலைக்கூட அரசாங்க ஆவணங்களில் காணப்படும் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டே தான் வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆயருடைய வாக்குமூலத்தை முழுமையாகப் பதிவு செய்து கொண்ட அதிகாரிகள் இறுதியில் அதனை அவருக்கு வாசித்துக் காட்டி அவரது கையொப்பத்தையும் அதில் பெற்றுச் சென்றதாக மன்னார் தகவல்கள் தெரிவிக்கின்றன. குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஆயர் இல்லத்தை முற்றுகையிட்டு இவ்வாறு விசாரணைகளை முன்னெடுத்திருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த விசாரணை இடம்பெற்ற போது ஆயருடன் மேலும் பல கத்தோலிக்க மதகுருக்களும் காணப்பட்டனர். ஆயருடன் காணப்பட்ட ஏனைய மதகுருக்களின் பெயர், விபரங்களும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் பெறப்பட்டது.

மன்னார் ஆயர் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக அளித்த சாட்சியம் குறிப்பாக ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் காணாமல் போயிருப்பதாக அவர் தெரிவித்திருந்தமை சர்வதேச ரீதியாக இலங்கைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்ததுடன் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 18 ஆவது கூட்டத் தொடரிலும் முக்கியமாகப் பேசப்பட்டது. தற்போது சர்வதேச சமூகம் இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

இவ்வாறு சர்வதேச ரீதியாக நெருக்கடி நிலை ஒன்று உருவாகியிருக்கும் பின்னணியிலேயே ஆயர் கடுமையான விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவரது சாட்சியமும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. (அ-2)

# பொருட்களின் விலையேற்றத்தை அரசால் கட்டுப்படுத்த முடியாது

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

தமிழ் கூட்டமைப்பினரைப் பயன்படுத்தி வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலித் தலைவர்கள் இலங்கைக்குள் ஊடுருவ முயற்சிக்கின்றனர். இதற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி துணை போகின்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை விடயத்தில் எதிர்க்கட்சியான ஐ.தே.க. நாட்டை பற்றி சிந்திக்காது செயற்பட்டது. அரசியல் ரீதியாக முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால்,நாட்டுக்கு அபகீர்த்தி கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படுமானால் அரசியலுக்கு அப்பால் சென்று நாட்டிற்கு முதலிடம் வழங்க வேண்டும்.ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அவ்வாறான செயற்பாட்டை முன்னெடுக்கவில்லை. அரசியலையே முதன்மைப்படுத்தியது.

இன்று வடபகுதியில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு மக்களுக்கான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு சமாதானச் சூழலில் எமது கடல் எல்லைக்கு அப்பாலுள்ள வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலி தலைவர்கள் இலங்கைக்குள் ஊடுருவுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு பாலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை விடுதலைப்புலிகள் பயன்படுத்துகின்றனர். அவ்வாறானதொரு சூழ்நிலையில் ஐ.தே.க.கூட்டமைப்பினரோடு கைகோர்த்துக்கொண்டு யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்தியது.

மே தினத்திற்காக கைகோர்ப்பதை விடுத்து பிரச்சினைகளை தீர்க்க ஒத்துழைக்க வேண்டும். தமிழ் கூட்டமைப்பினரை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கொண்டு வருவதற்கு ஐ.தே.க.முன்னுரிமை வழங்க வேண்டும்.

அதைவிடுத்து விடுதலைப்புலித்தலைவர்கள் நாட்டுக்குள் ஊடுருவும் முயற்சிக்கு உறுதுணையாக செயற்படலாகாது. மக்கள் இன்று எதிர்க்கட்சி மீது சந்தேகம் கொண்டுள்ளனர். அவர்களின் செயற்பாடுகளே இதற்கு காரணமாகும்.

பொருட்களின் விலையேற்றம், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருள், பால்மா, காஸ் உட்பட பொருட்களின் விலையேற்றத்தை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது. இறக்குமதி செய்யும் கம்பனிகள் விலை அதிகரிப்புக்கு அரசாங்கம் விருப்பமின்றி அனுமதியை வழங்கியது.

ஆனால், குழந்தைகளுக்கான பால்மா விலையை அதிகரிக்க இணங்கவில்லை. எனவே, விலையேற்றங்களுக்கு ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமென்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார், (அ-2)

# ஆபாச இறுவெட்டு வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் கைதானர்

(பூந்தோட்டம்)


வவுனியா தோணிக்கல் பகுதியில் இளைஞர் ஒருவரை பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது, குறித்த இளைஞன் (வயது34) நகரில் வீடியோ கடை நடத்தி வருபவர் என்றும் இவரது வீட்டில் விடுதலைப்புலிகள் தொடர்பான இறுவெட்டுக்கள் மற்றும் ஆபாச படங்கள் அடங்கிய இறுவெட்டுக்கள் காணப்பட்டதாக கூறி கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இரண்டு கணனிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினர் குறித்த நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். (அ-2-266)







யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாம கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோ.குகபாலசிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் தேசியக் கொடியேற்றிய பின் விருந்தினர்கள் நிற்பதனையும் மாணவர்கள் அணி நடை நிகழ்விற்கு ஆயத்த நிலையில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# சிவில் சமூக வாழ்வை யதார்த்த நிலைக்கு உட்படுத்த வேண்டும்

## வடமாகாண சர்வமத பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

மூன்று தசாப்த யுத்தம் காரணமாக வடக்கில் மத விழுமியங்கள் சீரழிந்துள்ளதுடன் கலாசார பெறுமானங்கள் மதிக்கப்படாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடமாகாண சர்வமத பேரவையின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து பிரதான வியடங்களை அடிப்படையாகக் கொண்ட பிரேரணையில் இந்த விடயமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கலாசார பெறுமானம் கொண்ட புனிதத் தலங்களின் உருவச் சிலைகள் கொள்ளையிடப்படுவதாகவும் அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை காணப்படுவதாகவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாகவும் வடமாகாண சர்வமதப் பேரவை தமது பிரேரணையில் தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர்ப்பதற்கு மதத் தலங்களை அடிப்படையாகக் கொண்ட சமூக பாதுகாப்பு விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு சிவில் பாதுகாப்புக் குழுக்களை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அதில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை கல்வி தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் தொழில் கல்விக்கு தேவையான வளங்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும் எனவும் வடமாகாண சர்வமத பேரவை வலியுறுத்தியுள்ளது.

தேசிய கைத்தொழிலை மேம்படுத்துவதற்கும் சிவில் சமூக வாழ்வை யதார்த்த நிலைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (7-2)

# இலங்கை மாணவன் மீது அவுஸில் தாக்குதல்

(கொழும்பு)

இலங்கை மாணவர் ஒருவரை தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவுஸ்திரேலிய மாணவர் ஒருவருக்கு நான்கு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி மருத்துவ கல்லூரி மாணவர்களின் விருந்தொன்றின் போது இலங்கை தமிழ் மாணவருக்கும் குறித்த மாணவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது குற்றம் சுமத்தப்பட்ட அவுஸ்திரேலிய மாணவர் இலங்கை தமிழ் மாணவரை இனவாத உணர்வுடன் தாக்கினார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் குற்றவாளியான மாணவருக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனையும் நான்கு மாத சிறைத்தண்டனையும் பிரிஸ்பேன் மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளது. (அ-2-7)

# பாராளுமன்றுக்கு ஜனாதிபதி விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு சென்றுள்ளார். பாராளுமன்றத்தில் சுமார் ஒன்றரை மணிநேரம் தங்கியிருந்த அவர் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்த மீதான அனுதாப பிரேரணையிலும் கலந்து கொண்டார்.

முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தை மீதான அனுதாபப் பிரேரணை பிற்பகல் 2.30 மணி முதல் இடம் பெற்றது. பிற்பகல் 4.10 மணியளவில் சபைக்கு பிரவேசித்த ஜனாதிபதி சுமார் 1/2 மணி நேரம் சபையில் அமர்ந்து அனுதாப பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட உரைகளை செவிமடுத்தார்.

முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் அனுதாப பிரேரணையை செவிமடுக்க அவரின் குடும்ப உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர். காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை மீதான அனுதாப பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. (2-7)

# வழக்குத் தாக்கலில் குறைபாடு; 350 வழக்குகள் தள்ளுபடியாகின

(கொழும்பு)

நூற்றுக்கணக்கான மில்லியன் வருமான வரி செலுத்தத் தவறிய நபர்களுக்கு எதிராக இறைவரி ஆணையாளர் திணைக்களம் தாக்கல் செய்த 350 வழக்குகள் பல்வேறு குறைபாடுகள் காரணமாக நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் அதிகாரிகள் பல்வேறு குறைபாடுகளுடன் இந்த வழக்குகளை தாக்கல் செய்தமை தற்போது தெரிய வந்துள்ளது.

வருமான வரி செலுத்தத் தவறும் நபர்களுக்கு எதிராக நீதிமன்ற உதவியைப் பெறுவதற்கு இறைவரி ஆணையாளர் திணைக்களம் அவதானம் செலுத்துவது, அந்த வரியை அறவிட மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரேயே ஆகும்.

இறைவரி ஆணையாளர் திணைக்களத்தின் சட்டப் பிரிவுக்கு வழக்கு தாக்கல் செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வருமான வரி செலுத்தத் தவறுவோர் ஆயிரக்கணக்கில் உள்ளனர். வழக்கு தாக்கல் செய்யும் போது திணைக்களத்துக்குப் பெரும் தொகை பணமும் செலவாகிறது. இவ்வாறு செலவு செய்து தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுவதால் திணைக்களத்துக்குப் பெரும் இழப்பும் ஏற்படுகிறது.

வரி ஏய்ப்பாளர்கள் சார்பில் தொடுக்கப்படும் ஏராளமான வழக்குகள் ஒரு வருடத்தில் இவ்வாறு வீசப்படுவதால் அவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய மில்லியன் கணக்கான பணமும் இல்லாமற் போகிறது. வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது ஏற்படும் பல்வேறு குறைபாடுகளை சீர் செய்து மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென பிரதி இறைவரி ஆணையாளர் நாயகம் சேனாரத்ன தெரிவித்துள்ளார். (அ-2-7)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 12

★ 1656 -ஒல்லாந்தர் கொழும்பைக் கைப்பற்றினர்.

★ 1689 -பிரான்சுடன் போரிடுவதற்காக இங்கிலாந்தின் மூன்றாம் வில்லியம் ஒக்ஸ்பேர்க் கூட்டணியில் இணைந்தான்.

★ 1780- அமெரிக்க புரட்சிப் போர்: தென் கரோலினாவின் சார்ல்ஸ்டன் நகரம் பிரித்தானியப் படைகளினால் கைப்பற்றப்பட்டது.

★ 1797 -பிரான்சின் முதலாம் நெப்போலியன் இத்தாலியின் வெனிஸ் நகரைக் கைப்பற்றினான்.

★ 1864 -அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவில் ஸ்பொட்சில்வேனியா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஆயிரக் கணக்கான கூட்டமைப்பு மற்றும் கூட்டணி படையினர் இறந்தனர்.

★ 1881- வட ஆபிரிக்காவில் துனிசியா பிரான்சின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

★ 1922 -20 தொன் விண்கல் வேர்ஜீனியாவில் வீழ்ந்தது.

★ 1937 -ஆறாம் ஜோர்ஜ் மன்னன் பிரித்தானியாவின் மன்னனாக முடிசூடினான்.

★ 1942 -ஆயிரத்து 500 யூதர்கள் போலந்தில் அவுஷ்விட்ஸ் வதைமுகாமில் நச்சுவாயு அறையில் வைத்துக் கொலை செய்யப்பட்டனர்.

★ 1949 -சோவியத் ஒன்றியம் பெர்லின் மீதான முற்றுகையை நிறுத்தியது.

★ 1952- காஜ் சிங்க் ஜோத்பூரின் மன்னனாக முடிசூடினான்.

★ 1965 -சோவியத் ஒன்றியத்தின் லூனா 5 விண்கலம் சந்திரனில் மோதியது.

★ 1978- சாயிரில் கொல்வேசி நகரைத் தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

★ 1981 -ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த தன்னார்வலர் பிரான்சில் ஹியூஸ் சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்தார்.

★ 1982 -போர்த்துகலில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

**பிறப்புக்கள்**

★ 1843 -தோமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பிரித்தானியாவைச் சேர்ந்த பாளி அறிஞர் (இ.1922)

★ 1895- ஜே.கிருஷ்ணமூர்த்தி, இந்தியத் தத்துவ அறிஞர் (இ.1986)

**இறப்பு**

★ 2001 -அலெக்சி தூபோலெவ், ரஷ்ய விமான வடிவமைப்பாளர் (பி.1925)

**சிறப்பு நாள்**

★ உலக செவிலியர் தினம்



★ 1820-நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதி புளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த தினம் (இ.1910)





# முதல் மரியாதை

ஒவ்வோர் ஆண்டும் கந்தசஷ்டி உற்சவத்தின் 'போது, ஊரில் பெரிய சந்தை கூடுவது வழக்கம்! ஒருமுறை கந்தசஷ்டி உற்சவத்தின் போது ரமேஷ், காமேஷ் இருவரும் மற்றும் சில கிராமத்தினருடன் காலையிலேயே சந்தைக்குச் சென்றனர்.

முதலில் ஒரு பேரீச்சம்பழக்கடை தென்பட்டது. அங்கு ரமேஷ் பேரீச்சம்பழம் வாங்க முயன்றபோது, அவனை பின்னுக்கு தள்ளி விட்டு முன் வந்த காமேஷ், நண்பா! எப்போதும் எனக்குத் தான் முதல் மரியாதை கிடைக்க வேண்டும். அதனால்என்னை முதலில் பேரீச்சம்பழம் வாங்கவிடு! என்று சொல்லி விட்டு, பழத்தில் ஒன்றை எடுத்து

ர்கள் காமேஷைப் போணி செய்ய அழைத்தனர். சற்றுத் தூரம் சென்ற பின் ஒரு பொம்மைக் கடை தென்பட்டது. ஆனால் அவற்றின் விலை மிக அதிகமாக இருந்தது. உடனே ரமேஷ் கடைக்காரனிடம், இத்தனை அதிகமாக விலை சொல்கிறாயே ! உன் பொம்மைகளில் அப்படி என்ன விசேஷம் என்று கேட்டான்.

அதற்கு அவன் இவை சாதாரணமான மண் பொம்மைகள் அல்ல! தாஜ்மகால் செய்யப்பட்ட அதே பளிங்குக் கல்லினால் செய்தவை! பெரிய பொம்மைகளின் விலை நூறு ரூபாய்! சிறிய பொம்மைகள் தலா முப்பது ரூபாய்! பெரிய பொம்மை ஒன்று வாங்கினால், ஒரு சிறிய பொம்மை இலவசம்! என்றான்.





சுவைத்துப் பார்த்தான். பின்னர் கடைக்காரனிடம், இரண்டு கிலோ கொடு! நான் போணி பண்ணினால் உனக்குப் பிரமாதமாக வியாபாரம் ஆகும்! என்று சொல்லி விட்டுப் பழம் வாங்க அவனுடனிருந்தவர்கள் அனைவரும் பழம் வாங்கினார்கள்.

அதைக் கவனித்த ஏனைய கடைக்கா

சரி தான்! நான் இரண்டு பெரிய பொம்மைகள் வாங்கிக் கொள்கிறேன். ஆனால் எனக்கு மூன்று" சிறிய பொம்மைகள் இலவசமாகத் தர வேண்டும்! என்று ரமேஷ் பேரம் பேசினான். கடைக்காரனும் சம்மதித்தான். உடனிருந்த மற்றவர்கள், என்னப்பா காமேஷ்! நீ ஏன் சும்மா நிற்கிறாய்? உனக்கல்லவா முதல் மரியாதை கிடைக்க வேண்டும்! என்று தூண்டிவிட்டனர்.

உடனே ரமேஷ், ஆகா! நான் மறந்தே போய்விட்டேன்! காமேஷ்! இங்கும் நீயே போணி செய்! என்றான். இதைக் கேட்ட காமேஷ் கடைக்காரனிடம், இவர்கள் சொல்வது சரி! எனக்குத் தான் முதல் மரியாதை கிடைக்க வேண்டும்! ஆனால் எனக்குப் பெரிய பொம்மை ஒன்று போதும்! என்றான்.


உடனே ரமேஷ் முன் வந்து, இரண்டு வாங்குவதாகப் பேரம் பேசி விட்டேன். அதனால், மற்றொன்று எனக்குக் கொடு! என்றான். பெரிய பொம்மையுடன் இலவசமாக மூன்று சிறிய பொம்மைகளையும் கடைக்காரன் கொடுத்தான். காமேஷ்! ஒரு பெரிய பொம்மைக்கு ஒரு சிறிய பொம்மை இலவசம்! அதனால் ஒரு சிறிய பொம்மை நீ எடுத்துக் கொள். மீதி இரண்டை நான் எடுத்துக் கொள்கிறேன்! என்றான் ரமேஷ்.

அது எப்படி? மூன்று பொம்மைகளைப் பாதியாக உடைக்க முடியாது. அதனால் சிறிய பொம்மையின் விலையில் பாதியை எனக்குக் கொடு! என்றான் காமேஷ். நல்ல கதையாக இருக்கிறதே! முதலாவது பெரிய பொம்மைக்கு ஒரு சிறிய பொம்மை இலவசம். இரண்டாவது பெரிய பொம்மைக்கு இரண்டு சிறிய பொம்மைக்ள் இலவசம். முதல் மரியாதை கிடைத்ததால் பெரிய பொம்மையும் அதனுடைய ஒரு இலவச இணைப்பும் உனது. இரண்டாவது பெரிய பொம்மையும், அதனுடைய இரு இலவச இணைப்புகளும் எனக்குச் சொந்தம்! என்று ரமேஷ் சாமர்த்தியமாக மடக்க உடனிருந்தவர்கள் கொல் என்று சிரித்தனர். காமேஷ் மீண்டும் விவாதத்தில் தோல்வி அடைந்தான்.

# அம்புலி மாமா கதைகள்

## சரிவும் ஏற்றமும்

விஜயபுரியில் வசித்து வந்த சுந்தரம் வியாபாரம் செய்ய விரும்பினான். ஆனால் எந்த வியாபாரத்தில் இறங்கினால் விரைவில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதில் அவனுக்கு குழப்பம் ஏற்பட்டது. இறுதியாக விஜயபுரியில் நல்ல தரமான உணவு விடுதிகள் இல்லை. அதனால் தான் ஒரு உணவு விடுதி தொடங்கினால் நிச்சயமாக நல்ல வியாபாரம் நடக்கும் என்று தோன்றியதால்




நகரின் பிரதான கடைத் தெருவில் ஓர் உணவு விடுதியைத் திறந்து வைத்துத் தன் வியாபாரத்தை ஆரம்பித்தான்.

ஆனால் சுந்தரம் எதிர்பார்த்தது போல் திருப்திகரமாக வியாபாரம் நடைபெறவில்லை. ஒருநாள் அயலூரில் இருந்து ஆனந்தன் என்ற சமையற்காரன் அவனிடம் வேலை கேட்டு வர அவனைத் தன் உணவு விடுதியில் நியமித்தான். ஆனந்தன் மிகமிகச் சுவையாக தின்பண்டங்களைத் தயாரித்தான்.

சிறிது சிறிதாக வியாபாரம் ஏற்றம் கண்டது. ஓராண்டிலேயே, சுந்தரத்தின் உணவு விடுதியில் கூட்டம் அலை புரண்டது.

ஒருநாள் சமையற்கார ஆனந்தன் சுந்தரத்திடம் ஆயிரம் ரூபா கடன் கேட்டான். ஆனால் சுந்தரம் அவனுக்குக் கடன் தர மறுத்து விட்டான். ஆனால் அன்று முதல் சுந்தரத்தின் உணவு விடுதியில் விற்கப்பட்ட பண்டங்களின் சுவை குறைந்தது. ஆரம்பத்தில் வாடிக்கையாளர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளாக ஆக வாடிக்கையாளர் கூட்டம் குறையத் தொடங்கியது.



அமோகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சுந்தரத்தின் வியாபாரத்தில் சரிவு ஏற்பட அவன் காரணம் தெரியாமல் திகைத்தான். சுந்தரத்தின் பள்ளி ஆசிரியரும் அந்த உணவு விடுதியின் வாடிக்கையாளர்களில் ஒருவர். ஒருநாள் அவர் சுந்தரத்திடம், உன்னுடைய விடுதியில் முன்புபோல் உணவுப் பண்டங்கள் சுவையாக இல்லையே! என்ன காரணம்? என்று கேட்டார்.


அது தான் எனக்கும் புரியவில்லை ஐயா! என்ற சுந்தரம் உங்களைப் போலவே இன்னும் சிலரும் என்னிடம் குறை கூறினர். அதே ஆனந்தன் தான் இப்போதும் சமைக்கிறான்! என்றதும், அப்படியென்றால் ஆனந்தன் முன்போல் அக்கறையுடன் சமைப்பதில்லை என்று தோன்றுகிறது. அவன் ஏதாவது உன்னை உதவி கேட்டு அதை நீ மறுத்தாயா? என்று ஆசிரியர் கேட்டார்.

ஆம்! அவன் என்னிடம் ஒருநாள் ஆயிரம் ரூபா கடன் கேட்டான்! ஒருமுறை தந்தால் பின்னர் அடிக்கடி கேட்பான் என்பதால் தர மறுத்து விட்டேன்! என்றான் சுந்தரம். அது தான் நீ செய்த தவறு! என்ற ஆசிரியர், எல்லா மனிதர்களையும் ஏன் ஒரே மாதிரியாக நினைக்கிறாய்? அவனுக்கு உண்மையாகவே தேவை இருந்திருக்கலாம். முதலாளியான உன்னைக் கேட்காமல் அவன் வேறு யாரைக் கேட்பான்? உன்னுடைய வியாபாரத்தின் முக்கிய சூத்திரதாரியே அவன் தான்! அவன் மனம் லயித்து வேலை செய்யவில்லையெனில் உனக்குப் பெரிய நட்டம் உண்டாகும்! நீ எதற்கும் அவனுக்கு ஒருமுறை கடன் கொடுத்துப் பார்! என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

தனது ஆசிரியர் கூறியது சரியெனத் தோன்ற உடனே சுந்தரம் ஆனந்தனை அழைத்து, அன்று நீ கேட்ட போது என்னிடம் பணம் இல்லை. இப்போது தருகிறேன் என்று பணம் கொடுக்க ஆனந்தன் முகம் மலர்ந்தது. மாயம் போல் அன்று முதல் உணவுப் பண்டங்கள் முன் போலவே சுவையாக சமைக்கப்பட்டன. வாடிக்கையாளர்கள் கூட்டம் மீண்டும் பெருகியது. வியாபாரமும் ஏற்றம் கண்டது.

# அதிசய உலகம்...

## தொழில் நுட்ப வளர்ச்சியினால் அமைக்கப்பட்ட அதிசய வாகனம்



போக்குவரத்து வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான volkswagen நிறுவனம் உருளை போன்ற வடிவத்தில் கார்களை அமைத்துள்ளது. Hover car என அழைக்கப்படும் இந்த வாகனம் ஆனது சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தில் இரண்டு நபர்களே பயணம் செய்யக் கூடியவாறு காணப்படுவதுடன் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கவும் உதவுவதாக அதன் வடிவம் அமைந்துள்ளது.

## அவுஸ்திரேலியாவில் தலைகீழாக வடிவமைக்கப்பட் அபூர்வ வீடு



எல்லோரும் மற்றவர்களிடமிருக்கும் வீடுகளில் இருந்து தமது வீடுகளை வித்தியாசப்படுத்தும் முகமாக மண்டையைப் போட்டு உடைப்பார்கள். அதேபோல் இங்கும் மண்டையைப் போட்டு உடைத்து சற்று வித்தியாசமான முறையில் தலைகீழாக வீட்டை வடிவமைத்திருக்கின்றார்கள். Marek Glowacki மற்றும் Marek Rozansik எனும் இரு கட்டட வரை கலைஞர்கள் இணைந்து ஆஸ்திரியா நாட்டிலுள்ள Tyrol மாநிலத்தில் வெளித் தோற்றம் தலை கீழ் வடிவில் மட்டுமல்லாமல் உள் அலங்காரங்களும் தலைகீழான வடிவில் வடிவமைத்துள்ளனர்.

இந்த தலைகீழான சிந்தனைக்கு வடிவம் கொடுக்க எட்டு மாதங்கள் எடுத்துள்ளதாம்.

## அபார முயற்சியால் சிறுவயதில் இலட்சாதிபதியான சிறுமி



ஐயேலிதா அன்ட்ரே என்பவள் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரைச் சேர்ந்த ஐந்தே வயதான சிறுமி. ஆனால் தனது ஓவியங்கள் மூலம் 100000 பவுண்ட்ஸ்களுக்கும் அதிகமாக சம்பாதித்து சாதனை படைத்து வருகின்றாள். இவளுக்கு 2 வயதான போதிலிருந்தே மோடர்ன் ஆர்ட் வரைவதில் ஆர்வம் இருந்து வந்துள்ளது. இதை ஊக்குவித்த அவளது பெற்றோர்களின் உதவியுடன் இவர் வளரத்தொடங்கியதிலிருந்து மோடர்ன் ஆர்ட் வரைவதை ஒரு தொழிலாகவே மாற்றி செய்து வருகிறாள்.

இவள் வரைந்த மிகக் குறைந்த விலையுடைய ஓவியங்களே 3000 பவுண்டுகள் பெறுமதி வாய்ந்தவை. தனது ஓவியத் திறமை மேலும் மெருகேற இவள் வரையும் ஓவியங்களுக்கு விலையும் அதிகரித்தது. இதுவரை இந்த ஓவியங்களை விற்றதன் மூலம் சம்பாதித்த தொகையான ஒரு இலட்சம் பவுண்டுகள். ஓவியம் வரைவதை ஒரு தொழிலாகக் கொண்டிருப்பவர்கள் பலர் தங்கள் ஆயுள் காலத்தில் சம்பாதித்த தொகையை விட அதிகம் என்று குறிப்பிடத்தக்கது.

இச் சிறுமியின் ஓவியங்கள் ஏற்கனவே இரு கண்காட்சிகளில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஜூனில் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள மிகப் பெரிய ஓவியக் கண்காட்சி ஒன்றிலும் இவை இடம்பெறவுள்ளன.

# மஹாபொல புலமைப்பரிசில் என்ன அரச புலமைப்பரிசிலும் இரத்தாகும்

## அமைச்சர் திஸாநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஒழுக்கத்தை மீறும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பல்கலைக்கழக மாணவர்களின் மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு மாத்திரமன்றி அரசாங்கத்தின் புலமைப் பரிசிலும் இரத்துச் செய்யப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற புலமைப்பரிசில் கொடுப்பனவுகளின் பெறுமதி தொடர்பாக எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே உயர்கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதனிடையே பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த உயர்கல்வி அமைச்சர், மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளை அடுத்து அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களின் புலமைப் பரிசில்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்ற போர்வையில் இரத்துச் செய்ய வேண்டாம் என கோரிக்கை முன்வைத்துள்ளார். (அ-2)

### கரணவாய் கொலை விவகாரம்

# கொலையுண்டவருக்கு 16 வெட்டுக் காயங்கள்

## பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

கரணவாயில் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டவரின் உடலில் 16 வெட்டுக் காயங்கள் இருந்ததாகவும் இதில் இரு பெரிய காயங்களே மரணத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கொலை வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று முன்தினம் தொகுப்புரைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையில் அரச தரப்பு சாட்சியமும் எதிரிதரப்பு சாட்சியமும் முடிபடைந்திருந்த நிலையில் இருதரப்பு சட்டத்தரணிகளும் தமது தொகுப்புரைகளினை நிகழ்த்தினர்.

2002 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம் திகதி கரணவாயில் மாணிக்கம் தவராஜா என்பவரை கொலை செய்தனர் என செல்வரத்தினம் சுரேந்திரன், சண்முகம் சதிஸ்வரன் ஆகிய இருவர் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது.

விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இறந்தவரின் உடலில் 16 வெட்டுக் காயங்கள் இருந்ததாகவும் இக்காயங்களில் காணப்பட்ட இரு ஆழமான வெட்டுக்காயத்தினாலேயே மரணம் சம்பவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் விசாரணைகளின் போது கைப்பற்றப்பட்ட கத்தி, வாள் என்பனவும் பருத்தித்துறை நீதவான் பிரேம் சங்கருக்கு முதலாம் எதிரியால்வழங்கப்பட்ட ஒப்புதல்வாக்குமூலமும் சான்றுப்பொருளாக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் இரு எதிரிகள் சார்பிலும் ஆஜராகி இருந்த சட்டத்தரணிகளும் அரச தரப்புச் சட்டத்தரணி திருக்குமரனும் தொகுப்புரைகளினை நிகழ்த்தியதோடு முதலாம் எதிரி சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி என். சிறிகாந்தா குறித்த நபரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்ட நியதிகளுக்கு அமைவாக வழங்கப்படவோ பதிவு செய்யப்படவோ இல்லையென வாதாடினார்.

கண்கண்ட சாட்சியங்கள் இல்லாத வகையில் வழக்கு விசாரணைகளில் முன்வைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியம் திருப்திகரமாக இல்லை எனவும் எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் தமது தொகுப்புரையில் தெரிவித்தனர்.

இந்நிலையில் வழக்கு தொகுப்புரைக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(அ-4)

# மத்தியஸ்தர்கள் சபையின் செயற்பாடுகள் வெற்றி

(பூந்தோட்டம்)

வவுனியா மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் இம்மத்தியஸ்தர் சபைக்கு தாக்கல் செய்யப்பட்ட 35 பிரச்சினைகளில் 30 பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் மத்தியஸ்த சபை தவிசாளர் சி.வரதராஜா தெரிவித்துள்ளார்.

பிரதி சனிக்கிழமை தோறும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் காலை 9 மணி தொடக்கம் மத்தியஸ்தர் சபை இயங்கி வருகின்றது.

இம் மத்தியஸ்த சபையில் காணிப்பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, கடன் பிரச்சினை தொடர்பாக மக்களால் அதிகமாக முறையிடப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-3-266)

# வடக்கின் மேதின நிகழ்வுகளும் மேற்குலகின் புதிய நகர்வுகளும்

1977 இல் தனிநாடு கேட்டு, 81 இல் மாவட்ட சபையை ஏற்றுக் கொண்ட இறங்கு நிலைதான் நினைவிற்கு வருகிறது.

ஒரு இலட்சம் இந்தியப்படை சூழ, வடக்கின் முதலமைச்சராக இருந்த, வரதராஜப்பெருமாளினாலும், இந்த காணி உரிமைகளைப் பெற முடியவில்லை. கோவில் காணிகளைக் கையாளும் உரிமையைக்கூட மாகாணசபைக்கு விட்டு வைக்கவில்லை அன்றைய ஐ.தே.க. அரசு.

மேலும், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் மேதினக் கூட்டத்தை நடத்துவதில் கூட்டமைப்பு பெருமையடைவதாக கூறுகிறார் அரியநேந்திரன்.

ஆனால், மூதூர் கிழக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட, இன்னமும் தேசமின்றி அகதி முகாம்களில் வாடும் சம்பூர் மக்கள் இதில் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது?

கல்லோயாவிலிருந்து ஆரம்பித்து மகாவலி அபிவிருத்தி திட்டமுங்கூட இன்றுவரை அபகரிக்கப்படும் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களை அதிகாரமற்ற மாகாணசபைகள் மீட்டுத்தருமா?

இவைதவிர, நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம், மறுபடியும் இலங்கை அரசியல் உரையாடல் வெளிகளில் உலாவருவதைக் காண்கிறோம். சுஷ்மா சுவராஜ் குழுவினரின் விஜயத்தோடு, இவ்விடயம் கிளப்பப்படுவதால், இந்தியாவின் வகிபாகம் இந்நகர்வில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தெரிவுக்குழுவிற்குள் கூட்டமைப்பை உள்வாங்கும் விடயத்தில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்களிப்பு அரச தரப்பினூடாக நகர்த்தப்படுவதாக பேசப்படுகிறது.

ஆனாலும், கூட்டமைப்பின் இந்தியப் பயணத்தின் பின்னர், அது குறித்த, அரசிற்குச் சாதகமாக முடிவினை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளுமென பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மீதான அமெரிக்க- இந்திய நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ற வகையில், தனது இராஜதந்திரத்தை கூட்டமைப்புத் தலைவர் பிரயோகிக்க



முற்படுகின்றார் என, கூட்டமைப்பின் தலைமைத்துவ ஆதரவு சக்திகள் திருப்தி கொண்டாலும், வல்லரசாளர்களின் மூலோபாயத் திட்டங்களை அவர்கள் உணர்ந்து கொள்வதுபோல் தெரியவில்லை.

ஆங்சான் சூகியின் மீள்பிரவேசத்தின் ஊடாக, மியன்மாரின் நடப்பு அரசியலில் காலூன்ற முயலும் இந்திய - அமெரிக்க தந்திரோபாயக் கூட்டின் வெற்றிகரமான நகர்வு போன்று, இலங்கையிலும் ஒரு ஆட்சி மாற்றம், எதிரணிகளின் இணைவு மற்றும் சரத்பொன்சேகாவின் விடுதலை ஊடாக ஏற்படலாம் என்கிற எதிர்பார்ப்பும் சிலரிடம் உண்டு.

மியன்மாரைப் பொறுத்தவரை, அங்கு மூலவளச் சுரண்டலில் ஈடுபடும் டெங்சியாவோ பிங்சின் வழித்தோன்றல்களால், அந்த நாட்டின் தெயின் செயின் தலைமையிலான இராணுவ ஆட்சி காப்பாற்றப்பட்டு வந்தது.

ஆனாலும், சீனாவின் அதீதமான ஆதிக்கத்தை விரும்பாத இராணுவ ஆட்சியாளர்களின் ஒரு பகுதியினரால், மேற்கொள்ளப்பட்ட அழுத்தங்கள், ஏனைய எதிர்த் தரப்பு வல்லரசாளர்களை உள்நுழைய அனுமதித்தது என்கிற பார்வையுமுண்டு.

மூலவளம் மிக்க நாடொன்றின்




பொருளாதார அபிவிருத்திக்கு கைத்தொழில் வளர்ச்சியும், அதற்கான நவீன தொழில்நுட்ப காரணங்களும் தேவை. அத்தோடு உலக சந்தையில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய மேற்குல முதலீட்டாளர்களும் அவசியம்.

ஆகவே, போர் காலத்து இலங்கை போன்று, இந்தியா- சீனா- அமெரிக்கா என்கிற முத்தரப்பினை சமகாலத்தில் கையாள்வதன் ஊடாக, மியன்மாரினை துரிதகதியில் அபிவிருத்தி செய்யலாம் என்கிற முடிவினை அதன் ஆட்சியாளர்கள் மேற்கோண்டிருக்க வேண்டும்.

ஆனால், இலங்கை ஆட்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் வேறு வகையானவை.

பொன்சேகாவை விடுதலை செய், ஊடக அடக்குமுறையை நிறுத்து, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்று என்கிற மேற்குலக அழுத்தங்களை அரசு விரும்பவில்லை. இதன் அடுத்த கட்டமாக, தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினை முன்வை என்று மேலும் இறுக்குவார்கள் என்பதை ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

அதேவேளை, ஏதாவதொரு இணக்கத்திற்கு பெருந்தேசியவாத சக்திகள்



வராவிட்டால், பேரிழப்பினை சந்தித்த மக்கள் கூட்டம், மறுபடியும் கிளர்ந்தெழும் என்கிற வரலாற்று நிதர்சனங்களையிட்டு அமெரிக்கா கவலைப்படுகிறது.

அண்மையில் இதுபோன்றதொரு கருத்தினை அமெரிக்கா வெளியிட்டது நினைவிற்கு வருகிறது. இவற்றை கருத்திற்கொண்டு, அமெரிக்க- இந்திய இராஜ தந்திர காய் நகர்த்தல் ஊடாக, தமக்கொரு தீர்வு கிட்டுமென கூட்டமைப்பின் தலைமைப்பீடம் எதிர்பார்க்கிறது.

அதேவேளை நிரந்தரமான தீர்வொன்று, இனப்படுகொலைக்கான சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றினூடாகவே எட்டப்படுமென புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் மக்களும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

அத்தோடு போர்க்குற்ற விசாரணை குறித்து அதிகம் பேசாத கூட்டமைப்பு அதனை மேற்குலகின் நகர்விற்கே விட்டுவிட்டது போலுள்ளது.

அதேவேளை, மத்திய ஆட்சியதிகாரத்தில் குவிந்துள்ள இலங்கையின் இறைமையை, தமிழ்த் தேசிய இனத்தோடு பகிர்ந்துகொள்ள பெருந்தேசியவாதிகள் உடன்பட மாட்டார்கள் என்பதனை யதார்த்தபூர்வமாகப் புரிந்துகொள்ளும் மேற்குலகும், இந்தியாவும் 13ஆவது திருத்த சட்டத்தை அரசியல் தீர்வாக முன்வைக்கின்றன.

ஆனால், அதனை தற்போதைய ஆட்சியாளர்கள் நிராகரிக்கும் பொழுதே ஆட்சி மாற்றம் ஒன்றிற்கான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த ஆரம்பிக்கி



றார்கள் மேற்குலகினர்.

ஆகவே, இராஜாங்கத் திணைக்களத்தின் செயலாளர் ஹிலாரி கிளின்டனை, ஜீ.எல்.பீரிஸ் குழுவினர் சந்திக்கும் போது அமெரிக்காவின் புதிய நகர்வு உறுதி செய்யப்படுமென எதிர்பார்க்கலாம்.

இருப்பினும் அமெரிக்கா, இந்தியாவோடு இராஜதந்திர உறவாடல்களை பேணும் அதேவேளை, நாட்டின் மையப் பிரச்சினையான எண்ணெய் குறித்தும், அதனைச் சுத்திகரிக்கும் சப்புகஸ்கந்த தொழிற்சாலையை தரமுயர்த்துவது பற்றியும் சீனாவோடு பேசிக் கொண்டிருக்கிறது அரசு.

தரமுயர்த்துவதோடு அதனை நிர்வகிக்கும் பொறுப்பினையும் இந்தியாவிடம் கொடுத்தால், எதிர்காலத்தில் அரசியல்தீர்வு விடயத்தையும் இந்தியா பேசும் என்பதால், எந்தவித நிபந்தனைகளையும் விதிக்காத சீனா, ரஷ்யாவோடு வர்த்தக ரீதியில் உறவாடுவது தமது பெருந்தேசியவாத இருப்பிற்கு பாதுகாப்பாக அமையுமென இலங்கை கருதுகிறது.

தமக்குப் போட்டியாக இருக்கும் ஏற்றுமதி வர்த்தகத்தில் அதிகம் தங்கியிராமல் உள்நாட்டு வர்த்தகத்தில் அதிக கவனம் செலுத்துங்கள் என்று சீனாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்ட அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ரிமோதிகைத்னர் சீன

**நன்றி: இணையம்**

அதிபரிடம் மிகவும் பௌவியமாகத் தெரிவித்த செய்தி பலமான சீனாவுடனான உறவு சரியானது என்கிற நம்பிக்கையை ஜனாதிபதிக்கு ஊட்டியிருக்கும்.

தற்போது ஆசியாவில் சந்தைகளை மூலவளங்களைப் பங்கிடும் போட்டியே நடைபெறுகிறது. மூலோபாய இருதரப்புக்கூட்டு என்கிற சொல்லாடல் அதிகம் இருப்பதும் ஆசியாவில்தான். ஆகவே, இந்து சமுத்திரப்பிராந்தியத்தைவிட தென் சீனக்கடலோடு ஒட்டிய நாடுகள் சீனாவுடன் ஏற்படுத்தும் முறுகல் குறித்து தனது கழுகுப்பார்வையை செலுத்தும் அமெரிக்கா, மனித உரிமைப்பேரவையின் தீர்மானத்திற்கு ஒருவருட கால அவகாசத்தை ஏன் வழங்கியது என்கிற கேள்விக்கான பதில் இதில் அடங்கியுள்ளது.

பொன்சேகாவின் அரசியல் பிரவேசம் தோல்வியடைந்தாலும் ரணில்-சம்பந்தன் புதிய கூட்டு அமெரிக்காவின் நிகழ்ச்சிநிரலுக்கு உதவி புரியுமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். (முற்றும்)

# அன்பும் ஆதரவும் நிறைந்த தாதியப்பணி

## இன்று சர்வதேச தாதியர் தினம்



உலகெங்கும் உள்ள தாதியர்கள் அனைவரும் பெருமையுடன் கொண்டாடும் நாளாக இந்த சர்வதேச தாதியர் தினம் அமைந்துள்ளது. பராமரித்தல் செயற்பாடு விலங்கினங்களிலும் மனிதனிலும் காணப்பட்டாலும் புளோரன்ஸ்நைற்றிங்கேல் அம்மையார் தாதியப்பணியை தொடங்கி வைத்த பின்னரே தாதியர்கள் மூலமான சிறப்பானதொரு பராமரிப்புத் திட்டம் வழங்கப்படத் தொடங்கியது.

அக்காலத்தில் தாதியப் பணி பல சவால்களைகொண்ட ஒரு பணியாக இருந்தது. தாதியப் பணி செய்ய விடாது வைத்தியர்களினாலும் சமூகத்தில் உள்ள பெரியவர்களாலும் தடுக்கப்பட்டார்கள். அவர்களது பணி தரக்குறைவாகக் கூடக் கருதப்பட்டது. 1854 ஆம் ஆண்டு கிறிமியன் (crimean) யுத்தத்தின் போது பல போர் வீரர்கள் தொற்று நோயினால் இறந்து கொண்டிருந்தார்கள். மின்சார வசதியற்ற அந்த நேரத்திலும் புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரும்அவரதுசிலநண்பிகளும் கையில் விளக்கேந்தி அளித்த பராமரிப்பினால் பல போர் வீரர்கள் இலகுவில் குணமடைந்தார்கள். இதன் பின்னர் தான் தாதியப் பணியின் மகத்துவம் உலகில்உணரப்பட்டது. நோயாளர்கள் குணமடைய வைத்தியப் பணியைப் போல் அன்பும் ஆதரவுமாக தாதிப் பணியும் அமைய வேண்டியதன் முக்கியத்துவம் உணரப்பட்டது.

தாதியர் தினம் தோன்றிய வரலாற்றைப் பார்க்கும் போது முதன் முதலாக 1953 ஆம் ஆண்டு அமெரிக்கா சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த சுகாதார போதனையளிக்கும் டொறத்தி சுதர்லாண்ட் (Dorothy Sutherland) என்பவர் ஒரு திட்ட வரைபை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த எயிஸ்ன் கோவெர் (Eisenhower) என்பவரிடம் தாதியர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற முன்மொழிவை முன்வைத்தார். ஆனால் இது ஏற்கப்படவில்லை.

ஆயினும் இதற்கு அடுத்த வருடம் ஐப்பசி மாதம் 11-16 ஆம் திகதி வரை தேசிய தாதியர் வாரமாக புரோரன்ஸ் நைற்றிங்கேல் மிசனால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் பின்னர் 1974 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிக்சன் (President Nixon) சர்வதேச தாதியர் வாரம் என்பதை பிரகடனப்படுத்தினார். இதன் பின்னர் 1981 ஆண்டு புதிய மெக்சிக்கோவில் (New Mexico) உள்ள தாதியர்கள் தேசிய தாதியர் அங்கீகார தினத்தை வைகாசி 6 என பிரகடனப்படுத்தினார்கள். இதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு அமெரிக்க தாதியர் கூட்டமைப்பு ஒரு திட்ட வரைபை முன்வைத்து அப்போதைய ஜனாதிபதி Regan என்பவரால் சர்வதேச தாதியர் வாரம் வைகாசி 6-12 வரை கொண்டாடுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இவ்வாரத்தில் வரும் இறுதி தினமான புளோரன்ஸ் நைற்றிங்கேல் பிறந்த தினத்தை சர்வதேச தாதியர் தினமாக கொண்டாப்பட வேண்டும் என்ற முடிபு சர்வதேச தாதியர் சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்டு 1988 இல் இருந்து ஒவ்வொரு கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வருடம் இதன் கருப்பொருளாக அமைந்திருப்பது (closing the gap: From evidence to action (ஆதாரபூர்வமாக அமைந்த செயற்பாடுகளின்மூலம் இடைவெளியை குறைத்தல்). அதாவது தாதிக்கும் நோயாளிக்கும் உள்ள இடைவெளியை ஆதாரபூர்வமாக அமைந்த பராமரிப்புச் செயற்பாடுகளின் மூலம் குறைத்தல் என்பதாகும்.

இன்று விஞ்ஞானத்தினதும் தொழில்நுட்பத்தினதும் வளர்ச்சி காரணமாக சுகாதாரத் துறையில் பல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் நோயாளர் பராமரிப்பு வழங்குவதில் ஏற்பட்டுள்ள சமமின்மையும் தரமற்ற தன்மையும் உலகில் உள்ள எல்லாத் தாதியருக்கும் ஒரு சவாலாக அமைந்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2004 ஆம் ஆண்டின் அறிக்கையின் படி உலகில் ஏற்படுகின்ற அரைவாசி உயிரிழப்புக்கள் இலகுவான செலவு குறைந்த வினைத்திறன் மிக்க செயற்பாடுகளின் மூலம் குறைக்கப்படக் கூடியது. இதில் தாதியர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

இன்று உன்னதமான தாதியப் பணியின் முக்கியத்துவத்தை உலகம் உணரத் தலைப்பட்டுள்ளது. இந்தவகையில் தாதியர்களின் பணியும் பட்டிதொட்டி எங்கும் பரவியுள்ளது. வைத்தியசாலையில் இருந்துசமூகப்பணிவரை தொழிற்சாலைகளில் இருந்து கைத்தொழில் பேட்டை வரை தாதியப் பணியின் புனிதம் உணரப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு உன்னதப் பணியை ஆற்றுவதற்காக இன்று தாதியர்களும் பல்வேறு துறைகளிலும் சிறப்புற பயிற்றப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். சாதாரண டிப்ளோமா தொடக்கம் உயர்தர டிப்ளோமா, தாதியப் பின்பட்டப்படிப்பு, தாதிய இளமாணி, தாதியர் முதுமாணி, Phd, doctarate வரை அவர்களது கல்வித்துறை விரிவடைந்து செல்கிறது. தற்போது இலங்கையிலும் சாதாரண 3 வருட டிப்ளோமா கற்கை நெறி தொடக்கம் முதுமாணி கற்கைநெறி வரை மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உள்ளன. ஆயினும் உலகில் உள்ள மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையிலும் தாதியர்களுக்கான கற்கை நெறி வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. இதனை மேம்படுத்த உரிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது தாதியர்கள் சுயமாக செயற்படுவதற்கு பல முட்டுக்கட்டைகள் உள்ளன.

ஒரு நோயாளி குணமடைய வைத்தியப் பணி எவ்வளவு முக்கியமோ அதே போன்று தாதியப் பணி மிகவும் முக்கியமானது. எனவே இவ்விரண்டுபணிகளும் எவர்களது தலையீடுகளும் இன்றி ஒன்றாக கைகோர்த்துச் செயற்படும் போது மிக இலகுவாக நோயாளர்கள் குணமடைய முடியும். இதனால் எமது நாட்டு மக்களின் சுகாதார நிலைமையும் மேன்மையடையும். நாடு சுபீட்சத்தை நோக்கி நகரும்.

ஆகவே தாதியருக்குரிய இந்நன்நாளிலே நோயாளியின் நலனுக்காக நாம் அனைவரும் ஒன்றாக பாடுபடுவோமாக.

கோ.நந்தகுமார்
விரிவுரையாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம்

# அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் பயனாளிகளின் வங்கி கணக்குகளுக்கு

(கொழும்பு)

சமுர்த்தி பயனாளிகளுக்காக கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரண கொடுப்பனவு 15 இலட்சத்து 83 ஆயிரத்து 961 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பு செய்யவும் இன்றைய தினம் அவர்களுக்கு வங்கிக் கணக்கு புத்தகங்களை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனை, எதிர்கால நோக்கு, வேலைத்திட்டம் மற்றும் கடந்த வரவு -செலவுத்திட்ட யோசனைகள் என்பவற்றுக்கு அமைவாக அதிகரிக்கப்பட்ட இந்த சமுர்த்தி நிவாரணம் நாட்டின் ஆயிரத்து 044 சமுர்த்தி வங்கி சங்கங்களில் புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு பயனாளிகளுக்கு கொடுக்கப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் சமுர்த்தி அதிகார சபையின் உதவியுடன் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தபடும்.

அரசாங்கத்தினால் அனைத்து சமுர்த்தி பயனாளிகளுக்காகவும் செலவிடப்படும் முழு தொகை 12 ஆயிரம் மில்லியன் ரூபாவாகும்.

அதுவரை நாட்டில் இருந்த முழு சமுர்த்தி பயனாளிகளின் எண்ணிக்கை 1 5 இலட்சத்து 4 1ஆயிரத்து 375 ஆக காணப்பட்டதுடன் அந்த எண்ணிக்கை ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து 1 5இலட்சத்து 83 ஆயிரத்து 961 ஆக உயர்வடைகின்றது.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளின் ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்து சமுர்த்தி பயனாளிகளினதும் சமுர்த்தி நிவாரணத்தை அதிகரிப்பதாக அளித்த வாக்குறுதிக்கு அமைய புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி ஏப்ரல் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் சமுர்த்தி பயனாளிகளின் வங்கிக் கணக்குக்கு வைப்புச்செய்யப்படும்.இதன்ஊடாகதமக்குவேண்டிய பணத்தை பெற்றுக் கொள்ள பயனாளிகளினால் முடியும்.

அத்துடன் தற்போதைய நிலைமையில் முன்னேற்றமடைந்துள்ள குடும்பங்களை சமுர்த்தி திட்டத்தின் கீழ் தொடர்ந்து வைத்திருப்பதற்காக காப்புறுதி, பிள்ளைகளுக்கான உதவிகள், மருத்துவமனை வசதிகள், திருமண மற்றும் மரணங்களின் போதான நிவாரணங்கள் போன்றன தொடர்ந்து வழங்கப்படும். (அ-2)

## பற்றிமா அன்னை திருத்தல திருவிழா

பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை திருத்தல திருநாள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பங்குத்தந்தை யூஜீன் பிரான்ஸிஸ் அடிகளார் தெரிவித்தார்.

முதலாவது திருப்பலி காலை 5.30 மணிக்கும் இரண்டாவது திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை 6.30 மணிக்கும் மூன்றாவது திருப்பலி (நோயாளர்களுக்கானது) மதியம் 12 மணிக்கும் நான்காவது திருப்பலி (இளைஞர்களுக்கானது) மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளது. இதேவேளை இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் இடம் பெறவுள்ளது என அவர் தெரிவித்தார். (அ-6)

# சிலாபத்தில் பஸ் விபத்து; பத்து பேர் காயம்

(கொழும்பு)

சிலாபம்-குருநாகல் வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற பஸ் விபத்தில் மாணவர்கள் இருவர் உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர்.


இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடனும் மரத்துடனும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த பஸ் சாரதி பலத்த காயங்களுக்குள்ளானதால் சிலாபம் வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஏனையோர் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(அ-7)

# மாமரத்து பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 19-IV



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

முக்கனிகளுள் முதன்மைக் கனியான மாம்பழத்தின் அருமை விநாயகப் பெருமான் தாய் தந்தையை சுற்றி வந்து அவர்களே உலகமென்று எடுத்தியம்பி மாங்கனியைப் பெற்று கொண்டதிலிருந்து நாம் அறிந்து கொண்டோம்.

அவ்விதம் முதன்மைப்படுத்தப்பட்ட கனியை அதே மணம், நிறம், சுவையுடன் பெறுவது கடினமானதாகத் தோன்றுகின்றது. எங்களூரின் பெருமையையும் அடையாளத்தையும் எடுத்துக்கூறிய கறுத்தக்கொழும்பானுடன் வெள்ளைக் கொழும்பான், விலாட்டு, அம்பலவி என பல வகை இனங்கள் அதற்கேயுரிய



Amritodes atkinsoni

அளவில் குறைந்து நிறம், மணம் என்னும் சுவையில் குறைந்து போலிருப்பதற்கு பீடைகளின் தாக்கம் முக்கிய காரணம்.

இந்த பீடைகளைப் பற்றி விரிவாகப் பார்த்து அவற்றை முகாமைத்துவப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராயும் போது முக்கியமான பீடைகளை இனங்காண முடிகின்றது. அவற்றுள் மாமரத்தில் முழு ஒட்டுண்ணியாகி முழு மரத்தையே மலினப்படுத்தும் குருவிச்சை, இலைதுளிர்த்து பூக்கும் காலங்களில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக மாம்பழ உற்பத்தியில் கணிசமான அளவில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் மாவிலை தத்திகள், மாம்பூக்களை சேதப்படுத்தும் புழுக்கள், இலையை வெட்டி பாதிப்பை ஏற்படுத்தும் வண்டுகள், ஏனைய பூச்சியினங்கள், மாம்பழ விதையை சேதமாக்கும் நீள்மூஞ்சி வண்டுகள், மாம்பழத்தில் அழுகலை ஏற்படுத்தும் மாம்பழ இலையான்கள், மாமர தண்டு துளைப்பான், என பல வகையில் பீடைகளை வரிசையிலடுக்கலாம்.

நோய்களின் தாக்கத்தை விட பூச்சி பீடைகளின் சேதமே அதிகளவில் இருப்பதனால் ஒருங்கிணைந்த பூச்சிப்பீடை முகாமைத்துவத்தின் மூலம் இப்பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்துவது சுலபமாகும். இதில் ஒருங்கிணைவு என்பது மாமரம் வைத்திருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் பொருந்தும். அனைவரும் இணைந்து இப்பூச்சி பீடைகளை கட்டுப்படுத்தினாலன்றி இவற்றிற்கு தீர்வாக எதனையுமே கொடுக்க முடியாது.

### மாவிலைத் தத்திகள் (Mango Hoppers)

மாமரத்தினது மாம்பழ உற்பத்தியை கணிசமான அளவில் பாதிக்கின்ற முக்கிய காரணியாக மாவிலைத் தத்திகள் இருக்கின்றன. வருடம் முழுவதுமாக இவற்றினது தாக்கம் இருப்பினும் மாவிலை புதிதாக துளிர்த்ததிலிருந்து பூக்கள் உருவாகி காய் பிடிக்கும் வரை இத்தத்திகளது சேதம் அதிகமாகவே இருக்கும். இந்த காலங்களில் மாவிலைத் தத்திகளினது எண்ணிக்கை பல்கிப் பெருகும். அணங்குப் பரவலும் நிறைவுடலித் தத்தியும் இணைந்து பாரிய அளவில் சேதத்தை ஏற்படுத்துவதனால் இந்த காலத்தில் இவற்றினது எண்ணிக்கையை அதிகரிக்கவிடாது கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்தால் அவற்றினாலான சேதம் மட்டுப்படுத்தப்படும்.

அதற்கான எந்த முறைகளையுமே முயற்சித்துப் பார்க்கலாம். இருப்பினும் இம்முறைகளில் அசேதன இரசாயனப் பூச்சி நாசினிகளை பயன்படுத்தும் போது மாமரத்தினது உயரம், அதனது வயது, உற்பத்தி திறன் என்பனவற்றையும் கருத்தில் கொள்வது அவசியம். குறிப்பாக மாமரத்தை சுற்றியுள்ளசூழல் அவசியமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். மாவிலைத் தத்திகளை கட்டுப்படுத்துவது என பீடை நாசினிகள் கண்டபடி விசிறுவது முழுமையாக தவிர்த்தல் வேண்டும்.

மாவிலைத் தத்திகளின் Amritodes atkinsoni, Idioscopus clypealis, I.niveosparsus ஆகிய இனங்களுண்டு. இவை முட்டைகளை தனித்தனியாக இளம் இலைகளிலும் மெல்லிய தண்டு, இலைக்காம்பு, குருத்திலைகள் மற்றும் பூக்கள், பூக்காம்புகள் என்பனவற்றில் இடுகின்றன. ஏறக்குறைய ஒரு பெண் மாவிலைத் தத்தி 200 முட்டைகளை இடுமென்றால் எவ்வளவு விரைவாக அவை பெருகும் என்பதனை இதிலிருந்து அறியலாம். முட்டை 4-7 நாட்களில் பொரித்துவிடும். வெளிவரும் அணங்கு மெல்லிய இளம் இலைகளிலிருந்து குத்தியுறிஞ்சும் வாயுறுப்பின் மூலம் சாற்றை உறிஞ்சத் தொடங்கிவிடும்.

அணங்கு 8-13 நாட்களில் நிறைவுடலி தத்தியாகிவிடும். புதிய இலைகள் அரும்பியிருக்கும் போதும் தொடர்ந்து பூக்கும் போதும் இத்தத்தியினது எண்ணிக்கை திடீரென அதிகரித்து இலைகள் சுருங்கி கருகி உதிர தொடங்கும். அதேபோல பூக்கள் உதிர்ந்து சொரியலாக மாமரத்தின் கீழே கொட்டப்பட்டிருக்கும். மாமரத்திற்கு கீழே இத்தத்திகளினால் சுரக்கப்படும் தேன் சுரப்பு விடுவதால் அத்தேன் சுரப்பில் வளரும் கருமை நிற பூஞ்சணம் கீழிருக்கும் பகுதிகளை கருமை நிறமுள்ளதாக்கிவிடும். அநேகமான இலைகள் கருமை நிறமாவதற்கு தத்தியின் தேன் சுரப்பில் வளரும் கருமை நிற பூஞ்சணமே காரணம்.

ஆக மொத்தத்தில் துளிர்த்த இலைகள் பாரிய அளவில் உதிர்ந்து விடுவதும் பூக்கள் உருவாகியவுடனேயே பாரிய அளவில் உதிர்ந்து விடுவதும் மாமரத்தில் பிஞ்சு தங்குவதற்கு இடையூறாக பாரியதொரு தாக்கமாக இருக்கின்றது. தத்திகளின் சாறு உறிஞ்சும் வேகத்திற்கும் அளவிற்கும் விரிந்து வளர்ந்த மாமரமே ஆடிப்போய் விடுகின்றது. இதனால் உருவாகும் காய்களின் எண்ணிக்கை ஒரு சிலவாகவே காணப்படும். விளைச்சலில் இதுவொரு பெரிய வீழ்ச்சி.

தத்திகளை கட்டுப்படுத்த ஆரம்பத்தில் ஊடுபுகுந்து தாக்கும் (Systemic pesticides) பீடை நாசினிகளை விசிறலாம். ஆனால் மாமரத்தை வீடுகளில் வளர்த்திருப்போர் மிகவும் அவதானமாக இப்பீடைநாசினிகளை தெளித்தல் வேண்டும். மேலும் மாமரத்தின் கீழிருந்து புகையூட்டலும் இத்தத்திகளின் எண்ணிக்கையை குறைக்கும். வேறு வழியில் மாமரத்தின் கிளைகளை முன்னதாகவே ஐதாக்கி சூரிய ஒளி மரமெங்கும் பட விடுதலும் நல்லது. அனைவரும் இணைந்தால் இதனது தாக்கத்தை ஓரளவிற்கேனும் கட்டுப்படுத்தலாம். (வளரும்)

# உடுவில் கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டமட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு.

**பிரிவு-1**

**எழுத்தாக்கம்**

சு.ஸனோஜா (யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி), சி. தயானுஜன் (யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி), ப.கோபிகா (யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தி)

**வாசிப்பு**

சி.சிந்துஜா (யா/ தாவடி இ.த.க. பாடசாலை), த.சாருஜா (யா/ ஸ்கந்தவரோதய ஆரம்ப்பபாடசாலை), ச.டர்சிகன் (யா/ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை)

**பேச்சு**

அ.சுகந்தினி (யா/ ஏழாலை மகா வித்தி), சி.அனோஜா (யா/இணுவில்மத்திய கல்லூரி), ஞா. துஷானா (யா/ சங்குவேலி அ.த.க. பாடசாலை)

**பாவோதல்**

சி.சிவகரனிகா (யா/ ஏழாலை மகா வித்தி), ப.சௌமியா (யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி,வி.திலக்ஷனா (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி

**கதை கூறுதல்**

சி.அபிஷேன் (யா/ சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தி,வி. புருசோத்தமன் (யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை), மு. கவியரசன் (யா/ தாவடி இ.த.க. பாடசாலை)

**இசையும் அசைவும்**

ச.மிலக்ஷா (யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை), அ.அனிற்றா (யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தி, க.பவிஜா (யா/ ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை)

**பிரிவு-2**

**கட்டுரை**

வி.தேனுஜா (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி,ப.மைதிலி (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சா.மதுசாஜினி (யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

**வாசிப்பு**

சி.சுஜீவன் (யா/ ஏழாலை சைவ மகாஜனா வித்தி, ந.டிசாலினி (யா/ இணுவில் இந்துக் கல்லூரி), மு.உசாந்திகா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி)

**பேச்சு**

லோ. கிரிசதன் (யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி), ஜீ. நிருசிகா (யா/ புன்னாலைக் கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி, து.கம்சாயினி (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி

**பாவோதல்**

யூ.விபர்சனா (யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி,சி.கம்சிகா யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி),ர.மேதினி (யா/ ஏழாலை மகா வித்தி

**இசை தனி**

சி.கீதா (யா/ இராமநாதன் கல்லூரி) ம. அட்சயா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), ஆ.கயந்தன் (யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

**நடனம் தனி**

சி.பிரவீனா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), ப.தனுஜ்ரிகா (யா/ இணுவில் இந்துக் கல்லூரி),கு.தேவேஸ்வரி (யா/ இராமநாதன் கல்லூரி)

**பிரிவு-3**

**கட்டுரை**

த.கேசிகா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஜெ.ஜெஸ்மி (யா/தாவடி இ.த.க. பாடசாலை), கி.தாங்கி (யா/ ஏழாலை சைவ மகாஜனா வித்தி

**பேச்சு**

க.ஆருண்யா (யா/ இணுவில் மத்திய கல்லூரி),சி.கயிலினி (யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி),சி.விதுஷா (யா/ புன்னாலைக் கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி,க.சுபாசினி (யா/ இராமநாதன் கல்லூரி)

**பாவோதல்**

க.கனுசியா (யா/புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தி,ர.கலைக்ஷிகா (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி),ர.லோகீதா யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி), எஸ். கம்சாயினி (யா/ இராமநாதன் கல்லூரி)

**இசை தனி**


இ.விதுசன் (யா/ இணுவில் இந்துக் கல்லூரி), ந.தேவமிர்கா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), சு.ஜனனி (யா/ இராமநாதன் கல்லூரி).

(அ-7-78)

(தொடரும்)

# அண்டார்டிக்காவில் பனி உருகுகிறது ; கடல் நீர்மட்டம் உயரும் அபாய நிலை

## விஞ்ஞானிகள் அதிர்ச்சித்தகவல்



பருவநிலை மாற்றம் காரணமாக பனிப்பிரதேசமாக அண்டார்டிகாவில் பனிப்படலங்கள் உருவாகி வருவது விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது. தற்போது மேலும் ஒரு பனிப்படலம் உருக தொடங்குவதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஜேர்மனியை சேர்ந்த ஆல்பிரட் வேகனர் துருவ ஆராய்ச்சி மற்றும் கடல் ஆய்வு மைய விஞ்ஞானிகள் இது குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டனர். அதில் மிகப்பெரிய பனிப்படலம் ஒன்று அண்டார் டிகாவில் மிதந்து கொண்டிருக்கின்றது.

இந்த நூற்றாண்டு இறுதிக்குள் 4 இலட்சத்து 50 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் அளவுக்கு அது உருகிவிடும். இதன்மூலம் கடல் நீர் மட்டம் படிப் படியாக உயூரும்.

ஆண்டுக்கு 4.4 மில்லி மீற்றர் அதிகரிக்கும். இதனால் கடலுக்கு நடுவில் இருக்கும் சிறிய தீவு, நாடுகள் மிகப்பெரிய ஆபத்தை சந்திக்க நேரிடும். இந்த தகவலை ஆய்வு மைய தலைவர் டாக்டர் ஹர்மட் ஹெல்மர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நேபாளத்தை இனஅடிப்படையில் மாநிலங்களாக பிரிக்க எதிர்ப்பு

(காத்மண்டு)

நேபாளத்தை இனத்தின் அடிப் படையில் மாநிலங்களாகப் பிரிப் பதற்குப் பல்வேறு இனத்தவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகி ன்றனர்.

இதைத் தொடர்ந்து நாடுமுழு வதும் பல்வேறு இனத்தவர்கள் நேற்றுமுன்தினம் விடுத்த வேலை நிறுத்தப்போராட்டத்தினால் மக்க ளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது. போராட்டத்தைத் தொடர்ந்து தலைநகர் காத்மண்டுவில் பெரிய நிறுவனங்கள்,பாடசாலைகள், கல் லூரிகள், கடைகள், தொழிற்சாலை கள் ஆகியன மூடப்பட்டன.

நேபாள நாடாளுமன்றத்தின் அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு வருகிறது. அதனை எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் முடிக்க அரசு முய ற்சித்து வருகிறது. ஆனால் எதன் அடிப்படையில் மாநிலங்களாகப் பிரிப்பது என்ற தெளிவில்லா நிலை யேற்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியிலும் மக்கள் தொகை அடிப்படையிலும்தான் மாநிலங்களாகப் பிரிக்கவேண் டுமேதவிர இனத்தின் அடிப்படை யில் பிரிக்கக்கூடாது என வலியு றுத்தி பிராமணர்கள், சத்திரியர்கள், எக்தா, சமாஜ் உள்ளிட்ட 8 சமூகத் தைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டர்காரர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அவர் கள் போராட்டத்தைக் கைவிட்டனர். பேச்சுவார்த்தை நடத்த மாவோயி ஸ்ட் தலைவரும் அமைச்சருமான பர்ஷாமன் புன்னை நியமித்துள்ள தாக பிரதமரின் ஆலோசகர் ராம் ரிஜான் யாதவ் தெரிவித்தார். (அ-2)


# எதிரியின் இலக்கை தாக்கியழிக்கும் ஹத்ப்-3 ஏவுகணை விண்ணில் பாய்ந்தது

பாகிஸ்தான் அணுகுண்டை சுமந்து செல்லவல்ல ஹத்ப்- 3 என் னும் ஏவுகணையை விண்ணில் ஏவி சோதனை செய்துள்ளது. இந்த ஏவுகணை 290 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று எதிரியின் இல க்கை தாக்கவல்லது. இராணுவ அதிரடிப் படை வீரர்களின் பயிற்சி நிறைவு விழாவையொட்டி அணு குண்டை சுமந்து செல்லும் இந்த ஏவுகணை சோதனை நேற்று முன் தினம் நடைபெற்றது.

கடந்த மாதம் இந்திய அக்னி- 3 ஏவுகணை சோதனை வெற்றி கரமாக நடத்தியது. அந்த ஏவுக ணை ஒரு தொன் எடை கொண்ட அணு ஆயுதங்களை சுமந்து சென்று 5 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவு இலக்கை தாக்கி அழிக்கும் திறன் படைத்தது.

இந்தியாவுக்கு போட்டியாக நாங் களும் ஏவ்கணை சோதனை நட த்து வோம் என்று கூறிய பாகிஸ் தான் அடுத்த 6 தினங்களில் ஏவு கணை சோதனை நடத்தியது.

ஹாட்க்-4 என்று பெயரி டப்பட்டுள்ள அந்த ஏவுகணையின்



சோதனை வெற்றிகரமாக நடத்தப் ட்டது. அந்த ஏவுகணை மூலம் இந்தி யாவில் உள்ள எந்த இலக்கை யும் வைத்து தாக்குதல் நடத்த முடியும்.

இது குறித்து இராணுவ அதி காரி காலித் ஷமீம் குறிப்பிடுகை யில்,

எந்தவித அச்சுறுத்தலையும் முறியடிக்கும் வல்லமையை பாகிஸ் தான் பெற்றுள்ளது என்றார்.(அ-2)

## மீண்டும் ஜனாதிபதியான புடினுக்கு வாழ்த்து தெரிவித்த ஒபாமா

ரஷ்ய ஜனாதிபதியான விளாடிமிர் புடின் கடந்த 7 ஆம் திகதி பதவி ஏற்றுக்கொண்டார். இதையடுத்து நேற்று முன் தினம் வரை அமெரிக்க ஜனாதி பதி ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

இரண்டாம் உலகப்போர் வெற்றி தினத்தையொட்டி இரு வரும் வாழ்த்துக்களை பரிமா ற்றிக் கொண்டனர். மேலும் இரு தரப்பு உறவுகளை மேம்படுத் துவது குறித்தும் ஆலோசித் தனர்.


எதிர்வரும் 18 ஆம் திகதி அமெரிக்காவில் தொடங்கும் ஜி 8 மாநாட்டில் தன்னால் கலந்து கொள்ள முடியாது என்று பிரத மர் மெத்வதேவை அனுப்பி வைத்ததாகவும் ஒபாமாவிடம் புடின் தெரிவித்தார். (அ-2)

# 2013 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நிறைவேறியது

(வோஷிங்டன்)

அமெரிக்க நாடாளுமன்றக்குழு 2013ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மசோதாவை கடந்த 2 நாட்கள் முன்பு வெளியிட்டது. தீவிர வாதிகளை ஒழிக்க அமெரிக்க படைக்கு ஒத்துழைப்பு தரும்வரை பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள், நிதி உதவி செய்யப்படாது.

தீவிரவாதத்தை ஒழிக்க பாகிஸ்தான் எடுக்கும் நடவடிக்கைளுக்கு ஏற்ப உதவிகள் செய்யப்படும் என அந்த மசோதாவில் நிபந்தனை விதிக்கப்பட்டது. இது நாடாளுமன்ற குழுவில் நேற்று முன்தினம் அதிக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. (அ-2)



ஜேர்மனி மற்றும் இந்திய இருதரப்பு பொருளாதார கவட்டத்தில் சந்தித்த இந்திய வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சர் ஆனந்த் சர்மா மற்றும் ஜேர்மனி பொருளாதார தொழில்நுட்ப துறை அமைச்சர் பிலிப் ரோஸ்லரையும் படத்தில் காணலாம்.

# உலக தரிசனம்

## சியாச்சின் எல்லைப் பிரச்சினை குறித்து ஆராய பாகிஸ்தான்- இந்திய அதிகாரிகளிடையே பேச்சு

(இஸ்லாமாபாத்)



சியாச்சின் எல்லை பிரச் சினை குறித்து இந்திய – பாகிஸ் தான் அதிகாரிகள் இஸ்லா மாபாத்தில் அடுத்த மாதம் பேச்சு வார்த்தை நடத்துகின்றனர்.

இந்தியா- பாகிஸ்தான் இடையே காஷ்மீர் சியாச்சின் மலைப்பகுதிகளில் எல்லை பிரச்சினை நிலவுகின்றது. இது குறித்து இரு நாட்டு வெளியுறவுத்துறை செயலர்கள், அமைச்சர்கள், பிரதமர்கள் இடையே தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்தும் இதுவரை எந்த முன் னேற்றமும் ஏற்படவில்லை.

சியாச்சினில் படைகளை குறைப்பது எல்லை கட்டுப்பாட்டு கோடு பிரச்சினை குறித்து கடந்த ஆண்டு இந்திய- பாகிஸ்தான் இராணுவ செயலர்கள் அளவில் பேச்சு நடந்தது. இதில் எந்த முடிவும் எடுக் கப்படவில்லை.

இந்நிலையில் சமீபத்தில் சியாச்சின் பனிமலைகள் நொறுங்கி சரிந்ததில் பாகிஸ்தான் வீரர்கள் 150 பேர் பரிதாபமாக பனியில் புதைந்து பலியாயினர். இந்திய தரப்பிலும் வீரர்கள் இறந்துள்ளனர். இதையடுத்து சியாச்சினில் உள்ள முகாம்களில் படைகளை குறைக்க வேண்டும் என்று இரு நாடுகளும் கூறின.

இந்நிலையில் இந்திய- பாகிஸ்தான் இராணுவ செயலர்கள் கூட்டம் எதிர்வரும் ஜுன் மாதம் 11, 12 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் நடக்கிறது. அப்போது சியாச்சின் எல்லை பிரச்சினை குறித்து விரிவாக ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் முசாம் கான் கூறியுள்ளார். (அ-2)

# பாகிஸ்தானில் பாடசாலை பாடநூல்களில் வரலாற்று தகவல்கள் பிழையாக அச்சடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க இரட்டை கோபுரங் கள் கடந்தாண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி தகர்க்கப்பட்டன என்று பாகிஸ்தானில் 5 ஆம் வகுப்பு பாட புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோல் பல பிழைகள் இடம் பெற்றுள்ளதால் கடும் எதிர்ப்பு கிளம் பியுள்ளது.

பாகிஸ்தான் கைபர் பக்துன் கவா மாநிலத்தில் 5 ஆம் வகுப்பு பாட புத்தகத்ட்டுள்ளன. இந்த புத்த கங்கள் பாசடாலை மாணவர்கள க்கு இலவசமாக விநியோகம் செய் யப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்க நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரங்கள் கடந்த ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இரட்டை கோபு ரங்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி தகர்க் கப்பட்டது. இதேபோல் பாகிஸ்தா னில் நாடாளுமன்ற தேர்தல் அடு த்த ஆண்டு 2013 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

ஆனால் 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடக்கின்றது என்று புத் தகத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த பிழைகள் குறித்து பக் துன் கவா மாநில சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்பி கடும் எதிர்ப்பு தெரிவித் தனர்.

புத்தகத்தில் உள்ள பல பிழை களை உறுப்பினர்கள் சட்டசபை யில் படித்துக் காட்டி ஏராளமான பிழைகளை தெரிவித்தனர்.

இந்த பிழைகளை சுட்டிக் காட் டிய முப்தி சயத் ஜனான் என்ற உறுப்பினர் வரலாற்று தகவல் களை இதேபோல் தவறாக கொடுத் தால் இந்த அரசை மக்கள் எப்படி நம்புவார்கள் என்று தனது அதிர்ச் சியை வெளிப்படுத்தினார். (அ-2)

# ஈழத்தமிழர்களை பாதுகாக்க மத்திய அரசு முன்வரவில்லை

## பா.ஜ.க.மாநாட்டில் தெரிவிப்பு

இலங்கையில் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட போது அதை மத்திய அரசோ அதன் மாநிலக் கூட்டாளியான தி.மு.கவோ தடுப்பதற்கு முன்வர வில்லை என்று பா.ஜ.கவின் தேசிய தலைவர் நிதின் கட்காரி குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் நேற்று முன்தினம் ஆரம்பமான பா.ஜ.கவின் மாநில மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றிய அவர் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட விவகாரம் மற்றும் தமிழ் நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களுக்கு இலங்கை முக்கியமாகப் பதிலளிக்க வேண்டும் என்று இலங்கையிடம் கூறியுள்ளேன்.

சுஷ்மா சுவராஜின் பயணத்தின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு கொடுத்தனுப்பிய செய்தி ஒன்றில் இடம்பெயர்ந்த தமிழர்களின் புனர்வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன்.



தமிழர் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்தும் இலங்கை அரசை மத்திய அரசு கண்டித்து தமிழர்களை மீள்குடியமர்த்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இடம்பெயர்ந்த தமிழர்களின் புனர்வாழ்வுக்கு எல்லா நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

அங்குள்ள தமிழர்களின் புனர் வாழ்வுக்கு உதவி செய்யவும் தமிழ் நாட்டு மீனவர்களின் உரிமையை நிலை நாட்டவும் இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததுடன் இந்தியாவின் பங்கு முடிந்து விடவில்லை. அது இன்னமும் செய்ய வேண்டியுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்கள் இன்னமும் தொடர்கின்றன. இந்தியா அணுசக்தி வல்லமை பெற்ற நாடாக இருந்த போதும் சிறிய நாடு ஒன்றின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அந்தத் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

# பாகிஸ்தான், சீனாவை கவனிக்கிறது இந்தியா

சீனா, பாகிஸ்தானின் செயற்பாடுகளை இந்தியா கவனித்து வருவதாக மத்திய இராணுவ அமைச்சர் அந்தோணி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு பாகிஸ்தான், சீனா நாடுகளின் செயற்பாடுகள் அவ்வப்போது அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் எழுத்து மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணி அளித்த எழுத்து பூர்வமான பதிலின் அண்டை நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் நிகழும் அனைத்து சம்பவங்களையும் அவர்களது செயற்பாடுகளையும் மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகின்றது என்றும் இந்நாடுகளின் மூலமாக இந்தியாவிற்கு அச்சுறுத்தல் ஏதேனுமிருப்பின் அவை குறித்து உடனுக்குடன் அறியப்படுகிறது. என்றும் தெரிவித்தார்.

நாட்டின் எல்லைப் பகுதிகளை பாதுகாக்கும் நோக்கத்தில் அங்கு ரயில் பாதைகள், வீதிகள், விமானத் தளங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

அருணாச்சல பிரதேசத்தில் சீனாவுடன் எல்லைப் பிரச்சினை இருந்து வருகின்றது. இதற்கு சர்வதேச எல்லை அங்கு வரையறுக்கப்படவில்லை. எனவே இரு தரப்பும் கண்காணிப்பிலும் பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (7)

# மாற்றுத் திறனாளிகளுக்காக நவீன மையம் அமைக்கத்திட்டம்

சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் ஜெயலலிதா வாசித்த அறிக்கை மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் அதாவது கண்பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேசமுடியாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்கள், கற்றலில் குறைபாடு, தசை சிதைவு, மூளை முடக்குவாதம், டவுண் சிண்ட்ரோம் உள்ள குழந்தைகளுக்கும் அவர்களின் இயலாத் தன்மை வகை மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை உள்ளடக்கிய கல்வியை வழங்கப் படுகின்றது.

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல் இக் குழந்தைகளின் தேவைகளை பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் வகை யில் நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வளமையம் சென்னையில் அமைக்கப்படவுள்ளது.



இம்மையத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மற்றும் சுகாதாரத்துறை ஒருங்கிணைப்புடன் செயற்படும் சிறப்பு மருத்துவர்கள், வாழ்வியல் திறன் பயிற்சி வல்லுநர்கள், பேச்சு பயிற்சி வல்லுநர்கள் மற்றும் வெவ்வேறு குறைபாடுகளுக்கான ஆலோசகர்களின் தொழில்நுட்ப உதவிகளை மாற்றுத்திறன் கொண்டவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பெற வழிவகை செய்யப்படும்.

அவர்களது குறைபாட்டின் தன்மையை கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும் அதற்குத் தேவையான உபகரணங்களை மாற்றத் திறனாளிகளுக்கு வழங்கவும் இம்மையம் முன்னோடியாக விளங்கும். மாற்றத் திறனாளிகளுக்கு அரசால் வழங்கப்படும் சான்றிதழ்கள், உதவித் தொகைகள் மற்றும் தேவையான உதவிகளை பெறுவதற்கு இம்மயம் வழிவகை செய்யும்.

இந்தியாவிலேயே முன்னோடியாக தமிழகத்தில் தொடங்கப்பட இருக்கும் இம் மாநில ஆதார வளமையம் மற்றும் அரசால் வழங்கப்படும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி, சிகிச்சை ஆகியவை இக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களின் வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிவகை செய்து கொடுக்கும் என்பது திண்ணம். (அ-7)

# கஞ்சா கடத்த முயன்ற இலங்கையர் நால்வர் வேளாங்கண்ணியில் கைது

வேளாங்கண்ணியில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்த முயன்ற இலங்கை தமிழர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 16 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் இருந்து இலங்கைக்கு சிலர் கஞ்சா கடத்த இருப்பதாக க்யூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில் வேளாங்கண்ணி அருகில் உள்ள பிரதாபராமபுரம் பிரிவு சாலையில் நேற்று பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது 4 பேரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தனர். அவர்கள் பவானிசாகரில் உள்ள இலங்கைதமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த தில்சான் (வயது30), வேலூர் முகாமை சேர்ந்த சுதர்சன் (வயது 33), நாமக்கல் முகாமை சேர்ந்த தேவரூபன் (வயது 30), இலங்கையை சேர்ந்த கண்ணன் (வயது 36) என்பது தெரியவந்தது.

பொலிஸ் சோதனையின் போது அவர்களிடம் தலா 4 கிலோ வீதம் 16 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து க்யூ பிரிவு பொலிஸார் அவர்களை மாவட்ட போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்த னர். மாவட்ட போதைப் பொருள் நுண்ணறிவு பொலிஸ் வழக்குப் பதிந்து 4 பேரையும் கைது செய் தனர். 16 கிலோ கஞ்சாவும் பறிமு தல் செய்யப்பட்டது.

(அ-7)






இயற்கை எரிவாயு கொண்டு செல்லும் குழாய் தொடரமைப்பு திட்டங்களை தமிழகத்தில் செயற்படுத்தும் வகையில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் மற்றும் ***கெய்ல் இந்தியா*** நிறுவனம் இடையே சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் ஒப்பந் தம் கையெழுத்திடப்பட்டது.

# இலங்கையில் தமிழர்கள் தனிஈழம் கேட்கவில்லை

## மதுரை மாநாட்டில் சுஷ்மா தெரிவிப்பு

இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட இலங்கையை விரும்பும் போது நீங்கள் ஏன் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள் என்று தமிழக கட்சிகளுக்கு லோக்ஷபா எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் கேள்வி எழுப்பினார்.

மதுரையில் நேற்று பா.ஜ.க. மாநாட்டில் பேசியபோது இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து ஆய்வு செய்ய எனது தலைமையில் பல்வேறு கட்சிகளை சேர்ந்த 12 எம்.பிக்கள் குழு அமைக்கப்பட்டது. ஆனால், அ.தி.மு.க.,தி.மு.க. தங்களது எம்.பிக்களை அனுப்பவில்லை. அதற் கான காரணம் தெரிய வில்லை.

எங்கள் குழுவின் பயணம் சுற்றுலா பயணம் என்றும் தமிழர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் வெறும் கையுடன் திரும்பியதாகவும் கூறுகிறார்கள். அவர்கள் எண்ணம் தவறா னது. இலங்கையில் எங்கெங்கு செல்ல வேண்டும் என்று நாங்கள் தான் முடிவு செய்தோம். அங்கு முகா மிற்கு அழைத்துச் செல்ல முதலில் மறுத்தனர். நாங்கள் அழுத்தம் கொடு த்ததன் காரணமாக அனுமதித்தனர்.

முகாமில் உள்ள தமிழர்களைப் பார்த்தபோது வெளிப்படையாக தங்கள் பிரச்சினைகளை கூறினர். அவர்களின் உணர்வுகளை இலங்கை அரசு பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறினோம். பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்வேறு தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேசினோம். நாங்கள் பிளவுபட்ட இலங்கையை விரும்பவில்லை. ஒன்றுபட்ட இலங்கையை விரும்புகி றோம். ஜனநாயக ரீதியான அர சியல் தீர்வு காண வேண்டும் என அவர்கள் கூறினர்.

தமிழக கட்சிகளை கேட்கிறேன். இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட இலங்கையை விரும்பும்போது நீங்கள் ஏன் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்கிறீர்கள். ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்த போது இலங்கை தமிழர் பிரச்சினை தமிழ்நாட்டுப் பிரச்சி னை அல்ல. ஒட்டுமொத்த இந்திய மக்களின் பிரச்சினை எனவும் எனது தலைமையிலான பாராளுமன்றக் குழுளங்களுக்கு கொடுத்த வேலையை திருப் தியாக செய்து முடித்துள் ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (7)

தண்டு தடிகள் பொல்லு கொண்டுவருதல் கண்டால் பெண்டில் பின்னால் நின்று சண்டித்தனங்கள் செய் யும்....

-வசந்தன் பாடல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குடும்பக்கட்டுப்பாடு வேண்டாம் தமிழ் இனத்தை பெருக்குங்கள்!

## அரியநேத்திரன் எம்.பி. அறிவுரை

(மட்டக்களப்பு)

எமது இனத்தின் வீழ்ச்சியின் பார தூரமான விளைவுகளிலிருந்து நாங்கள் காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால் தமிழர்களாகிய நாங்கள் எங்கள் இனத்தை பெருக்குகின்ற நடவடிக்கையை எதிர்காலத்தில் கட்டாய தேவையாகக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தேற்றாத்தீவு உதயம் விளையாட்டுக்கழகத்தின் 38ஆவது ஆண்டுநிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1981 ஆம்ஆண்டு இறுதியாக இடம்பெற்ற குடிசன மதிப்பீட்டில் இரண்டாவது இடத்திலிருந்த தமிழ் மக்களாகிய நாங்கள் தற்போது நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

முதலாம் இடத்தில் 73.6 வீதமாக சிங்கள மக்களும் இரண்டாவது இடத்தில் 7.1 வீதமாக இஸ்லாமிய மக்களும் மூன்றாவது இடத்தில் 4.9 வீதமாக மலையக மக்களும் நான்காவது இடத்தில் 3.9 வீதமாக வடகிழக்கில் இருக்கின்ற தமிழ் மக்களும் இருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவரவிருக்கிறது.

நாங்கள் கடந்த காலத்தில் யுத்தத்தினால் அழிந்திருக்கின்றோம். இடம் பெயர்ந்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல் ஆரோக்கியமான குழந்தைகளை உற்பத்திசெய்ய முடியாத நிலைமை கடந்த காலங்களில் எங்களுக்கு இருந்திருக்கிறது.

இரண்டாம் இடத்தில் இருக்கின்ற இனம் ஆளுமை சனத்தொகை போன்ற எல்லாவிடயங்களிலும்முன்னேறியிருக்கிறது.

எதிர்வரும் காலத்தில் இந்த பாரதூரமான விளைவுகளிலிருந்து நாங்கள் காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால் தமிழர்களாகியநாங்கள் எங்கள் இனத்தை கட்டாயம் பெருக்குதல் தேவை யாகும்.

எங்களுக்கு இப்போது குடும்பக்கட்டுப்பாடு தேவையில்லை. ஒரு குடும்பத்தில் 3 பிள்ளை என்பதை தயவுசெய்து விட்டுவிடுங்கள். ஒரு குடும்பத்திற்கு 5 அல்லது 6 பிள்ளைகள் தேவை என்பதை கருத்தில் கொள்ளுங்கள்.

எதிர்காலத்தில்தமிழர்கள்தமிழர்களாக வாழ வேண்டும் என்ற சிந்தனை இருப்பதனால்தான் இதைக் கூறுகிறேன். இப்போது இது உங்களுக்கு நகைச்சுவைக்குரிய விடயமாக இருக்கலாம்.

கடந்த பத்துவருடத்தில் தமிழர்களின் பிறப்பு வீதம் எந்தளவில் இருந்ததை என்பது பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 75.5 வீதமானவர்கள் தமிழர்கள் ஆவர். 24.5 வீதமானவர்கள் இஸ்லாமியர்கள்.

ஆனால் வரப்போகின்ற 2011ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரம் எங்களுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது. 30 தொடக்கம் 35 சதவீத இஸ்லாமியர்கள் இருப்பதாக புள்ளிவிபரம் வெளிவரப் போகின்றது.

நாங்கள் 65 வீத மாவது இருப்போமா என்ற ஏக்கம் இருந்து கொண்டிருக்கிறது என்றார். (ந-7)

# இனப்போர் முடிந்த இலங்கையில் மதப்போர் வெடிக்கும் அறிகுறி

முப்பது வருட கால இனப் போரால் இலங்கை சின்னா பின்னப்பட்டதுடன் வரலாற்றின் மிகப் பெரிய துயரமான வன்னிப் பெரு நிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகிப் போன கொடூரம் நடந்தேறியது.

போரினால் ஏற்பட்ட வடுக்கள் ஆறாத ரணமாகி இருக்கின்ற வேளையில்- போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தங்கள் மண்ணில் குடியிருக்க அனுமதிக்கப்படாத நிலையில்,

ஒரு சுமுகமான முடிபை எட்டுவதற்கு அரசு மறுப்புக் காட்டி வருகின்றது.

நடந்த யுத்தம், அதன் இழப்பு தந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இனியும் இந்த நாட்டில் யுத்தத்திற்கான முனைப்புகள் இருத்தலாகாது என்ற முடிபோடு சகல இனங்களும் ஒற்றுமையாக-இது எங்கள் தேசமென்ற நினைப்போடு வாழக்கூடியதான சூழமைவை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி இருக்கவேண்டும்.

எனினும் யுத்த வெற்றியால் அவர்கள் இறுமாப்படைந்து விட்டனர். இதனால் இனப்பிரச்சினக்கான தீர்வு என்பது பற்றிய சிந்தனை அவர்களிடம் அறவே இல்லை.

இத்தகைய பொறுப்பற்ற போக்கினால், இலங்கை மண்ணில் தற்போது மதப்பரப்புரைகள் ஏராளமாக-தாராளமாக நடந்தேறுகின்றன.

ஆட்சி மதம் என்ற அடிப்படையில் பௌத்த விகாரைகளை நாடுபூராகவும் அமைப்பதில் தீவிரமான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அதிலும் இந்து சமயம் சார்ந்த வரலாற்றுப் பெருமைமிக்க இடங்களில் பௌத்த விகாரைகளை அமைப்பதில் விசேட திட்டங்கள் அமுலாகுவது போலத் தெரிகிறது.

தம்புள்ளையில் உள்ள பள்ளிவாசலை அகற்றி அதனை பௌத்த விகாரைக்கான புண்ணிய பூமியாக பிரகடனம் செய்வதற்கு துணிந்து கொண்டமுறைகள்,

இந்து சமயத்தில் உள்ளவர்களை மதமாற்றம் செய்வதில் கங்கணம் கட்டிநிற்கும் குறிப்பிட்ட சில சபைகள்,

சைவாலயங்களில் இருக்கக்கூடிய வரலாற்றுச்சின்னங்கள், பெறுமதிவாய்ந்த பொக்கிஷங்களை கபளீகரம் செய்கின்ற- சேதப்படுத்துகின்ற கூட்டங்கள்,

இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது இலங்கை மண்ணில் இனப்போருக்கு அடுத்தபடியாக மதப்போர் நடப்பதற்கான சாத்தியங்கள் தராளமாக தெரிகின்றன.

உலகம் முழுவதும் விஞ்ஞானம் அறிவியல் சார்ந்து சிந்திக்கின்ற நேரத்தில்,இலங்கையில் மதங்களைப் பரப்புவதில் காட்டப்படும் ஆர்வம் இலங்கை மண்ணில் நடந்து முடிந்த போர் என்பது ஓர் இடைவேளை போன்றதே அன்றி நிரந்தரமானதல்ல என்றே எண்ணத்தோன்றுகின்றது.

எதுவாயினும் மதப்பரப்புகையை, இஸ்லாமியர்கள் துணிந்து எதிர்ப்பார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் சமயம் சார்ந்த சிங்களவர்களையும் இணைத்துப் போராடுவார்கள்.

பாவம் இந்து சமயம் எல்லாவற்றையும் பறிகொடுத்துவிட்டு பாலாவியில் நீராடவும் இடமின்றி பரிதவிக்கும்.

ஓம் சிவாயநம, என்று சொன்னால், நாலாம் மாடியில் விசாரணை என்ற நாடகமும் நடக்கும்.

# மாகாணசபை தேர்தல் நடத்துவது குறித்து அரசிடம் தீர்மானம் இல்லை

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகார கா ல எல்லை 2013 ஏப்ரல் மாதம் இறுதிவரை உள்ளது. ஆனால் சபையை கலைக்க வேண்டுமென முதலமைச்சர் ஆளுநரை கோரினால் கலைத்துவிட்டு தேர்தலை நடத்த முடியுமென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் பாராளு மன்ற தெரிவுக்குழு ஸ்தாபிக்கப் படலாமென்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ, மாகாண சபைகளை கலைத்து தேர் தல்கள் நடத்தப்படவுள்ளதாக ஊடகங் களில் விவாதங்கள் ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

ஆனால் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்திடம் எதுவிதமான தீர்மானமும் இல்லை. அத்தோடு இம் மாகாண சபைகளின் ஆட்சியதிகார கால எல்லை அடுத்த வருடம் ஏப்ரல், மே மாதங் கள் வரை உள்ளது. கிழக்கு மாகாண சபையின் ஆட்சியதிகாரம் அடுத்த வருடம் ஏப்ரல் மாத இறுதியிலேயே முடிபடைகின்றது.

ஆனால் சபையை கலைக்குமாறு முதலமைச்சர் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தால் சபையை கலைத்து தேர்தலை நடத்த முடியும் .

ஆனால் எதிர்க்கட்சிகள் இதனை எதிர்த்ததோடு பாராளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ள மாட்டோமென்றும் தெரிவித்தன. தற்போது இவ்விடயம் தொடர்பில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு வருகின்றது. விரைவில் பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப் படலாம்.

தலைவர்களின் வாரிசுகள் அரசியல்கட்சித்தலைவர்களின்பிள்ளைகளை அக்கட்சியின் அடுத்த கட்ட தலைவராக நியமிப்பதில் தப்பில்லை. இந்தியா, அமெரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளில் வாரிசுகள் தலைமைப் பதவி களை செயலாளர் பதவிகளை வகிக் கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-7)

# இராணுவச் சிப்பாய்க்கு மோத சிறைத்தண்டனை

நீதிமன்றத்தில் வைத்து ஊடகவியலாளரின் பணத்தை களவாடிய இராணுவ வீரருக்கு 6 மாத சிறைத் தண்டனை வழங்கி பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு கடந்த 27 ஆம் திகதி வழக் கொன்றிற்காக சென்ற ஊடகவியலாளரின் 10 ஆயிரத்து 20 ரூபாய் பணத்தை களவாடி குற்றத்திற்காக இராணுவவீரர் ஒருவர் பருத்தித்துறை நீதி மன்ற பொலிசாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றினால் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்றைய தினம் குறித்த இராணுவ வீரரை பொலிசார் நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். குறித்த இராணுவவீரர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண் டமையால் குற்றவாளியாகக்கண்டு மேற்படித்தீர்ப்பைவழங்கினார். (அ-3-24)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## எது செய்தாலும் பலன் நமக்கே

கடவுள் பிரமாண்டமான பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் மையம் எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்திருக்கிறது. அந்த மையம் தான் மனிதன்.



நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்த ஒரே வழி மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவி செய்வது தான்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடி கொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பின்னர் நான் புரிந்து கொண்டிருக்கின்றேன். மக்களுக்குச்சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மீக வாழ்வின் அடிப்படை. இதைக்கொண்டே ஒருவரின் ஆன்மீகத்தேடுதலை சோதிக்கவேண்டும். சுயநலம் இல்லாதவனே ஆன்மீக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான்.

தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதனால் நாம் நமக்கும் நன்மை செய்து கொள்கிறோம்.

ஆர்த்தெழுந்திருக்கின்றார் ம.தி.மு.கவின் பொதுச்செயலாளர் வைகோ. வாரம் இருமுறை இதழ் ஒன்று தன் சங்கப் பலகையில் சமர்செய்ய வைத்திருக்கிறது. தாக்குதல் கலைஞர் மீது அல்லவா? அவர்களுக்கு அமிர்தமே சாப்பிட்டது போலிருக்கும். மீண்டும் ஒரு லங்கா தகனத்திற்கு வழி வகுக்கிறார்கள். குன்று சூழ்வான் மகனே கிடைத்திருக்கிறார் விடுவார்களா?

வைகோவின் கட்டுரை நெடுகிலேயும் ஈழத்தமிழர்களுக்காக அழுவதை விட தி.மு.க.வில் இருந்தபோதும் பின்னரும் அவருக்கு நேர்ந்ததாக கருதுகிற இன்னல்களை நினைத்துத்தான் அதிகம் அழுதிருக்கிறார். அடுத்த வீட்டு இழவில் போய் தன் வீட்டு இழவை நினைத்துப் பந்தலிலே பாகற்காய் என்று பாடிய கதை தான். இப்போது அவர் பேரில் கோபத்தோடு பல விளக்கங்களை சொல்ல வரவில்லை. முன்பு போல அவர் அர்த்தமின்றி ஆத்திரப்படுவது அவர் உடல் நிலைக்கும் நல்லதில்லை. ஈழத்தமிழர்களுக்கும் நல்லதில்லை. இந்தத் தாக்குதல் தமிழீழ எதிரிகளுக்குத்தான் பயன்படும்.

தன்னுடைய கட்டுரை நெடுகிலேயும் இந்தமுறை தி.மு.க ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது நிகழ்ந்த சம்பவங்களை வரிசையாக அடுக்கி அவைகளுக்குக் காரணம் கலைஞரே என்று குற்றம் சாட்டியிருக்கிறார். ஒரு மத்திய அரசாங்கத்தின் அன்றாட இராணுவ நடவடிக்கைகள் மந்திரி சபையில் கூட்டணி கட்சிகளோடு வைத்து விவாதித்து முடிவெடுத்த பின்னர் தான் நடைபெறுவதில்லை என்பதை நீண்ட காலப் பாராளுமன்ற அனுபவமுள்ள வைகோ அறிந்திருக்க வேண்டும். அறியவில்லை என்றால் அது அவருடைய தவறு.

தமிழ் ஈழப்போர் என்பது கடந்த ஐந்தாண்டுகளாக மட்டும் நடக்கவில்லை. தமிழீழ விடுதலை இயக்கங்கள் களத்தில் நின்றபோதும் விடுதலைப் புலிகள் இயக்கம் முழுவீச்சில் போரிட்ட போதும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அப்போது அந்தப் போர்களில் வெற்றியும் கிடைத்ததுண்டு. பின்னடைவும் ஏற்பட்டதுண்டு. அப்படிப்பட்ட காலங்களிலெல்லாம் நடுவண ரசின் அமைச்சரவையில் வைகோவின் கட்சியைச் சேர்ந்த கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் போன்றவர்கள் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஏன் ஈழத்தமிழர்களுக்காக கலைஞருடைய தொண்டர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேறவில்லை என்று கேட்பதை போலவே நாமும் கேட்க முடியும். அப்படி கேட்டால் அது சிறுபிள்ளைத்தனமாய் இருக்கும்.

இந்த நெடிய போர் நடந்து கொண்டிருந்த காலங்களில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் தோழர் வைகோவும் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்திருக்கிறார். அப்போதெல்லாம் அவருடைய பங்களிப்பு என்ன? பிரதமரே... ஓடாதீர்கள்... நில்லுங்கள் என்று பாராளுமன்றத்தில் சடுகுடு விளையாட்டுத் தான் நடத்தினாரே தவிர வேறு என்ன செய்தார்கள்? காவிரிப் பிரச்சினைக்காக கட்சியையே எதிர்த்துப் பதவி விலகிய வாழப்பாடி இராமமூர்த்தியைபோல் ஈழத்தமிழர்களுக்காக எதையும் செய்ய வக்கற்ற இந்தப் பாராளுமன்ற பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை என்று ஏன் தூக்கி எறிந்து விட்டு வரவில்லை என்று இவர் கலைஞரைக் கேட்பதை போல் கேட்டு நாம் லாவணி பாட விரும்பவில்லை.

இலங்கையோடு இராணுவ ஒப்பந்தத்தை இந்தியா செய்த போது கலைஞர் அதை தடுக்க ஏன் முயலவில்லை என்று கேட்டிருக்கிறார். இந்த கேள்விக்கு மேலே இரண்டு பாராக்களில் சொன்ன பதிலே தோழர் வைகோவுக்கு தெளிவை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

அமைதிப்படை என்ற பெயரால் இந்திய இராணுவம் இலங்கை மண்ணில் அராஜகங்கள் செய்து விட்டு தோல்வி முகத்தோடு திரும்பி வந்தபோது அவர்களை வரவேற்கப் போகமாட்டேன் என்று- ஈழத்தமிழர்களுக்காக் மரபுகளை தன் தேய்ந்த கால் செருப்பைப் போல் தூக்கி எறிந்து நெஞ்சுயர்த்தி நின்றவர் கலைஞர்.

ஈழத்தமிழர்களுக்காகத் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர் கலைஞர். ஆனால் அவர்களுக்காகப் பதவியை மட்டும் அல்ல படிப்பணத்தையும் மேல்துண்டைக் கூட தியாகம் செய்யாதவர்கள் அவரைத் துரோகி என்று சொல்வது தான் காலத்தின் கோலம்.

ஈழத்தமிழர் பற்றிய எந்தப் பிரச்சினை வருகிற போதும் கலைஞர் நடுவண் அரசினிடத்திலேயும் இதழ்களிலேயும் தன்னுடைய கருத்துக்களையும் கண்டனங்களையும் உரிய முறையில் தெரிவித்துக் கொண்டுதான் இருக்கிறார். இது இவர்களுடைய மேலான பார்வைக்குப் படவில்லை என்றால் அது கலைஞருடைய குற்றமல்ல.




ஈழத்தமிழர்களுக்கு இலங்கைத் தூதுவரகம் முன்னால் போராட்டம் நடத்திய பழ.நெடுமாறன்- பாவலர் ராமசந்திரன்- சசிகலாவின் கணவர் நடராஜன், வைகோ போன்ற ஆயுதப் போராட்ட இயக்க போராளிகளை ஒரே சிறையில் அடைக்காமல் ஏன் நான்கு தனித்தனி சிறைச்சாலைக்கு கருணாநிதி அனுப்பினார் என்று இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த- அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியை வைகோ கேட்டிருக்கிறார். என்ன செய்வது? பாவம் கலைஞர்! சிறைக்குள் இருந்தபடியே இவர்கள் தங்கள் ஆற்றல்மிக்க பேச்சு வன்மையால் பல இலட்சம் பேர்களைக் கொண்ட இந்திய இராணுவத்தை கிளர்ந்தெழச் செய்து முப்படைகளையும் ஒருங்கிணைத்து ஒரு இராணுவப் புரட்சியை உருவாக்கித் தன் இராஜதந்திரத்தால் மன்மோகன் அரசையும்- கலைஞரின் அரசையும் எங்கே கவிழ்த்து விடுவார்களோ என்ற பயம்தான்!!!

ஈழத்தில் தளபதி தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார் என்ற செய்தி பேரிடியாய் வந்து விழுந்தது. முதலமைச்சர் கலைஞர் பகிரங்கமாய்த் தன் இரங்கலை தெரிவித்தார். அந்நிய நாட்டில் ஓர் அங்கீகாரம் பெறா புரட்சி அரசாங்கத்தின் தளபதி ஒருவன் மாண்டு போயிருக்கிறான்.

இந்திய அரசியல் சட்டப்படி சட்டத்திற்கு கட்டுப்பட்டு- இந்திய இறையாண்மையைக் காப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்ட ஒரு முதலமைச்சர் இப்படி ஓர் அறிவிப்பை செய்வதற்கு எத்தகைய துணிச்சல் வேண்டும். நெஞ்சுரம் கூட அல்ல. இலட்சிய ஈடுபாடு வேண்டும். இதை ஒரு கணமாவது ஈழ வியாபாரிகள் எண்ணிப் பார்த்ததுண்டா?

துண்டு துணி இல்லாத வழிப் போக்கர்களைப் பற்றி கவலையில்லை. இந்தக் காரணத்தை சொல்லியே நடுவணரசு கலைஞரின் அரசைப் பதவி நீக்கம் செய்திருக்கவும் முடியும். தேசத் துரோகக் குற்றவாளியாக்கவும் முடியும். ஆனால் இந்த விளைவுகளுக்கு அணியமாகத்தான் கலைஞர் நின்றார்.

ஈழ விடுதலை ஆதரவாளர்கள் பல பேர் இறந்த போது பட்டு பீதாபரங்களோடு விழா கொண்டாடினார் கலைஞர் என்று தரமற்ற குற்றச்சாட்டை சொல்வது சரி என்று வைகோவின் மனமே ஏற்றுக் கொள்கிறதா? மாவீரன் திலீபன் தொடங்கி புலேந்திரன், கிட்டு என்று இன்னும் எண்ணிலடங்காப் போராளிகள் இறந்து கொண்டு தான் இருந்தார்கள்.

இன்றைக்கு கலைஞரைக் குற்றம் சொல்கிற அத்தனை பேர் வீட்டிலேயும் இந்த இருபது ஆண்டுகளாக பிறந்தநாள் விழாக்களே இல்லையா? திருமண விழாக்கள் நடக்கவில்லையா? பசி நேரத்தில் கூட பல்லைக் கடித்துக் கொண்டு பலர் உட்கார்ந்திருக்க வாழ்த்துரைகள் நடக்கவில்லையா? பயிற்சி முகாம்கள் நடக்கவில்லையா? அங்கே பல்சுவை விருந்து நடக்கவில்லையா? பிரியாணிகளின் வாசனை ஊரையே உலுக்கவில்லையா? திருமணம் செய்து கொண்டவர்கள் எல்லாம் திலீபனையே நினைத்துக் கொண்டு முதலிரவு கூட நடக்காமல் சோகத்தில் முடங்கிக் கிடந்தார்களா? கேள்விகள் தர மாய் இருந்தால் தான் பதிலும் முறையாய் இருக்கும். (தொடரும்)

நக்கீரன்

# ஐ.சி.சி. புதிய சி.இ.ஓ. டேவ் ரிச்சட்ஸன் தெரிவு

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக சர்வதேசக் கிரிக்கெட்சபையின் தற்போதைய பொது முகாமையாளரான டேவ் ரிச்சட்ஸன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியான ஹரூன் லோகார்ட்டின் பதவிக் காலம் நிறைவடையவுள்ளதை அடுத்தே புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மும்பையில் இடம்பெற்று வந்த சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தேர்வுக்குழு கலந்துரையாடல்களை அடுத்தே டேவ் ரிச்சட்ஸன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜூன் மாதத்தில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்த மாநாட்டில் வைத்து புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவர் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுவார்.

ரிச்சட்ஸனுக்கு போட்டியாக காணப்படுவார் என கருதப்பட்ட இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவிட் கொலியரை ரிச்சட்ஸன் தனது அனுபவம் காரணமாக தோற்கடித்துள்ளார். சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நிர்வாக மட்டத்தில் டேவ் ரிச்சட்ஸனுக்கு காணப்பட்ட அனுபவம் காரணமாக தேர்வுக்குழுவினர் அனைவரும் ஒட்டுமொத்தமாக இணைந்து டேவ் ரிச்சட்ஸனைத் தெரிவு செய்துள்ளனர்.

தனது தெரிவு தொடர்பாக மகிழ்ச்சியை வெளிப்படுத்திய டேவ் ரிச்சட்ஸன், இப்பதவிக்கு தான் தெரிவுசெய்யப்பட்டிருப்பது மிகுந்த பெருமை தரக்கூடிய ஒன்று எனவும் தெரிவித்தார்.

இந்த வாய்ப்பிற்காக சர்வதேச கிரிக்கெட் சபைக்கும் அதன் தெரிவுக்குழுவிற்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டேவ் ரிச்சட்ஸன், தென்னாபிரிக்க அணி சார்பாக 42 டெஸ்ட் போட்டிகள்,122 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றிய விக்கெட் காப்பாளர் ஆவார்.

இதன் மூலம் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற பதவியை வகிக்கும் முதலாவது டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி வீரர் என்ற பெருமையை அவர் பெறவுள்ளார்.

# புனேயை 25 ஓட்டங்களால் வென்றது பெங்களூர்

ஐ.பி.எல்.போட்டியின் 57-வது லீக் ஆட்டம் நேற்றிரவு புனேயில் நடைபெற்றது.

இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும், புனே வாரியர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புனேவாரியர்ஸ் அணியின் தலைவர் பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.

ஆனால் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே பலத்த மழை பெய்ததால் போட்டி ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது.

பின்னர் மழை நின்ற பின்னர் ஆட்டம் ஆரம்பமானது.

பெங்களூர் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய டில்ஷானும் ஹெயிலும் சிறப்பான ஆரம்பத்தை அளித்தனர்.

அதிலும் ஹெயில் அதிரடியில் கலக்கியதோடு சிக்சர்களையும் பறக்கவிட்டார்.

31 பந்துகளில் 5 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஹெயில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்து ஹோலி 9 ஓட்டங்களில் வெளியேறினார்.

டில்சான் 53 ஓட்டங்களில் ரன் அவுட் முறையில் வெளியேறினார்.

திவாரி மற்றும் டி வில்லியர்ஸ் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 36,9 ஓட்டங்களைப் பெற 20 ஓவர் முடிவில் பெங்களூர் அணி 3 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது புனே வாரியர்ஸ் அணி.

ஆனால் புனேயிற்கு ஆரம்பமே அதிர்ச்சியானது.

முதல் ஓவரிலேயே மிஷ்ரா, பான்டே இருவரையும் இழந்தது.

பின்டும்சீரான இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்க்ளையே பெற முடிந்தது.

இதனால் பெங்களூர் அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹெயில் தேர்வானார்.

# டொனால்ட் கணேசகுமார் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். சென்றலைற்ஸ் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்படும் இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 கிறிக்கெட் அணிகள் பங்குபற்றுகின்றன. இன்றைய ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளது.

இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் 6 வருடங்களின் பின் மீண்டும் இவ்வருடம் ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)



நேற்று முன்தினம் மாலை சென் அன்ரனிஸ்-சென்.பற்றிக்ஸ் அணிகள் மோதிய உதை பந்தாட்ட போட்டி ஹாட்லி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில்3:0 என்ற கணக்கில் சென்.பற்றிக்ஸ் அணி வெற்றிபெற்றது.

# போராடி வென்றார் ஜோகோவிச்

மெட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியில் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ஜோகோவிச் 6-2, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் டானியல் டிராவரை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் மெட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டிகளில் சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச், ஸ்பெயினின் புதுமுக வீரர் டானியல் கிமரோ டிராவருடன் மோதினார்.

ஆரம்பம் முதல் டானியலை வீழ்த்த ஜோகோவிச் கடுமையாக போராட வேண்டியிருந்தது.

எனினும் கடைசியில் 6:2, 2:6, 6:3 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்று கடைசி 16 சுற்றான காலிறுதிக்கு முந்தைய சுற்றில் நுழைந்துள்ளார்.

மற்றொரு போட்டியில் டொமாஸ் பெர்டிச் 6:4, 6:3 என்ற நேர் செட்களில் கெவின் ஆண்டர்சனைவீழ்த்தினார்.

கனடா வீரர் மிலோஸ் ரவோனிச் 6:4, 6:4 என்ற கணக்கில் ஆர்ஜென்டினாவின் முன்னாள் நட்சத்திரம் டேவிட் நல்பேண்டியனை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**

மாலை 4 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி எதிர் கொல்கத்தா அணியும், இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் டில்லி டேர்டேவில்ஸ் அணியும் மோதுகின்றன.

# அரசின் கண்ணிவெடி...

தேர்தலும் நடந்து முடிந்து விட்டது. ஆனால், இடையில் வரும் மாகாணசபைத் தேர்தல்கள் மாத்திரம் நடத்தப்படவில்லை. இதற்குத் தான் அரசாங்கம் கண்ணிவெடி கதை சொல்கிறது.

கண்ணிவெடி காரணம் என்றால் ஏனைய தேர்தல்களை எப்படி நடத்தினார்கள் என்பது தெரியவில்லை. இரண்டு முல்லைத்தீவு மாவட்ட பிரதேச சபைகளுக்கான உள்ளூராட்சித் தேர்தல்கள் மாத்திரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதேபோல் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதில் எந்த தடையும் இருக்க முடி யாது.

கிழக்கு மாகாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்டவுடன் தாமதிக்காது, குத்துக்கரணம் அடித்து ஓடோடிச் சென்று இந்த அரசாங்கம் அங்கு தேர்தல்களைநடத்தியது. ஆனால் வடக்கு மாகாணம் என்றவுடன் அரசாங்கம் நம்பமுடியாத காரணங்களைக் கண்டு பிடித்துச் சொல்கின்றது.

உண்மையில் வட மாகாண சபைத் தேர்தல் இன்று நடந்தால் அங்கு அரசாங்கம் வெற்றி பெற முடியாது என்பது உட்பட பல்வேறு இரகசிய காரணங்களே அரசாங்கத்தின் வட மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்பு நிலைப்பாட்டிற்கு காரணம் என்பதுவும் எங்களுக்குத் தெரியும். அரசாங்கம் சொல்லும் கண்ணிவெடி கதையை நம்புவதற்கு நாம் தயார் இல்லை.

இவ்வாறு மனோ கணேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-8,11)

# சிங்கக் கொடி என் விருப்பத்திற்குரிய கொடி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமான போது பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு செல்வது தொடர்பாக முதலில் ஆராயப்பட்டது. அந்த விடயம் முடிந்ததும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் சிங்க கொடி பிரச்சினையை எழுப்பினார்.

ஐயா நீங்கள் யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடியை பிடித்தது தமிழினத்திற்கு செய்யும் துரோகம், தமிழின தேசவிரோதம் என காரசாரமாக விடயத்தை தொடங்கினார்.

தம்பி அரியம் நீர் என்ன கதைக்கிறீர் உமக்கு வரலாறு தெரியாது. என்னை சிங்க கொடி தூக்க கூடாது என்று ஒருவராலும் தடுக்கமுடியாது.

தேசியக் கொடியை நான் தெரியாமல் தூக்கவில்லை. நன்றாக தெரிந்து விருப்பத்தோடுதான் தூக்கினேன். என்னிடம் யாரும் அக்கொடியை திணிக்கவில்லை.சிங்க கொடியை நான் தூக்கினது இதுதான் முதற்தடவையல்ல. நான் தேசியக் கொடிக்கு எதிரானவன் அல்ல. நான் பல தடவை தேசியக் கொடியான சிங்கக் கொடியை திருகோணமலையில் ஏற்றியிருக்கிறேன். நான் நேசிக்கும் ஒரே கொடி சிங்க கொடிதான். இந்த கொடியை வடிவமைத்த குழுவில் தமிழர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த குழுவில் ஜி.ஜி.பொன்னம்பலம், நடேசன் போன்றவர்கள் இருந்தார்கள். அதில் நடேசன் மட்டுமே இந்த கொடியை எதிர்த்தார். ஆனால் ஜி.ஜி.பொன்னம்பலம் இந்த கொடியை ஏற்றுக்கொண்டிருந்தார். தமிழரசுக் கட்சி இந்த கொடியை எதிர்க்கவில்லை.

இந்த கொடி என்னுடைய மிக விருப்பத்திற்குரிய கொடி, சிங்கம்தான் பத்திரகாளி அம்மனின் வாகனம், எனவே சிங்க கொடிக்கு நான் எதிரானவன் அல்ல என சம்பந்தன் கூறியபோது மாவை சேனாதிராசா, அரிய நேத்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இலங்கை கொடியை நீங்கள் தூக்கி பிடித்ததால் நாங்கள் தமிழ் மக்கள் முகத்தில் முழிக்க முடியாமல் இருக்கிறது. மானம் மரியாதை போகிற விடயம். இதனால் தமிழ் மக்கள் எங்கள் மீது வெறுப்படைந்திருக்கிறார்கள் என அரியநேத்திரன் தெரிவித்தார்.

நீங்கள் அடிக்கடி சொல்வீர்கள் தமிழ் மக்கள்தான் எங்கள் பலம் என்று. ஆனால் இன்று தமிழ் மக்களின் மனங்களையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ளாது நடந்துள்ளீர்கள் என மாவை சேனாதிராசா கோபத்துடன் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட சுமந்திரன் தேசியக் கொடியை ஏற்றுவதோ, பிடித்திருப்பதோ என்ன பிழை, ஏன் இதை பெரிதாக எடுக்கிறீர்கள் என கேட்டார்.

கொழும்பில் இருக்கும் உங்களுக்கு தெரியாது. இந்த பிரச்சினையின் தாக்கத்தை யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்புக்கும் வந்து பாருங்கள் அப்போது தெரியும் என உறுப்பினர் ஒருவர் சுமந்திரனை பார்த்துக் கூறினார்.

நாங்கள் இளைஞர்களாக பாடசாலை மாணவர்களாக இருந்த போது இந்த கொடி எங்களுக்கு எதிரானது என தமிழரசுக் கட்சி தலைவர்களான நீங்கள் தான் சொல்லித்தந்தீர்கள். பாடசாலை காலத்தில் நான் இந்த கொடியை எரித்திருக்கிறேன். தமிழ் மக்களை இந்த அரசியல்யாப்போ, இந்த கொடியோ ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த கொடியை ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் எங்களுக்கு இன்னும் வரவில்லை. இந்தகொடிக்கு பெரியவரலாறு இருக்கிறது. இந்த கொடியை எரித்ததற்காக சிறை சென்ற இளைஞர்கள் பலர். சுட்டுக்கொல்லப்பட்ட வர்கள் பலர். இவ்வாறு நீங்கள் இலங்கையின் தேசியக் கொடியை தூக்கி பிடிப்பதும் அது தான் என்னுடைய கொடி என்று கூறுவதும் சிங்கள தேசத்திற்கு அடிபணிந்து போவது போல இருக்கிறது என கூட்டமைப்பின் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இப்படி நடந்து கொண்டால் தமிழ் மக்களிடமிருந்து நாங்கள் அந்நியப்பட்டு போய் விடுவோம் என்று அரியநேத்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறிதரன், மாவை சேனாதிராசா ஆகியோர் தெரிவித்தனர்.

தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து செயற்படவில்லை என்றால் தலைவர்கள் என்ற அந்தஸ்திலிருந்து தூக்கி எறியப்பட்டு விடுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறிய போது நான் சரி என்று பட்டதை செய்வேன். எனக்கு ஆலோசனை சொல்லத் தேவையில்லை. நான் செய்யும் காரியங்களை யாரும் கேள்வி கேட்டகூடாது என சம்பந்தன் தெரிவித்தார்.

விவாதம் காரசாரமாய் போய்க்கொண்டிருந்த போது குறுக்கிட்டமாவை சேனாதிராசா சாம் அண்ணன் (சாம் அண்ணன் என்று தான் மாவை சேனாதிராசா சம்பந்தனை அழைப்பார்) இந்த பிரச்சினை தொடர்பாக நான் உங்களோடு தனியாக கதைக்க வேணும் என சொல்லி அந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். (ந-8,11)

## பச்சிலைப்பள்ளியில் மீள்குடியேற்றம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இத்தாவில்(KN/92) மற்றும் வேம்பொடுகேணி (KN/94) கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் தங்கள் சொந்த இடங்களில் குடியமர விரும்புவோர் எதிர்வரும் 15.05.2012 ஆம் திகதி இத்தாவில் முருகன் ஆலயத்திற்கு அருகில் மீள்குடியேற்றத்திற்காக வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மீள்குடியேற்றத்திற்காக வருகை தரும் போது அவர்கள் தற்போது வதியும் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து பதிவு நீக்கப்பட்ட கடிதத்தினையும் எடுத்துவருமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (-ந-)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாநகரசபை உதைப்பந்தாட்ட அணிக்கும் யாழ். மாநகரசபை உதைபந்தாட்ட அணிக்குமிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று காலை 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. (ந-6)

## கணனியில் புலி சந்தேக நபர் கைது

விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு தொடர்பு வைத்திருந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனக்கு சொந்தமான கணினியில் விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பான தகவல்களை சேமித்து வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8-11)

## இன அழிப்பை ...

உலகுக்கு கூறி வட மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பை மேற்கொள்கின்றது என்றும் சுரேஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசு இதற்கு முன்னர் மன்னார் மாவட்டத்துக்கு சிங்களவர் ஒருவரை அரச அதிபராக நியமித்தது. இதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம். எதிர்கால விளைவுகளையும் சுட்டிக் காட்டினோம். ஆனால் அது குறித்து தற்போது மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட பௌத்த ஒன்றியம் என்ற அமைப்பொன்றை நிறுவி அதனூடாக விகாரைகள் சிங்கள குடியேற்றங்கள் போன்ற செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழர் ஒருவர் அரச அதிபராக இருந்தால் இவற்றைச் செய்யமுடியாது என்ற காரணத்தால்தான் அரசு சிங்களவர்களுக்கு நியமனங்களை வழங்குகின்றது.

இந்நிலையில் தற்போது வவுனியா மாவட்டத்துக்கும் சிங்களவர் ஒருவர் அரச அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

இந்த நியமனத்தின் ஊடாக வவுனியா எல்லைப்புற கிராமங்களில் சிங்கள குடியேற்றங்களை அரங்கேற்றி பௌத்த விகாரைகள் அமைத்து வவுனியாவை சிங்கள மயமாக்குவதற்கு அரசு மறைமுகமாக திட்டமிட்டு அதனை செயற்படுத்தி வருகின்றது. அரசின் இந்த நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

முன்னார், வவுனியாவை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் சிங்களவர் ஒருவரை நியமித்து தான் நினைத்ததை அரசு நிறைவேற்றிக் கொள்வதற்கு நிச்சயம் முயலும். ஒருபுறம் வடக்கில் இராணுவத்தைப் பலப்படுத்தும் அரசு மறுபுறத்தில் தமிழர் பூமியில் சிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டி திட்டமிட்ட அடிப்படையில் இன ஒழிப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றது.

அரசின் இந்த நடவடிக்கை தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற எமது நாடாளுமன்றக் குழு கூட்டத்தின் போதும் நாம் கவனம் செலுத்தினோம். தமிழர் விரோதச் செயற்பாடுகளை கட்டவிழ்த்து விடும் இந்த அரசை நம்பி நாம் எப்படி பேச்சுக்களில் ஈடுபட முடியும்? நல்லிணக்கம் என்ற போர்வையில் இவர்கள் இன அழிப்பில் ஈடுபடுகின்றனர். அரசின் இந்த அராஜகம் தொடருமானால் நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்-. (ந-8-11)

## இலங்கை அரசியலின் ...

விரும்பும் போது, தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அங்கு பிரிவினையை ஏற்படுத்தமுயற்சி செய்வதாக பா.ஜ.க நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் குற்றம்சாட்டியிருக்கிறார்.

இலங்கை அரசியலின் கடந்த கால வரலாறு என்ன என்பது தெரியாமலும் எதனால் அங்கு பிரிவினைப் போராட்டம் வெடித்தது என்பதை அறியாமலும் அவர் பேசியிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு சிங்களவரோடு தமிழர்களுக்கு சம உரிமை கேட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாக அறவழியில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தை அடக்கி ஒடுக்க சிங்கள அரசு முயற்சி செய்தது.

இந்த நிலைமையில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட தமிழீழம் அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என தமிழர்கள் 1977 ஆம் ஆண்டு முடிபு செய்தனர்.அதையே அந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் முன் வைத்தனர்.

தமிழர் பகுதியில் தமிழீழ கோரிக்கைக்கு எதிரானவர்கள் மக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டனர். இந்த வரலாற்றை கொஞ்சமும் தெரிந்து கொள்ளாமல் இலங்கையில் இருந்த சில மணி நேரங்களில் யாரோ சிலரைப் பார்த்துப் பேசிவிட்டு முடிபு செய்வது எதிர்க் கட்சித் தலைவர் என்ற பெரும் பொறுப்பை வகிக்கும் சுஷ்மா சுவராஜிற்கு அழகல்ல.

கடந்த போர் முடிந்த பிறகு இராணுவக் கட்டுப்பாட்டில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்திய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைத் தோற்கடிக்க வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்தார்.

ஆனாலும் மக்கள் ஆதரவினால் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் எந்தக் கருத்தையும் அந்த மக்கள் மீது திணிக்க முடியாது. அவ்வாறு கூறுவது அந்த மக்களை அவமானப்படுத்துவதாகும். இப்போதும் ஐ.நா. மேற்பார்வையில் அங்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்படுமானால் அந்த மக்களின் உண்மையான விருப்பம் என்ன என்பது வெளியாகும்.

இந்தக் கோரிக்கையை ராஜபக்ஷவிடம் வலியுறுத்துவதற்கு சுஷ்மா சுவராஜ் தயாரா? என அவருக்கு அறைகூவல் விடுக்கிறேன் என்றார் அவர். (ந-8,11)

## கூட்டமைப்பு பங்கேற் ...

தெரிவுக்குழுவில் வெளிப்படையாகப் பேசுவதற்கு நாம் தயாராக உள்ளோம். இரு தரப்பும் மனம் விட்டுப் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாம் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-8,11)

## ரணிலின் ...

கேட்டறிந்தார்.

மாலையில் மட்டக்களப்பு நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் மற்றுமொரு சந்திப்பொன்றில் அவர் கலந்து கொள்ள விருந்ததாகவும் அவ்விடுதியின் கட்டிடத் தொகுதியிலேயே குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் பாதுகாப்பு உத்தியோகத்தினர்களினால் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டு சிறப்பு அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் பின்னணி பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தயா கமகே தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பு திரும்பினார்.

குண்டு கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-8,11)


"சட்ட மாற்றத்தின் முன் நாம் முந்திச் செல்வோம்"

ஜுன் (30) உடன் ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள் அரசாங்கத்தால் மேலும் இறுக்கமாகின்றன.

எனவே இம் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் எம்முடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்
(இவ்விடயத்தை இணையத்திலும் பார்வையிடலாம்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டட் (PV82703)



இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 221 9016

(C-6584)

கிளைகள்:
115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
இல. 22A, பிராங்பெட் பிளேஸ், பம்பலப்பிட்டி. 0112508443
504, Hampton Street, Melborne, Australia.
0061390437100



வேலை ஆட்கள் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு
1) விற்பனையாளர்
2) சிட்டை எழுதுனர்
3) கணக்காளர்
4) மேற்பார்வையாளர்
5) கணனி அறிவுள்ளவர்கள்
6) தொலைபேசி திருத்துனர் (Software and Hardware)

இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்

அனுபவமுள்ளவர்களுக்கான சம்பளம்: ஆண்களுக்கு 12000/=
பெண்களுக்கு 8000/=

நொக்கியா விற்பனை நிலையம்
இல.09, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0773611282
0212223817

(C-6583)



தென்மராட்சி சாவகச்சேரி நகரில்

☆ஜேர்மன் -டொச் ☆ பிரெஞ்ச்
☆IELTS ☆City&Guilds (A1,B1,B2)
☆சிங்களம்
ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

அனுமதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

Brilliant International Studies
T.P.: 0779265447

(C-6574)


## மரண அறிவித்தல்

### கந்தையா முருகேசு (குலம்)

ஓய்வுபெற்ற களஞ்சியப் பாதுகாவலர் உணவு கட்டுப்பாட்டுத் திணைக்களம்



கோவிற்கடவை துன்னாலை மத்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முருகேசு (10.05.2012) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இலட்சுமிப்பிள்ளையின் மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் தெய்வேந்திரம் (ஜேர்மனி), இராசேந்திரம் (கனடா), நிர்மலா தேவி (ஜேர்மனி), மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி (முத்திரைச்சந்தி, நல்லூர்), சிவபாக்கியம் மற்றும் வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும் செல்வகுமாரி (ஜேர்மனி), சந்திரிகா (பபி-கனடா), பாலச்சந்திரன் (ஜேர்மனி),புஷ்பலதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனகன், அகலியா, ஆசா, அகிலன், பிரணா, பிரவீனா, நிரோசன், மதுராமி, நிசாந்தி, டிலானி, நீரையா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 13.05.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேரொண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவிற்கடவை
துன்னாலை மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-6585)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.